# அருவி ஆறு

பெருக்கு - 03



வெளியீடு

**கலாசார பேரவை**

பிரதேச செயலகம்
வெங்கலச்செட்டிகுளம்

2017/2018

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருவி ஆறு

பெருக்கு - 03

வெளியீடு

கலாசார பேரவையும்
பிரதேச செயலகமும்
வெங்கலசெட்டிகுளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு : அருவி ஆறு

இதழாசிரியர்கள் : மலர்க்குழு

அட்டைப்படம் : ***All in One Printers***

பக்கம் : 119

வெளியீடு : பிரதேச கலாச்சார பேரவையும்
பிரதேச செயலகமும்
வெங்கலச்செட்டிகுளம்

அச்சிட்டோர் : ***All in One Printers*** வவுனியா

முதற் பதிப்பு : 2018 வைகாசி


விலை :

*இந்நூலில் பிரசுரமாகியிருக்கும் ஆக்கங்கள் மீதெழும் விமர்சனக் கருத்துக்களுக்கு அவ் ஆக்கத்தை எழுதியவரே பொறுப்புடையவர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரின் வாழ்த்துச்செய்தி



வெங்கல செட்டிகுளம் பிரதேச செயலகத்தினால் நடாத்தப்படும் வருடாந்த கலை, பண்பாட்டுப் பெருவிழா மற்றும் அருவியாறு மலர்வெளியீடு ஆகியவற்றின் நிமித்தம் வாழ்த்துச்செய்தி வழங்குவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

மக்களுடன் நேரடியான தொடர்புடைய அலுவலகங்களான பிரதேச செயலகங்கள், தமக்கு பணிக்கப்பட்ட கடமைகளுக்கு மேலதிகமாக மக்களுடைய அன்றாட வாழ்வியலுடன் தொடர்புபட்ட கலை, கலாசார விடயங்களிலும் கூடிய கவனம் செலுத்தி, செயற்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரியது.

கிராம மட்டங்களில் இலைமறைகாயாகவிருக்கும் வயது முதிர்ந்த கலைஞர்களை இனங்கண்டு அவர்களுக்கு மாவட்ட மட்டத்திலும், மாகாண மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் விருதுகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டியது பிரதேசமட்ட நிர்வாகத்திற்குரிய பிரதானமான கடமையாகும். இந்தப் பொறுப்புக்களை நிறைவேற்றுவது தொடர்பில் வெங்கலசெட்டிகுளம் பிரதேச செயலாளரும், பிரதேச கலைஞர்களும், உத்தியோகத்தர்களும் இதுவரைகாலம் காட்டிவரும் ஈடுபாட்டிற்காக நன்றி தெரிவிப்பதுடன், இனிவரும் காலங்களிலும் அவர்களுடைய முழுமையான அர்ப்பணிப்பை எதிர்பார்த்து நிற்கின்றேன்.

**திரு.சோமரத்ன விதான பத்திரண**
**அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்**
**மாவட்டச் செயலகம், வவுனியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெங்கலசெட்டிகுளம் பிரதேச செயலாளர் அவர்களின் வாழ்த்துச்செய்தி.



தனித்துவமான எமது பண்பாட்டை கட்டிப்பாதுகாக்கும் ஓர் காவலரனாக எமது கலாசாரம் காணப்படுகின்றது. உலகிலுள்ள மற்றைய மக்களிடமிருந்து எம்மை வேறுபடுத்திக் காட்டுவதுடன் தனித்துவமான இலங்கையர்களாக எம்மை உருவாக்குவது கலாசாரமே. காலம் காலமாக பேணிப்பாதுகாக்கப்பட்டு வரும் எமது பாரம்பரியமே எமக்கென ஒரு தனித்துவத்தைக் கொடுக்கிறது.

பலவிதமாக கவர்ச்சிகளினாலும் செல்வாக்குகளினாலும் அடிக்கடி அடித்துச் செல்லப்படுபவர்கள் சிறுவர்களே. ஆயினும் இவற்றில் அநேகமானவை முக்கியத்துவமற்றவையும் பயனற்றவையுமாகும். ஆனாலும் பிள்ளையொன்று இளம் வயதினராக வளர்கையில் நல்லவற்றையும் கெட்டவற்றையும் வேறுபடுத்திப் பார்ப்பதற்கு கலாசாரமானது வழிகாட்டியாக அமைகிறது. இதனிலும் மேலாக எங்கள் பிள்ளைகளுக்கு நாம் கலாசாரத்தினைப் பரிசாக வழங்கும் போது மாத்திரமே, ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு இது பரிவர்த்தனை செய்யப்படுகின்றது.

சிறந்த கட்டுக் கோப்பான முன்மாதிரியான சமுதாயத்தை உருவாக்குவதற்கு கலாசாரம் இன்றியமையாதது. அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த கலாச்சாரத்தின் பிரதிபலிப்புக்களை வெளிப்படுத்தும் பல்வேறு ஆக்கங்களை தாங்கி இக் கலாசார விழா மலர் வெளிவருவது பாராட்டுக்குரிய விடயம். தம்மிடம் உள்ள திறமைகளை இலைமறை காய்போல வைத்திருக்காது வெளி உலகிற்கு வெளிப்படுத்தி பிறருக்கும் அதன் நன்மைகளை கிடைக்கக்கூடிய வகையில் சிறப்பான ஆக்கங்களை இம்மலருக்கு வழங்கியுள்ளவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

ஆற்றுப்பெருகாக வெளிவரும் இந்நூல் தொடர்ந்தும் பல பரிணாமங்களை எடுத்து, பிரதேச தொன்மைகளைத் தாங்கி வெளிவரவேண்டும் எனவும், எதிர்கால சந்ததியினருக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைய வேண்டும் எனவும் வாழ்த்தி நிற்கின்றேன்.

திரு.K.சிவகரன்,
தலைவர், பிரதேச கலாசாரப் பேரவை,
பிரதேச செயலாளர்,
வெங்கலசெட்டிகுளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செட்டிகுளம் பிரதேசத்தின்
## அருவி ஆறு ஆறாய் ஓடட்டும் !



வவுனியா மாவட்டத்தில் புராதன வரலாற்று அம்சங்கள், இயற்கை வனங்கள், குளங்கள் நிறைந்த பிரதேசமாக விளங்குவது வெங்கலசெட்டிகுளப் பிரதேசமாகும். ஈழநாட்டிலுள்ள புராதன ஈச்சரங்களில் ஒன்றாக விளங்கும் சந்திரசேகரீச்சரம் இப்பிரதேசத்திலேயே காணப்படுவது இதன் சிறப்பம்சமாகும். இத்தகைய சிறப்புக்களையுடைய இப்பிரதேச கலாசாரப் பேரவை வெளியிடும் அருவிஆறு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது இனத்தின் வரலாறு, தொல்லியல், கலை, பண்பாட்டம்சங்களை அழியவிடாது பாதுகாத்து, அடுத்த சந்ததியினருக்கு கையளிப்பது அவசியமாகும். அந்தவகையில் இப்பிரதேச கலைஞர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள், படைப்பாளிகளிடமிருந்து ஆக்கங்களைப் பெற்று, பிரதேச மலர் வெளியிடுகின்ற முயற்சிக்கு வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அனுசரணை வழங்கி ஊக்குவித்து வருகின்றமை சிறப்புக்குரியது .

இம்மலர் சிறப்பான முறையில் வெளிவருவதற்காக அயராது செயற்பட்டுவரும் பிரதேச செயலாளர், கலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் மலர்க்குழுவினர் அனைவரையும் பாராட்டி நிற்பதுடன், அருவி ஆறு வரலாற்றில் தடம்பதிப்பதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன் .

திருமதி.அபிராமி பாலமுரளி
உதவிப்பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்க்குழு தலைவரின் அகத்திலிருந்து ......



வடக்கு மாகாண கலை பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றின் அனுசரனையோடு வெங்கலசெட்டிகுளம் பிரதேச செயலகமும் பிரதேச கலாசார பேரவையும் இணைந்து வெளியீடு செய்யும் பெருநதியாம் அருவியாற்றின் மூன்றாம் கிளையாக பெருக்கெடுக்கும் "அருவியாறு பெருக்கு – 03" எனும் நூலுக்கான வாழ்த்துச்செய்தியினை வழங்குவதையிட்டு மிக்க மகிழ்வும் பெருமிதமும் கொள்கின்றேன்

வரலாறுகள் பல படைத்த வன்னி மண்ணின் வந்தோரை வாழவைக்கும் வவுனியா நகரின் கண்ணாய் விளங்கும் வெங்கலசெட்டிகுளம் பிரதேசத்தின் தொன்மைகளையும் கலை கலாசார விழுமியங்களையும் தன்னகத்தே தாங்கிக்கொண்டோடும் அருவியாறு எனும் நதி இன்னும் பெருக்கெடுக்க இன்முகமாய் வாழ்த்துகின்றேன்.

இலை மறை காயாக ஒழிந்து இருக்கும் எம் பிரதேச கலைஞர்களின் படைப்புக்களை வெளிக்கொணரும் ஒரே நூலாக இந்த நூல் வெளிவருகின்றது. எனவே இம் முயற்சியின் பயன் தனிப்பட்ட ஒருவரையோ அல்லது ஒரு குழுவையோ சென்றடையாது. மாறாக இப்பிரதேச இலக்கியப் படைப்பாளிகள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், புத்திஜீவிகள் அனைவரையும் சென்றடையும். எம் பிரதேச மண்வாசனையையும், தொன்மைகளையும், கலை கலாசார விழுமியங்களையும் அழிந்திடாமல் காக்கவும், இதனை ஒரு சான்றாக அடுத்து வரும் சந்ததியினர் படித்து பயன் பெற்று தொடரவும், இந் நூல் பெரிதும் உறுதுணையாக அமையும் என்பதில் எவ்வகையான சந்தேகமும் இல்லை. தொடர்ந்து இவ் அருவியாறு வற்றாமலும, அதன் வேகமும், அழகும், செழுமையும் குறையாமலும், அழகிய, புதுமையான, வெகுமதியான, இலக்கிய போக்கான ஆக்கங்களை தன்னகத்தே கொண்டு வெளிவர பிரதேசத்தில் உள்ள அனைத்து படைப்பாளிகளும் முன் வந்து முயற்சிக்க வேண்டும் என்பது காலத்தின் கட்டாயமாகும்.

அத்துடன் இந்நூலுக்கான ஆக்கங்களை தந்துதவிய அனைவருக்கும், அனைத்திற்கும் மேலாக இந்நூல் வெளிவருவதற்கு நிதியுதவி வழங்கிய நல் உள்ளங்களுக்கும், இந்நூல் முற்றுப்பெற அயராது பாடுபட்ட கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர், மலர்க்குழு உறுப்பினர்கள், மற்றும் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றியினையும், நல் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் அகம் மகிழ்கின்றேன்.

" அருவி ஆறு தொடர்ந்து பாயும்............"

திரு.சி.சண்முகானந்தன்,<br>
மலர்க்குழு தலைவர்,<br>
உதவி திட்டமிடல் பணிப்பாளர்,<br>
வெங்கலச்செட்டிகுளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெங்கல செட்டிகுளப்பிரதேச கீதம்

வாழ்க வாழ்க வாழ்கவே வாழ்கவே
வெங்கலசெட்டிகுளப் பிரதேசம் வாழ்கவே
வழர்க தமிழ்கலை
வழர்க கல்வி வாழ்க நெறியே

(வாழ்க....)

குளம் நிறைந்த வன்னி மண்ணில்
குறையாச் செல்வ பெருநிலம்
வளம் நிறைந்த வவுனியா
மாவட்டத்து உயர் பிரதேசம்

(வாழ்க....)

நெல் வயல் உழுந்து தோட்டம்
நிறைந்த கனிமரங்களோடு
பல்வகை மரங்கள் சூழ்ந்த
பழைமை மிக்க விளை நிலம்

(வாழ்க....)

அருவியாறு பெருகி ஓடும்
அயரா உழைப்பில் மனம் நிறையும்
பிதிர் கடன்கள் ஆற்றும் கல்லாறு
பெருகி ஓடி வளரும் பெருக்கும்

(வாழ்க....)

மருவி வனத்துறையும் பழைய
வெளவாலை சிவன் கோயில்
பெரியகட்டு அந்தோனியார்
பெருங்கருனை இஸ்லாத்தோ டொன்றாய்

(வாழ்க....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர் குழு

1. சின்னத்தம்பி சண்முகநாதன் (தலைவர் மலர்க்குழு)
2. சுவாமிநாதன் ஞானேஸ்வரன்
3. கி.சற்சுருவேணு
4. சிவ.கஜேந்திரகுமார்
5. கிருஸ்ரி குணராசா
6. **D**.கேதீஸ்வரி
7. ம.மதுமிதா
8. ர.பிரபாசினி
9. பி.விமலவேணி
10. ச.சாஜிதா
11. ச.சபேசன்
12. தே.தேவசங்கர்
13. ந.பிறேமசிறி
14. சி.சர்மிலன்
15. பா.சஞ்சுதா
16. **T.S**.சாஜித்
17. **M.S.M**.தஸ்கீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்

பிரதேச செயலகம், வெங்கலசெட்டிகுளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருவிஆறு மலர்க்குழு



## பிரதேச கலாசாரப் பேரவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாகக்கிளை உத்தியோகத்தர்கள்



# கிராம அலுவலர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திட்டமிடல் கிளை உத்தியோகத்தர்கள்



## காணிக்கிளை உத்தியோகத்தர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணக்குக் கிளை உத்தியோகத்தர்கள்



## சமுர்த்திக் கிளை உத்தியோகத்தர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலதிக மாவட்ட பதிவாளர் கிளை உத்தியோகத்தர்கள்



## பிரதேச செயலக கள உத்தியோகத்தர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணா செல்லத்துரை
இல: 68, வைரவர்கோவில் வீதி.
வைரவபுளியங்குளம்,
வவுனியா .
024-2220502, 077-3148815.

## "செட்டிகுளம்" : – புராதனம்பற்றிய ஒரு வரலாற்றுத் தேடல் –

இலங்கையின் வடபுலத்தில் 5000 வருடங்களுக்கு முன்பிருந்து வாழ்ந்த தமிழர்களின் தொன்மைக்கு அடங்காப்பற்று - வன்னி பெருநிலப்பரப்பு பிரதேசத்தின் வரலாறும் தொல்லியல் சின்னங்களும் சான்றுகளாகும். புராணங்களும், வட இந்திய காவியங்களான இராமாயணம், மகாபாரதம் மற்றும் தென்னிந்திய காவியமான சிலப்பதிகாரம் போன்றவற்றோடு பெருநிலப்பரப்பின் புராதன தொல்லியல் சின்னங்களும், வரலாறும், நேரடித் தொடர்புள்ளவையாகவும், அநேக இடங்களின் பெயர்கள் அவற்றோடு சம்பந்தப்பட்டவையாகவும், காவியங்களின் தொடர்ச்சியாகவும் இருக்கின்ற காரணத்தினால் காவியங்களுள் உள்ளுடனாக ஒழிந்திருக்கும் வரலாறுகளை ஒப்பு நோக்க வேண்டிய தேவை உள்ளது.

இந்தக் காவியங்களோடு தொடர்புடையதாக செட்டிகுளம் வரலாறும் இருக்கின்றது. இதுவரை எழுதப்பட்ட வரலாற்றுத் தொகுப்புக்களில் செட்டிகுளத்தின் புராதனம் முறையாக வெளிவரவில்லை. யாழ்ப்பாண வரலாற்றோடு பெருநிலப்பரப்பின் வரலாற்றுத் தொகுப்புக்களும் கலந்திருப்பதினால் அவற்றை பிரித்தெடுத்து செட்டிகுளத்தின் தொன்மையை வெளிப்படுத்துவதே இந்தக் கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

வடபுலத்தில் அடங்காப்பற்று வன்னி பெருநிலப்பரப்பில் உள்ள பிரதேசங்களின் தொன்மையையும் தமிழர்களுடைய வரலாற்றையும், செல்லரித்துப்போன ஏட்டுப்பிரதிகளில் இருந்து திரு. சி.பிறிற்றோ அவர்கள் கி.பி.1879ல் மொழிபெயர்த்த "யாழ்ப்பாண வைபவமாலை" என்ற ஆங்கில நூலையும், 1895ல் ஜே.பி லூயிஸ் அவர்கள் ஆங்கிலத்தில் வெளியிட்ட வன்னிக் கைநூலையும், மற்றும் காரையூர்.மு.க.சிவப்பிரகாசம் எழுதி வெளியிட்ட "விஷ்ணுபுத்திர வெடியரசன் வரலாறு" என்ற நூலையும், செ.இராசநாயகம் முதலியார் எழுதிய புராதன யாழ்ப்பாணம் என்ற ஆங்கில நூலையும், இராமாயணம, மகாபாரதம், சிலப்பதிகாரம் ஆகியவற்றையும், இலங்கையில் காலக்கணிப்புகள் எவ்வாறு கணிக்கப்பட்டன என்பதுபற்றியும் ஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகின்றது.

கா்லக்கணிப்புகள் : இலங்கைத் தமிழர்களுடைய காலக்கணிப்பின்படி நான்கு யுகங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. இந்தக் காலக்கணிப்புகளை வைத்து வரலாறுகள் எழுதப்பட்டுள்ளன. பெருநிலப்பரப்பு பிரதேச வரலாறுகளின் தொன்மையைக் கூறும் நூல்களில் யாழ்ப்பாண வைபவமாலையும் ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.சி.பிறிற்றோ அவர்கள் கி.பி.1879ல் யாழ்ப்பாண வைபவமாலையை மொழிபெயர்த்தபோது அதில் அநுபந்தமாக "தமிழ் நாட்காட்டி" என்ற பகுதியில் இலங்கைத் தமிழர்களின் காலக்கணிப்பான பஞ்சாங்கம் பற்றிய விரிவாக்கத்தை எழுதியுள்ளார்.

"நாலாவது பிரிவான கலியுகம் "வறுமைக் காலமாகும்". இது நாலு லட்சத்து 32 ஆயிரம் வருடங்களை உள்ளடக்கியது. நாங்கள் தற்போது கலியுகம் 4979 ஆண்டின் முடிவில் இருக்கிறோம். இது ஆங்கில வருடத்தின்படி கி.பி.1878 ஏப்ரல் மாதம் 12ந்திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 01.45 ஆகும்".

The fourth Kali yuga, or the age of poverty, consists 4,32000 years. We are at present living in the Kali yuga, of which the year 4979, ended on Friday the 12th of April 1878, A.D. at 1 hour an 45 minutes A.M . (The Tamil Calendar. Yalpana Vaipavamalai by .Brito .ixxxix )

இதன்படி கி.மு. 3100ம் ஆண்டுகளில் கலியுகம் ஆரம்பித்துள்ளது. கலியுகத்தின் ஆரம்பத்தில் இராவண மகாராசாவின் ஆட்சிக்காலம் ஆரம்பிக்கின்றது. இந்தக் கணக்கின்கடி கி.மு. 3084 ஆண்டுகளில் இராவண மகாராசாவின் ஆட்சி ஆரம்பித்தி ருப்பதாக 1926களில் செ.இராசநாயகம் முதலியார் எழுதிய "புராதன யாழ்ப்பாணம்" (Ancient Jaffna) ஆங்கில வரலாற்று நூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழர்களின் காலக்கணிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளமை தமிழ் பஞ்சாங்கங்கள் மூலமும் உறுதி செய்யப்பட்டுள்ளன.

இராவண மகாராசவினுடைய வரலாறு சி. பிறிற்றோ அவர்கள் எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"கலியுக ஆரம்பத்தில் இராவணன் இலங்கையின் அரசனாக இருந்தார்". (Yalpana –Charithiram , by C.Brito .xxx).

"In the begining of the Kali yuga , Ravana was king of Ceylon". (Yalpana –Charithiram , by C.Brito P.xxx).

*இதன்படி ஆங்கில வருடம் கி.பி.2018 (இந்த வருடம்) கலியுகம் 5119 ம் ஆண்டு எனக் கணிப்பிடலாம்.

யாழ்ப்பாணச் சரித்திரம் : யாழ்ப்பாண வைபமாலை நூலில் பல விபரங்கள் அனுபந்தமாக சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு பிரிவு "யாழ்ப்பாணச் சரித்திரம்" என்பதாகும். ஆனால் யாழ்ப்பாணச் சரித்திரம் என்ற வரலாற்றுப் பகுதியில் குறிக்கப்பட்டுள்ள காலக் கணிப்புகள் தவறாக எழுதப்பட்டுள்ள காரணத்தினால் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன என்பதை அதனை மொழிபெயர்த்த ஆசிரியர் பிறிற்றோ அவர்கள் தனது முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். அத்தோடு இந்த வரலாறுகளை ஆசிரியர் சுருக்கியும் எழுதியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணச் சரித்திரத்தில் காவியங்களில் குறிப்பிடப்படும் சம்பவங்களுக்கேற்ப, அடங்காப்பற்று வன்னிப் பிரதேசத்திற்கான வரலாற்றுக் காலங்கள் ஒழுங்குபடுத்தப்படுகிறது. அதற்கு ஆதாரமாக பிறிற்றோ ஆங்கிலத்தில் எழுதிய வரலாறுகளும் அதற்கான மொழிபெயர்ப்பும் தரப்படுகின்றன. வடஇந்திய காவியங்களான இராமாயணம் நேரடியாகவும், மகாபாரதம் உபகதைகள் மூலமும், தென்னிந்திய காவியமான சிலப்பதிகாரம் நேரடியாகவும், இலங்கைபற்றிய குறிப்புகளைக் கூறுகின்றன.

இதனால் அடங்காப்பற்று – பிரதேச வரலாற்றை இராவணயுகம் (இராமாயண காலம்), மகாபாரத காலம், தென்னிந்திய காவியமான சிலப்பதிகார காலம் எனப் பிரித்து, அவற்றோடு தொடர்புள்ள வரலாறுகள் தொகுக்கப்படுகின்றன. இந்தக் காவியங்களுக்கும் எமது பிரதேச இடங்களின் பெயர்கள், வரலாறு, ஆகியவற்றிற்கும் நெருங்கிய தொடர்புகள் இருக்கின்றன. அவற்றோடு சம்பந்தப்பட்ட புராதன தொல்லியல் சின்னங்களும் நிறையவே காணப்படுகின்றன.

இராவண யுகம் : வடஇந்திய சக்கரவர்த்தியான தசரதன் இலங்கையை ஆக்கிரமித்த வரலாற்றையே இர்ாமயாணம் கூறுகின்றது. இராவண யுகத்தோடு சம்பந்தப்பட்டதாக அடங்காப்பற்று - வன்னிப் பிரதேசத்தின் மேற்குக் கரையில் மாதோட்டம் பிரதேசம் இருந்துள்ளது. இங்கு இராவண மகாராசாவின் இலங்காபுரம் இராஜதானி அமைக்கப்பட்டிருந்தது. இராவண - இராம யுத்தம் முடிவடைந்த பின்னர் அவரது தம்பி விபீ'ணனுடைய ஆட்சி இலங்காபுரத்தில் இடம்பெற்றது. இராவண மகாராசாவுக்கு ஆதரவாக இருந்த இயக்கர் மற்றும் நாகர் குலத்தவர்கள் இலங்காபுரத்திலிருந்து இடம்பெயர்ந்து பெருநிலப்பரப்புப் பிரதேசத்தின் (அடங்காப்பற்று) பல பகுதிகளில் குடியேறியிருந்தனர்.

“மன்னார் என்ற பெயர் ஆடையை மடித்து செருகுவதையே குறிக்கிறது. “மன்னுக்கிறது” என்ற வினைச் சொல்லே இதற்கு காரணமாக இருந்திருக்கிறது. இலங்கை நிலப்பரப்பிலிருந்து இராமன் கடல்கடந்து சென்றபோது அவன் மீது கொண்ட பேராவல் காரணமாக பெண்கள் தாம் கட்டியிருந்த துணிகளை தூக்கிச் செருகிக் கட்டிக் கொண்டு நீரில் இறங்கிச் சென்ற காட்சியையே இது குறிக்கிறது” என்று யாழ்ப்பாணச் சரித்திரம் பகுதியில் விளக்கம் தரப்பட்டுள்ளது.

Mannar took its name from the verb “mannukkirathu to tuck up one’s clothes, from the circumstances that the women of the place tucked up their clothes and got into the water in their eagerness to follow Rama when he crossed over the main land of Ceylon. (Yalpana –Charithiram, by C.Brito P.xxxii).

இதன் மூலம் தீவகத்திற்கு “மன்னார்” என்ற பெயர் வருவதற்கு முன்னர், மற்றுமொரு பெயர் இருந்திருக்கிறது என்பது தெளிவாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாபாரத காலம் : வடஇந்தியாவில் இரண்டு இராஜதானிகளுக் கிடையில் இடம்பெற்ற பெரும் யுத்தம் ஒன்றை மகாபாரதம் குறிப்பிடுகின்றது. மகாபாரத யுத்தம் முடிவடைந்த பின்னர் அருச்சுனன் இலங்கைக்கு வந்து இங்கிருந்த அல்லி ராணியைத் திருமணம் செய்து கொண்டதாக உபகதையொன்று உள்ளது. பாண்டி நாட்டைச் சேர்ந்த அல்லிராணி இலங்கையின் மேற்குக் கரையில் முத்துக்குளிக்கும் கடற்பிராந்தியத்தை தனது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருந்தார்.

"பாண்டி இராசனின் மகள் அல்லிராணி முத்துக்குளிப்பதற்காக பரவர் குலத்தவரை பணியில் அமர்த்தியிருந்தார். அல்லிராணிக்காக முத்துக்குளிக்க வந்த பரவர் குழுவினருடைய கப்பலில் "வீர-ராசன்" என்ற செட்டியார் ஒருவர் பெரும் திரவி யங்களுடன் வந்திருந்தார். கடலில் ஏற்பட்ட அமுக்கம் காரணமாக கப்பல் இலங்கைக் கரையில் ஒதுங்கியுள்ளது. (Yalpanach-charithiram by Brito p.xxxii)

Alliarasani the daughter of the king of Pandi had a number of Paravar in her employ to fish for pearls. Some of these Paravar, while carrying in their vessels Vira Rasan, a chetty, and his wealth were driven on the shores of Ceylon by stress of weather. (Yalp anach-charithiram by Brito p.xxxii).

சிலப்பதிகாரக் காலம் : கண்ணகி வரலாற்றைக் கூறுவது சிலபபதிகாரமாகும். மதுரையில் மா-நாகர் தனது மகளான கண்ணகியை, மாசாத்தனுடைய மகனான கோவலனுக்கு திருமணம் செய்ய நடவடிக்கைகளை எடுத்திருந்தார். மா-நாகர் கண்ணகியின் திருமணத்திற்கு நாகரத்தினம் வேண்டுமென சோழ மன்னனிடம் எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்தார். சோழ மன்னன் குருகுலத் தளபதியுடன் படைப்பிரிவு ஒன்றை நாகரத்தினத்தை எடுத்துவர இலங்கைக்கு அனுப்பினார். அக்காலத்தில் கடற்கொள்ளைகளில் ஈடுபட்டிருந்த முக்குவர், துலுக்கர் ஆகியோரை குருகுலத் தளபதி தோற்கடித்தார். அவர்கள் முதலில் மட்டக்களப்புக்குச் சென்று "இலந்தைக்காடு" என்ற இடத்தில் குடியேறினர். அதேவேளை மற்றுமொரு பிரிவினர் விடத்தல்தீவைச் சென்றடைந்தனர்.

....At that time Kannakai the daughter of Manakar of Madurai was about to given in marriage to Kovalan the son of Masaththa and her Father wrote to the Cholan for nagarathinams (i.e. Snakes Gems). The Cholan dispatched an expedition under a Kurukula captain to go to Ceylon and procure the gems. This Captain defeated the Mukkuvar and the Thulukkar, of whom the firstwent to Batticaloa and formed a settlement at Ilanthaikkadu, while the other took refuge at Vidattaltivu. (Yalpanach-charithiram by Brito p.xxxii).




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செட்டிகுளமும் வரலாறும் :

இராவணயுகத்தில் இலங்கையில் வடபுலத்தின் மேற்குக் கரையில் மாந்தை, பாலாவி திருக்கேதீச்சரம் உள்ளடக்கப்பட்ட மா-தோட்டம் பிரிவில் இலங்காபுரம் இராஜதானி இருந்தது. இலங்காபுரம் என்பது இராஜதானியையும் இலங்காபுரி என்பது முழு இலங்கையையும் குறிப்பது தெளிவாகிறது. இலங்காபுரத்தை சுற்றி இருந்த பகுதிகள் பிற்காலத்தில் மூலைகளாகப் பிரிக்கப்பட்டன. இலங்காபுரத்திற்கு அடுத்து பாணன்கமம் (பனங்காமம்), கிழக்குமூலை மற்றும் மேற்கு மூலை ஆகிய புராதன பிரிவுகள் இருந்தன. மேற்கு மூலைக்கு தெற்கே செட்டிகுளம் பிரிவு அமைந்துள்ளது.

பரந்த நிலப்பரப்பை உள்ளடக்கிய செட்டிகுளம் பிரதேசம் ஆங்கிலேயருடைய ஆட்சிக்காலத்தில் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தமை வரைபடத்தின் மூலம் தெளிவாகிறது.




செட்டிகுளம் வரைபடம்

அடங்காப்பற்று - வன்னிப் பிரதேசத்தில் தனிக் குளத்தின் பெயரைக் கொண்டு ஒரு பிரிவு பிரிக்கப்பட்டுள்ளமை அதன் புராதனத்தையும் முக்கியத்துவத்தையும் எடுத்துக் காட்டுகிறது. செட்டிகுளம் என்ற பெயர் வருவதற்குரிய விளக்கங்களும் அதனோடு சம்பந்தப்பட்டவர்களுடைய பெயர்களும் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளன. "வீர-ராசன் செட்டியார்" எனவும் "வீர-நாராயணச் செட்டியார்" எனவும் "வீர நாராயணன்" எனவும் குறிக்கப்பட்டுள்ளது. இந்தப் பெயர்களில் உள்ள குழப்பங்கள், மற்றும் அவர்கள் வாழ்ந்த காலங்கள் குழப்பியுள்ளதினால் செட்டிகுளம் என்ற பெயரிலுள்ள பிரசேத்தின் புராதனம் குழப்பம் நிறைந்ததாக அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீர – ராசன் செட்டியார் : பாண்டி நாட்டு அரசனுடைய மகள் அல்லியரசாணிக்காக முத்துக்குளிக்க வந்த பரவ குலத்தவர்களுடன் செட்டிகுலத்தைச் சேர்ந்த "வீர-ராசன்" என்பவர் தமது பொக்கிசங்களுடன் வந்திருந்தார். கடலில் ஏற்பட்ட தாழமுக்கம் மற்றும் அலைகள் காரணமாக கப்பல் இலங்கைக் கரையில் ஒதுங்கியது. "கரைக்கு வந்தவர்கள் சிலாபம் கதிரமலை, சிலாபத்துறை ஆகிய இடங்களில் குடியிருப்புக்களை செட்டியாரின் அனுசரணையுடன் அமைத்தனர். பின்னர் வீர-ராசன் செட்டியார் அங்கிருந்து புறப்பட்டு அடங்காப்பற்றுப் பிரதேசத்தில், செட்டிகுளம் வந்தடைந்தார். அங்கு "வாலை" என்ற குளத்தை ஆரம்பித்து வைத்தார். சந்திரசேகரன் கோவிலையும் கட்டினார். இது கலியுகம் 3348ல் இடம்பெற்ற சம்பவமாகும். அதற்குப் பின்னரே இந்தப் பிரதேசம் செட்டிகுளம் என்ற பெயரைப் பெற்றது. (Yalpanach-charithiram by Brito p.xxxii).

They landed and built cities at Kathiramalai, Silavaththurai and Chilaw under the auspices of the chetty. Afterwards the Chetty moved on to Cettikulam in the Adankkappattu, opened the tank Valai and built the temple of Santhirasekaran. This happened in the year of the Kali yuga 3348. It was after this the place was called Chetty-kulam.......(Yalpanach-charithiram by Brito p.xxxii).

கரையொதுங்கிய வீர-ராசன் செட்டியார் கதிரமலை, சிலாவத்துறை, சிலாபம் போன்ற நகரங்களை அமைத்த பின்னர் அடங்காப்பற்றிலுள்ள செட்டிகுளம் வந்தடைந்தார். "வாலை" என்ற புராதன குளத்தை திருத்தியதோடு, சந்திரசேகரர் கோவிலையும் கட்டியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது..

செட்டியார் "வாலை" எனும் பெயருடைய குளத்தை திருத்திக் கட்டியதால் அதற்கு "செட்டிகுளம்" என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது. புராதன குளங்களைத் திருத்தியவர்களுடைய பெயர்களை அதே குளங்களுக்கு வைப்பது பெருநிலப்பரப்பின் பாரம்பரியமாக இருந்துள்ளது. இதன்மூலம் செட்டிகுளத்தின் புராதன பெயர் "வாலை" என்பது தெளிவாகிறது. செட்டியார் திருத்திய பின்னர் இந்தக் குளம் செட்டிகுளம் Chetty-kulam என்று அழைக்கப்பட்டது.

இதற்குப் பின்னர் கலியுகம் 3390ம் களில் பறங்கியர்கள் செட்டிகுளத்தை தமது நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்தனர் என்று குறிப்பிடப்பகிறது. இது தவறான காலக் கணிப்பு என ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். (Brito -1879 )

வீர-நாராயணன்: வீர-நாராயணன் என்பவர்பற்றி நெடுந்தீவு பிரதேசத்தோடு சம்பந்தப்பட்ட "விஷ்ணுபுத்திரன் வெடியரசன் வரலாறு" என்ற நூலில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவும் சிலப்பதிகார வரலாற்றோடு சம்மபந்தப்பட்டதாக அமைந்துள்ளது. "வெடியரசன்" என்ற பெயருக்கான அர்த்தம் படகுகள் அல்லது கப்பல் படைகளைக் கொண்ட அரசன் என்பதாகும். இவர் விஷ்ணுவை முழுமுதற்கடவுளாக வணங்கிய காரணத்தால் விஷ்ணுபுத்திரன் வெடியரசன் என அழைக்கப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது. இவரது ஆதிக்கம் வடபுல தீவகப் பகுதிகளில் இருந்தமை தெரிய வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடியரசனின் கீழ் வீர-நாராயணன் கடமையாற்றியவராவார். இவரும் விஷ்ணுவை வழிபடுபவர். இவர் மாந்தை நகர் உட்பட அல்லிராணியின் இராச்சியத்தில் முத்துக்குளிக்க வரும் ஊடுருவல்களை தடுப்பதற்கு தனது ஆதிக்கத்தையும் படைபலங்களையும் பயன்படுத்தி வந்தார். இதே நேரம் தென்னிந்தியாவில் கண்ணகி காற்சிலம்புக்கான நாகரத்தினத்தைப் பெற்றுக் கொள்வதற்கு மீகாமன், நாகதீபம் வந்தான். நாகதீபத்தில் வெடியரசனை தோற்கடித்தான். அப்போது அங்கு வந்த வீர நாராயணன், மீகாமனுடன் நடத்திய போரில் உயிரிழந்ததாக குறிப்பிடப்படுகி றது.

விஷ்ணுபுத்திரன் வெடியரசன் என்ற நூலின் பாடல்களில் வீர நாரணன் என்று குறிப்பிடப்படுகிறது ஆனால் பொழிப்புரையில் வீர நாராயணன் என்று குறிப்பிடப்படுவது முக்கிய அம்சமாகும். இந்த வரலாற்றில் செட்டிகுளம் பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் அல்லிராணியின் முத்துக் குளிக்கும் பிரதேசத்திற்கு பாதுகாப்பு வழங்கியமை குறிக்கப்பட்டுள்ளது.

*பின் வந்த தகவல்களில் வீர நாராயணச் செட்டி என்பவர் சிலப்பதிகாரத்தில் வரும் பாண்டிய மன்னனுடைய மனைவி கோப்பெருந்தேவிக்காகத்தான் முத்துக் குளிக்க வந்தவர் என்று கூறப்படுவது குழப்பத்தை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

வரலற்றுச்சிதைவு :1879ல் பிறிற்றோ மொழிபெயர்த்த யாழ்ப்பாண வைபவ மாலையில் யாழ்ப்பாணச் சரித்திரத்தில் இலங்கையின் மேற்குக் கரைக்கு வந்தவர் "வீர-ராசன் செட்டி" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

1895ல் ஜே.பி லூயிஸ் எழுதிய வன்னிக் கைநூலில் "வீர நாராயண செட்டியார்" என்று எழுதியுள்ளமை சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. அந்நியர்களுடைய ஆட்சிக்கு முன்னர் முத்துக் குளிக்கும் பரவ குலத்தவருடன், மதுரையில் இருந்து வந்த செட்டியார் செட்டிகுளம் பகுதியில் வந்து குடியேறியதற்கான வரலாற்றை 1895ல் ஜே.பி.லூயிஸ் பின்வருமாறு தந்துள்ளார்.

"அடங்காப்பற்றுக்கு வந்த வீர - நாராயணச் செட்டி என்பவர் செட்டிகுளத்தில் குடியேறினார். அவர் அங்கு வௌவாலைக் கேணியை கட்டினார் அல்லது தோண்டினார், சந்திரசேகரர் ஆலயத்தையும் அமைத்தார். அறுபது யானைகளில் கொண்டு வந்த பொக்கிசங்களை ஆலயத்திற்கு அருகில் இருந்த கிணறு ஒன்றில் போட்டு, சடாமுனி என்றழைக்கப்பட்ட முனியையும் காவலுக்கு வைத்தார்........ அதற்குப் பின்னர் அவர் காலமாகி விட்டார். (JPLM.p.12 -1895)

This is the account given of it: "Viranarayana Cheddi came to Adankappattu, settled in Cheddikulam, built or dug the Kerni called Vavaalai , and erected a temple to Santrasekaran . He buried in well near the temple treasure which it took sixty elephants to carry, and left a devil Sadamuni to which it .......subsequently Viranarayana Cheddi died. (JPLM.p.12 -1895)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வௌவாலைக்கேணி : ஜே.பி.லூயிஸ் (1895) அவர்கள் கேணிபற்றி தகவல் தருகையில் பின்வருமாறு கூறியுள்ளார். "இன்று வரை இது வௌவாலைக் கேணி என்று அழைக்கப்படுகின்றது. இது இயற்கையாக அமைந்துள்ள குடாவே ஒழிய குளம் என்று கூற முடியாது. வௌவால் இறக்கைகளை விரித்து பறப்பது போன்ற வடிவில் அமைந்திருப்பதனால் வௌவாலை என்ற பெயரைப் பெற்றிருக்கின்றது.

திரு. பிறிற்றோ அவர்கள் (1879) இதனை "வாலை" என்று தவறாக மொழி பெயர்த்துள்ளார் உண்மையில் வௌவாலை என்பதே சரியான-தாகும். இந்த தகவலை விசாரித்தறிந்து தந்த திரு. கே. தில்லை-லயம்பலம் அவர்களுக்கு நன்றிக் கடனுடையேன். இவர் முல்லைத்தீவுக் கச்சேரியில் மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றியவர். (JPLM.p.12)

This kerni still bears the name of Vavaalai. It is more like a natural lake than a tank of any sort: It is called Vavvalạí because it resembles a bat's wing in shape. Mr.Brito wrongly gives the names as Valai. It is Vavvalai in the original. I am indebted to Mr. K.Thil-layampalam, formerly Mullaitivu Kachcheri Interpreter for the dis-covery of this reference. (JPLM.p.12)

*யாழ்ப்பாண வைபவமாலை வரலாற்றுத் தொகுப்பிலிருந்து செட்டிகுளம் பிரதேசம் அடங்காப்பற்று என்ற பிரிவிற்குள் இருந்தமையும் வீர-ராசன் செட்டியார் "வாலை" என்ற குளத்தை திருத்திக் கட்டியதால் அதற்கு "செட்டிகுளம்" என்ற பெயர் வைக்கப்பட்டுள்ளமையும் தெளிவாகின்றன.

ஜே.பி.லூயிஸ் அவர்கள் 1895ல் வன்னிக் கைநூலை வெளியிட்டபோது 1894களில் இந்தப் பிரதேசத்தில் ஆய்வு செய்து தகவல்களை சேகரி-த்துக் கொடுத்த திரு.கே.சிற்றம்பலம் அவர்கள் வௌவால் பறப்பது போன்ற தோற்றமுடைய குடா "வௌவாலைக் கேணி" என்று அழைக்க-ப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற பெயருக்கு மற்றுமொரு உதாரணத்தைக் கூறலாம். ஒட்டு-சுட்டான் கற்சிலைமடுப் பிரதேசத்தில் உள்ள நீர்நிலை கருடன் சிறகை விரிப்பது போன்ற வடிவில் இருப்பதினால் அதற்கு கருடமடுக்கேணி என்ற பெயர் இருந்ததாக தகவல் சேகரிப்பாளர் கொடுத்திருப்பது குறி-ப்பிடத்தக்கது. இப்படி பல பெயர்கள் இந்தப் பிரதேசத்தில் மாற்ற-ப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணச் சரித்திரத்தை 1879ல் மொழி பெயர்த்த சி.பிறிற்றோ அவர்கள். செட்டிகுளத்தின் பெயரை பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"செட்டிகுளம்" Chetty-kulam" என்று தெளிவாகக் குறிப்பிட்டிருந்த பெயரும் விடயமும் தகவல்களும், 1895ல் ஜே.பிலூயிஸ் அவர்கள் எழுதிய ஆங்கில நூலில் மாற்றப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியுகம் 3348ம் ஆண்டுகளுக்கு முன்னர் பரவ குலத்தவர்கள் முத்துக் குளிப்பதற்காக வந்த கப்பல் இலங்கைக் கரையில் ஒதுங்கியபோது அவர்களுடன் வந்து சேர்ந்த செட்டியார் ஒருவரினால் "செட்டி-க்-குளம்" (Cheddi-k-kulam) பிரிவில் குடியேற்றம் இடம் பெற்றிருந்தது. (.JPLM p.12-1895).

"The Division of Cheddikkulam is said to have been colonized previous to this in the Kaliyuga 3348 by a Chetty from Madura who with some Parava Pearl fishers had been wrecked on the coast of Ceylon. (.JPLM p.12.1895 ).

* மகாபாரத காலத்தில் இலங்கை மேற்குக் கரையில் ஒதுங்கிய வீர-ராசன் செட்டியாரே 'வாலை" என்ற குளத்தை திருத்திக் கட்டியவராகும். இந்த வரலாற்றை செட்டிகுளம் புராதனமானது எனபதற்கான ஆதாரமாகக் கொள்ளலாம். அடங்காப்பற்று வன்னிப் பிரதேசத்தில் இருக்கும் அனைத்து தொல்லியில் சின்னங்களும் இந்த வரலாற்றிற்கு வலுவூட்டுவனவாக அமைந்துள்ளன.

*சிலப்பதிகார காலத்தில் இலங்கையின் மேற்குக் கரைக்கு வந்தவரும், விஷ்ணுவை முழுமுதற் கடவுளாக வழிபடுபவரும், நாராயணன் என்ற பெயரைக் கொண்டவருமான வீர நாராயணச் செட்டியார், சந்திரசேகரருக்கு ஆலயம் கட்டினார் என்று எழுதியிருப்பது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல.

இந்தியாவில் சிலப்பதிகார காலம் கி.மு. 04 ம் நூற்றாண்டில் இடம்பெற்றதாகவும், இலங்கை வரலாற்றாசிரியர்கள் கி.பி. 03ம் அல்லது 04ம் நூற்றாண்டு எனவும் தெரிவித்துள்ளனர். இதில் 700 வரு' வித்தியாசம் ஏற்பட்டுள்ளது.

மூவீர-நாராயணச் செட்டியார்" வந்தது சிலப்பதிகார காலமென்றால் செட்டிகுளம் என்ற பெயர் இற்றைக்கு கி.பி.1700 ஆண்டுகளுக்கு முந்தியதாகும். அதேநேரம் வீர-ராசன் செட்டியார் மகாபாரத காலத்தில் அதாவது சுமார் கி.மு. 2500 வருடங்கள் முந்தி வந்திருப்பதாக குறிப்பிட்டால் செட்டிகுள வரலாறு இற்றைக்கு 4500 வருடங்கள் பழமை வாய்ந்தது என்பது தெளிவாகிறது.

இலங்கைக்கு பௌத்த சமயம் 2500 வருடங்களுக்கு முன்னர் கொண்டு வரப்பட்டது என்பது பரவலாக குறிப்பிடப்படடு வருகிறது. அதற்கு முன்னர் இலங்கையின் வடபுலத்தில் இலிங்கத்தை வழிபட்ட இயக்கர்களும், நாகத்தை (சர்ப்பம்) வழிபட்ட நாகர்களும் வாழ்ந்துள்ளமைக்கு சான்றுகள் உள்ளன. இதுபற்றிய வரலாற்றிற்குத் தேவையான தொல்லியல் சின்னங்கள் செட்டிகுளம் பிரதேசத்தில் உள்ளமையால் ஆய்வாளர்களுக்கு இது ஒரு சவாலாக அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செட்டிகுளத்தின் புராதன வரலாற்றிற்கான சின்னங்கள் :

வௌவாலைக் கேணி :



செட்டிகுளம் பிரதேசத்தில் "சிப்பிக்குளம்" என்ற கிராமத்தின் ஊடாக ஓடும் சிற்றாற்றின் ஒருபகுதியில் தேங்கி நிற்கும் நீர்நிலையான வௌவாலைக் கேணியும், அதிலிருந்து சுமார் 6கிலோமீற்றர் தூரத்தில் சந்திரசேகரர் ஆலயமும் இருக்கின்றன. வௌவால் சிறகை விரிப்பது போன்ற வடிவம் கேணியின் பின்பகுதியில் தெளிவாகத்தெரிகிறது.

சிப்பி மேடு : கப்பச்சி கிராமத்தின் வயல் வெளிகளின் ஊடாகச் செல்லும் குறுக்கு வீதியில் சுமார் 4 கிலோமீற்றர் தூரம் சென்றால் வௌவாலைக்கேணியின் பின்பகுதிக்குச் செல்ல முடியும். வௌவாலைக் கேணிக்கு செல்வதற்கு முன்னர் இருக்கும் காட்டுக் குறையில் செங்கல் புட்டிகளும், பாத்திரங்களின் ஓட்டுத் துண்டுகள் பலவும் காணப்படுகின்றன. இது ஒரு புராதன குடியிருப்பாக இருந்திருக்க வேண்டும். சிறிது தூரத்தில் குறுக்கு வீதியை குறுக்கறுத்துப் நீரூற்று பாய்கிறது. அதற்கும் அப்பால் நீர் நிறைந்த வௌவாலைக் கேணி காணப்படுகிறது. அங்கு ஓடும் சிற்றாற்றின் கரையில் சிப்பிக்கோதுகள் நிறைந்துள்ள மேடு உள்ளது. இது சிப்பி மேடு என அழைக்கப்படுகிறது.



சிப்பி மேடு


கடற்கரையில் இருந்து சுமார் 25 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள நிலப் பிரதேசத்தில் சிப்பிகளின் கோதுகள் நிறைந்து காணப்படுவது ஆய்வுக்குரிய விடயமாகும். முத்து விளைந்திருக்கும் சிப்பிகள் கடலின் ஆழத்தில் இருப்பதினால் ஆழத்திற்குச் சென்று முத்துக் குளிப்பது வழக்கம். கடலின் ஆழத்திற்கு சென்று சிப்பிக்குள் விளைந்திருக்கும் முத்துச்சிப்பியை கண்டெடுப்பவர்களை முத்துக் குளிப்பவர்கள் என்று அழைப்பது வழக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீர-ராசன் செட்டியார் முத்துக் குளிப்பவர்களுடன் நிலப்பிரதேசத்திற்கு வந்து குடியேறினார் என்றே வரலாற்றில் குறிக்கப்பட்டுள்ளது. முத்துக் குளித்த விடயத்தைவிட, அவர் கட்டிய கோயிலும், கேணியும் வரல-ாற்றில் முக்கிய இடத்தை பிடித்துள்ளன. இதனால் சிப்பிக் கோதுகள் நிறைந்துள்ள நிலப்பிரதேசத்தைப் பற்றிய ஆய்வுகளுக்கு முக்கியத்-துவம் கொடுக்கப்படவில்லை. கடற்கரையில் நிறைந்திருக்கும் சிப்பிக் கோதுகள் போல இவையும் பல வித வடிவங்களில் காணப்படுகின்றன. இந்தச் சிப்பிக் கோதுகள் எப்படி ஆற்றங்கரைக்கு வந்தன என்பதும், சிப்பிக்கோதுகள் எவ்வளவு ஆழத்திற்கு புதைந்துள்ளன என்பதும் முக்கிய ஆய்வுக்குரிய விடயங்களாகும். இது செட்டிகுளத்தின் புராதன-த்திற்கு உள்ள மற்றுமொரு அடையாளமாகும்.

இலிங்க வழிபாடு : இலங்காபுர இராஜதானியில் இருந்த இராவண மகாராசாவுடைய யுகத்தில் இயக்கர்களோடு சேர்ந்து நாகர்களும் வாழ்ந்ததாக வரலாறுகள் குறிப்பி டுகின்றன. இவர்கள் செட்டிகுளம் பிரதேசத்திலும் பரந்து வாழ்ந்துள்ளனர் என்பதற்கான அடையாளங்களும் புராதன சின்னங்களும் காணப்படுகின்றன. இலிங்க வழிபாடு ஆரம்ப காலத்தில் நடுகல் வழிபாடாக இருந்துள்ளமை ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது. வௌவலைக்கேணியின் கரையில் இலிங்க நடுகல் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.



அண்மையில் கெங்கராயன் குளத்தில் இடம்பெற்ற புதைபொருள் ஆய்வின்போது செங்கல்லால் கட்டப்பட்ட கோபுரத்தின்நடுவே கல்லொன்று இருப்பது எமக்கு கிடைத்த புகைப்படத்தில் காணமுடிகிறது. இது தோற்றத்தில் இலிங்க நடுகல் போல் இருக்கிறது. இந்தக் கல்லின் புகைப்படத்தைப் பார்த்த பேராசிரியர் பத்மநாதன் இதில் நாகர்களுடைய தமிழ் பிராமி எழுத்து வரிகள் இருப்பதை உறுதி செய் துள்ளார். இதனால் இந்தப் பிரதேசத்தின் தொன்மை தனியான நீண்ட ஆய்வுக்கு உரியதாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாக வழிபாடு :



பாவற்குளம் நாகசிலை.

செட்டிகுளம்பிரதேசத்திலுள்ள மதகுவைத்த குளம், சின்னத்தம்பனை மற்றும் பாவற்குளம் ஆகிய குளக்கட்டுகளில் நாகர்களின் வழிபாட்டுச் சின்னமான ஐந்து தலை நாக சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. இதனால் செட்டிகுளம் அடங்காப்பற்றுப் பிரிவின் முக்கிய பிரிவாக இருந்துள்ளமை தெளிவாகிறது. வவுனியாவிற்கு தெற்கே அருவியாறு உற்பத்தியாகிறது. அருவி ஆற்றை மறித்து பாவற்குளம் கட்டப்பட்டுள்ளது. பாவற்குளத்தின்



சின்னத்தம்னை ஐந்து தலை நாகம்

அதற்கடுத்ததாக சின்னத்தம்பனைக் கிராமத்தில் உள்ள ஆலயத்தில் புராதன ஐந்து தலை நாக சிலை கொண்டுவரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

பாவற்குளத்தில் இருந்து நேரடியாக மதகுவைத்தகுளம் நீரை பெற்றுக் கொள்கிறது. இந்தக் குளத்தின் புராதன பெயர் ஆய்வுக்குரியது. மதகு வைத்த குளத்தின் கட்டில் ஐந்து தலை நாக சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபாடும் இடம்பெற்றுள்ளது.



மதகு வைத்த குளம்
ஐந்து தலை நாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நியர் ஆட்சியில் செட்டிகுளம் :

நீண்டகால இடைவெளிக்குப பின்னர் போர்த்துக்கேயருடைய (பறங்கி) ஆட்சி ஆரம்பமாகியுள்ளது. இதனை ஏட்டுப் பிரதிகளில் இருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தபோது பிறிற்றோ பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"..........இதற்குப் பின்னர் இந்த இடம் செட்டிகுளம் என அழைக்கப்பட்டது. கலியுகம் 3390 ம் ஆண்டுகளில் (தவறான கணிப்பு)) பறங்கியர் (போர்த்துக்கேயர்) தமது கட்டுப்பாட்டின கீழ் கொண்டு வந்தனர். (Brito-1879 )

"It was after this, the place was called Chetty-kulam and the Parangkis took possession of viz.in 3390 (Brito -1879 )

".......இதற்குப் பின்னர் போர்த்துக்கேயர் நாட்டை ஆண்டனர், இது கலியுகம் 3390ம் ஆண்டாகும். (இது கி.பி. 289ம் ஆண்டு. தவறான கணிப்பு)). போர்த்துக்கேயத் தலைவன் சிறட்டரு மற்றும் அவருடைய சேனையின் கீழ் செட்டிக்குளம் இருந்தது. 1895.JPLM p.12.

"It was after this the Portuguese governed the country, that was in Kali yuga 3390 (A.D.289). . Cheddikkulam, by Portuguese chief Chiraddaru (sic) and his Portuguese retinue" (JP.Lewis 1895)

பறங்கிச் செட்டிகுளம் : யாழ்ப்பாணச் சரித்திரத்தில் செட்டிகுளம் பற்றிய காலக்கணிப்புகளிலும் வரலாறுகளிலும் குழப்பங்கள் காணப்பட்டாலும், போர்த்துக்கேயர் செட்டிகுளத்தைக் கைப்பற்றி நிர்வாகம் நடத்தியிருந்தனர் என்ற வரலாறு சரியாக குறிப்பிடப்பட்டிருப்பதாக 1895ல் ஜே.பி. லூயிஸ் எழுதிய வன்னிக் கைநூலில் தெரிவித்துள்ளார்.

"செட்டிகுளம் போர்த்துக்கேயரின் நிர்வாகத்தின் கீழ் இருந்தமைக்கு அடையாளமாக, இந்த இடம் "பறங்கிச் செட்டிகுளம்" என போர்த்துக்கேயர் கால வரலாறுகளிலும் வரைபடங்களிலும் குறிக்கப்பட்டுள்ளது என திரு.ரேணரை மேற்கோள் காட்டி லூயிஸ் அவர்கள் எழுதியுள்ளார்.

Cheddikulam was for a time under the Portuguese, for I find it stated by Mr.Turner in1811that the Ceddikkulam was called in most maps "Parengi Chittycolom. (JPLM p. 14)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக்கு வருமானத்தை ஈட்டித் தரும் ஒரு தலைசிறந்த தொழிலாக முத்துக்குளிப்பு இருந்துள்ளது வரலாற்றின் தொடர்ச்சியாக அந்நியர் ஆட்சியில் மன்னார்ப் பிரதேசத்தில் முத்துக் குளிப்பதையும், முத்துக்களை கொள்வனவு செய்வதையும் செட்டி பரம்பரையினர் குத்தகைக்கு எடுத்து செய்து வந்தமை பல இடங்களில் குறிப்பிடப்படுகிறது. ஆங்கிலேயர் காலத்தில் மன்னாரில் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த செட்டியார் ஒருவர் முத்துக் குளிப்பை குத்தையாக எடுத்து பெரும்பணத்தைச் சம்பாதித்தாக அவர்களுடைய வராலாற்றில் குறிக்கப்பட்டுள்ளது தற்போது நிறுவன ரீதியாக அரச ஆதரவுடன் வடபுலத்தில் தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆய்வுகளின் வெளிப்பாடுகளில் தமிழர்களின் தொன்மைக்கும் வழிபாட்டு முறைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. இதனால் வடபுலத் தமிழர்களுடைய புராதன வரலாற்றைக் கொண்ட "செட்டிகுளம்" பிரதேசம்பற்றிய ஆய்வுகளை முறையாகச் செய்ய வேண்டியது ஆய்வாளர்களினதும் அதிகாரிகளினதும் முக்கிய கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.க.மோகனதாசன்,
விரிவுரையாளர்,
நாடகத்துறை,
சுவாமி விபுலானந்தா அழகியற்கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப்பலகலைக்கழகம்.

## பறை என்பது...



தமிழர்களின் தொன்மையான பாரம்பரியநடனமான பறைமேளம் உணர்ச்சியும் எழுச்சியும் மிக்கது. அதிர்ந்தெழும் பறையிசை- ஆவேசம்,மகிழ்ச்சி,உற்சாகம் என உணர்ச்சிகளை ஒரே நேர்கோட்டில் இணைக்கும் சக்தி கொண்டது. பன்னெடுங்கால வரலாற்றைத் தன்னகத்தே கொண்டுள்ள பறை, ஓர் இசைக் கருவி மட்டுமல்ல தொல்குடித் தமிழ்ச் சமூகத்தின் சொத்து. தோலிசைக் கருவிகளின் தாய். தமிழினத்தின் தொன்மையான அடையாளம். உழைக்கும் மக்களின் இசைக் களஞ்சியம். தமிழர் வாழ்வியலின் முகம்

தோற்கருவிகளின் பொதுப் பெயராகவே இலக்கியங்களில் பறை என்பது வழங்கப்பட்டுள்ளது. பறை என்ற சொல்லுக்குக் கூறு, சொல் என்ற பொருள்கள் இருக்கின்றன. மலையாளத்தில் பறைதல் என்பது சொல்லுதல் என்ற பொருளில் வழங்கி வருவதை இன்றும் காணலாம். தீட்டைப்பறை, தொண்டகச் சிறு பறை, தொண்டகப்பறை, அரிப்பறை, மன்றோல் சிறுபறை, மென்பறை, இன்னிசைப்பறை, பொருநர்பறை, ஆடுகளப்பறை எனப் பல பெயர்களில் சங்க இலக்கியங்களில் பறை குறிப்பிட்டப்பட்டுள்ளது. "பறை என்பது ஓடும் இசையை ஒழுங்கு பெற நிறுத்தி ஓர் அளவோடு சீரோடு, ஒத்த அழகோடு நடக்க, இசைக்கு நடை கற்பிக்கும் கருவி' எனவும் கூறப்படுகின்றது.

பறையோசைக்கு அசைவு கொடுக்காத மனிதர்களே கிடையாது. அதிலிருந்து வரும் சத்தத்தைக் கேட்டவுடன் நாடி, நரம்புகள் அனைத்தும் துள்ளி குதித்துக் கொண்டு ஒரு வித அதிர்வை கொடுக்கும். யார் ஒருவர் பறை சத்தத்திற்க்கும் ஆடாமல் அசையாமல் பிணம் போல் இருக்கிறாரோ, அவர் உயிர் இறந்து விட்டார் என்ற முடிவிற்கு வந்தார்களாம் அக்காலத்து மக்கள். அதனால் தான் இறந்த வீடுகளில் பறை அடிக்கும் சம்பிரதாயம் வந்ததாக அறியப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும், அரித்தெழும் ஓசையையுடைய பறை அரிப்பறை எனவும் வழிப்பறி செய்வோர் கொட்டும் பறை ஆறெறிப் பறை எனவும் மகிழ்ச்சியைக் குறிக்கும் பறை உவகைப்பறை எனவும் சாவில் அடிக்கப்படும் பறை சாப்பறை எனவும் மீன் பிடிக்கப் பயன்பட்ட பறை மீன்கோட்பறை எனவும் செய்திகளை நகரத்தவர்களுக்குத் தெரிவிக்கும் பறை கோட்பறை எனவும் யானை முதலியவற்றின் முன்னே கொட்டும் பறை தலைப்பறை எனவும் வாயகன்ற பறை படலை எனவும் அரச விளம்பரங்களைக் குறிக்கும் மன்னரின் செய்திகளை மக்களுக்குத் தெரிவிக்க,

பறை பண்டாரமேளம் எனவும் பகைவருடன் போர்புரிவதற்காக, வீரரை அழைப்பதற்குக் கொட்டும் பறை பூசற்றண்ணுமை எனவும் பலவாறாகப் பறை தமிழர் வரலாற்றினூடே விரவி நிற்பதைக் காணமுடிகின்றது.

தமிழரின் வாழ்வியல் கூறுகளுடனும் பறையிசையானது பல தளங்களில் செயற்பட்டிருப்பதைக் காணலாம். ஒரு மன்னன் எதிரிநாட்டுக்குச் சென்று போர் புரியும் முன் அங்குள்ள போர் புரியவியலாத மக்களை வெளியேற வேண்டுவதற்கு, பெருகிவரும் புனலை அடக்க, உழவர் மக்களை அழைக்க, போர்க்கெழுமாறு வீரர்களை அணிதிரட்ட, வெற்றி தோல்வியை அறிவிக்க,வயல்களில் உழவு வேலை செய்வோருக்கு ஊக்கமளிக்க, விதைக்க, அறுவடை செய்ய,காடுகளில் விலங்குகளை விரட்ட,



இயற்கை வழிபாட்டில்,கூத்துகளில், விழாக்களில், இ றப்பில் எனப் பல்வேறு வாழ்வியல் கூறுகளுடன் 'பறை' இணைந்து இயங்கியுள்ள தற்கான ஆதாரங்கள் உள்ளன. நெல்லைக் கவர வரும் பறவைகளை விரட்ட மக்கள் பறையைப் பயன்படுத்தினர் என்பதை புறநானூறு "கழி சுற்றிய விளை கழனி அரிப்பறையாற் புள்ளோப் புந்து மென் பறையாற் புள்ளிரியுந்து" எனும் பாடலில் தெரிவிக்கின்றது. இங்கு பறையொலியானது மென்மையாகவும் வன்மையாகவும் ஒலித்திருப்பதைக் காண முடிகின்றது. தாளப் பிரமாணங்களில் செந்தூக்கு, வஞ்சித் தூக்கு என இரு முறைகளில் பறையொலியின் வேகம் அதாவது Tempo தாள நிலைமைகளுக்கேற்ப மேற்கொண்டிருப்பது இலக்கியங்களின் வாயிலாக எமக்கு அறியக்கிடக்கிறது.

மன்னரிடம் பரிசு பெறச் செல்வோர் தடாரிப் பறையை இசைத்துச் செல்கின்றனர். "பாடுநர்க்கிருந்த பீடுடையாள...... அரிக்குரல் தடாரியுருப்ப ஒற்றிப் பாடி தந்திசின் பெரும்பாடன்று" எனும் பரணர் பாடிய புறநானூற்றுப்பாடல் இதற்குச் சான்றாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல இசைக் கருவிகள் சேர்ந்து ஒலிப்பதை சங்ககாலத்தில் ஆமந்திரிகை எனக் குறிப்பிட்டனர். 'விறலியரே, முழாவின் கண்ணே மார்ச்சனையை இடுவீர், யாழிலே பண்ணை நிறுத்துவீர், பெருலிங்கியத்தையும் சல்லியையும் வாசியுங்கள், சிறுபறையை அடியுங்கள், பதலையின் ஒரு முகத்தை மெல்லெனக் கொட்டுவீர்' என வரும் உரையுள்ளிட்ட செய்யுள் இதனைத் தெரிவிக்கின்றது.


திருஞான சம்பந்தரும் தனது திருவீங்கொய்மலை பதிகத்தில் "குழல் யாழ் மொந்தை கொட்டவே பறையும் குழலும் கழுலுமார்ப்ப" என பறையின் தெயிவீகத் தன்மையினை உணர்த்துகின்றார். உத்தம சோழனால் வழங்கப் பட்ட சென்னை அருங்காட்சியகத்து செப்பேடுகள் காஞ்சிபுரத்து ஊரகத்து நின்ற பெருமாள் கோயிலைப் பற்றிப் பேசுகின்றன. இக்கோயிலில் ஒன்பது உவச்சர்கள் பணியாற்றினர். இருவர் மத்தளம், ஒருவர் கரடிகை, இருவர் காளம், ஒருவர் தாளம், ஒருவர் செகண்டி, ஒருவர் கைம்மணி என்பன ஒலித்தனர். இவர்களை வழி நடத்த இருந்த தலைப்பறை இங்கு உகட்சகர் தலைப்பறை என்று குறிப்பிடப் படுகின்றார்.

இவ்வாறு வரலாற்றினூடே பல்வேறு சிறப்புக்களைக் கொண்ட பறை இன்று தமிழர் பாரம்பரியத்தினின்றும் கை நழுவிப் போகும் நிலை காணப்படுகின்றது. எமது தொன்மையான வாத்தியத்தினை பேணுவதற்காகவும் அதற்கான அழுத்தமான அங்கீகாரத்தினைப் பெறுதல் வேண்டியும் பல செயற்பாடுகள் தொடர்ந்து நடை பெறுகின்றன. மட்டக்களப்பு அரங்க ஆய்வு கூடம், மூன்றாவது கண் உள்ளூர் அறிவு செயற்பாட்டுக் குழுவினர், சமதை சமத்துவத்திற்கான பெண்கள் பறை மேள அணியினர், இன்னும் பல அமைப்புக்கள் இதனை செயல்வாதமாக முன்னெடுத்துச் வருகின்றனர். இதன் சமூக, அரசியல் முக்கியத்துவத்தினை மனதில் கொண்டு பறைமேளத்தின் நிலைத்து நிற்றலுக்காக தொடர்ந்து செயற்படுதல் எம் எல்லோருக்கும் அவசிய கடமையாகின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் ஊனம்?



கி.சற்குருவேணு,
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
வெங்கலசெட்டிகுளம

பூமியில் வாழ அங்கங்கள் தேவை
என்று ஒரு சிலர்.
பூமியை ஆள மனவுறுதி போதும்
என்று மறுசிலர்

அங்கமிருந்தாலென்ன - மன
உறுதி கொண்டாலென்ன
உறவிழந்து ஊனமானோர் சிலர்,
குறையின்றி ஊனமானோர் மறுசிலர்,
உறுப்பிழந்து ஊனமானோர் வேறுசிலர்,
பார்காண வழியின்றி பதருக்குள் இன்னும் சிலர்
எவ்வகையில் யாரை ஊனமென்பது?

ஆண்டவன் படைப்பில்
அனைவரும் முழுமையானவர்கள்தான்
ஆண்டவனின் ஆட்டத்தில் நாம்
அகுைறையானவர்கள்.
அங்கங்கள் இழந்தவர்கள்,
சொந்தங்கள் அழிந்தவர்கள்
பந்தங்கள் பிரிந்தவர்கள்,
மன உறுதி உடைந்தவர்கள்.

வரும் வழியில் சொந்தமிழந்து
வந்தவுடன் அறிந்து சென்று
இனத்தாருடன் சேர்வதற்கு
மனதோடு போரிடும் பெண்
வயிற்றில் குழந்தை,
மணம் முடிக்கவில்லை,
காரணம் கண்ணில்லை,
காப்பாற்ற நாதியில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணை இழந்த
பெண்ணவள் ஊனமில்லை,
கண்ணில்லாதவள் என்றபோதும்
கற்பில் விளையாடிய
காட்டேறியவன்தான் ஊனம்.
கை, கால் இழந்து
கட்டைபோல் முண்டம் மட்டும்
காணொளியாய் ஒருடல்
என்னையும் கூட்டிச்செல்லுங்கள்
என்னுயிரையும் காப்பாற்றுங்கள் என்று...

கண்ணீர்பெருக
சிவப்பாடை உடல்கொண்டு
வந்தவர் போனவர் கால்களை
வதனத்தால் தொடும்போது,
வஞ்சியவளுடல் சிலஇடம் தெரிந்தது.
காணதது கண்டதுபோல்
காட்டுக்குள் கிடந்த கயவர்கள்
கண்கள் வைத்தபடியே....

சிலதூரம் வரும்வரை
செவிக்கு எட்டியகுரல் ஓரிடத்தில்
என்னை விடுங்கள்
நானோர் ஊனமுற்றவள்
கட்டையை கூட
காப்பாற்ற யாருமில்லையா.....? என்று.

இவ்வேளை கேட்டது ஈரொலிகள்
வீறுகொண்டபெண் வேறு வழியின்றி
வெந்தணலில் வேகும்போது
வெறிபிடித்த மிருகங்கள் அவளை
வேட்டையாடின.
யாரப்பா இதில் ஊனம்?

தன்னங்கம் இழந்தபின்னும்
இன்னல்கள் வந்த பின்னும்
மண்ணுலகில் வாழ
மனவுறுதி கொண்டவர்கள் ஊனமா?

ஊனமென்று தெரிந்த பின்பும்
மானத்தை பறித்தெடுக்கும்
மனித மாமிசம் உண்ணும்
மானிட இயமன்கள் ஊனமா?

மனவுறுதி கொண்ட ஆத்மாக்களா?
மாமிசம் தின்னும் பேய்களா?
இவர் தனில் யார் ஊனம்?
விடைகாண விளைந்தால் நாளை
நானுமோர் ஊனமுற்றவன்தான்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சு.விஜயசாந்தி
செட்டிக்குளம் ம.வி
இராமநாதன் நுண்கலைப்பீடம்
யாழ் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.

## இசை நாடகமும் ஈழத்தின் கர்நாடக இசை வரலாறு பற்றிய ஒருபார்வை

நாட்டின் கலாசாரம் அங்கு பின்பற்றப்படும பழக்கவழக்கங்களில் மட்டும் அல்லாது அந்நாட்டில் தோன்றிய மற்றும் பின்பற்றப்படும் நுண்கலைகளின் மூலமும் வெளிப்படுகிறது. ஈழத்தமிழர்கள் பெரும்பாலும் தமிழக மக்களின் கலை கலாச்சாரம் பண்படுகளுடன் ஒத்த வாழ்க்கை முறையில் வாழ்பவர்களாயினும் தமிழகத்தில் தோன்றி பெரு விருட்சமாக வியாபித்து நிற்கும் கர்நாடக இசையானது கிட்டத்தட் அரை நூற்றாண்டுகளுக்கு முன்னரே ஈழத்தில் பரவலாயிற்று. சங்கீத மும்மூர்த்திகளாக சாதனைப் படைத்த சியாமா சாஸ்திரிகள், முத்துசாமி தீட்ஷிதர் மற்றும் தியாகராஜர் முதலான இசை வாக்கேயக்காரர்கள் பல நூற்றாண்டுகளுற்கு முன்பே கர்நாடக இசையிலக்கணங்களையும் இசை உருப்படிகளையும் தெய்வீக இசைஞான நுண்ணறிவால் உருவாக்கி இவ்வுலக மாந்தரிடம் தந்துள்ளனர். இவர்கள் இயற்றிய கீர்த்தனைகளே கர்நாடக இசையை இன்னும் உயிர் வாழச் செய்து கொண்டிருக்கின்றன. எல்லா தேசத்து பாரம்பரிய சங்கீதமும் சிறப்புடையது என்பது உண்மையே. எனினும் கர்நாடக சங்கீதம் மற்ற எல்லா சங்கீதங்களையும் விடச்சில தனிச் சிறப்புக்களை உடையது என்பது ஏற்கப்பட வேண்டியது ஆகும். உலக இசைகளில் மிக நுட்பமானது கர்நாடக இசையே இவ்விசையானது தென்னி ந்தியாவில் தோன்றி வளர்ந்து இன்று உலகெங்கும் வாழும் அனைத்து மனிதர்களாலும் விரும்பப்படும் ஒரு சிறந்த இசைக்கலையாக பரவி வளர்ச்சி பெற்று வருகின்றது.

மற்ற எல்லா சங்கீதங்களையும் போல அல்லாது கர்நாடக சங்கீதம் வாயால் பாடுவதையே முதன்மைப் படுத்துகிறது வாத்தியங்களில் கர்நாடக சங்கீதம் இசைக்கப்பட்டாலும் அதன் அடிப்படை வாயால் பாடும் முறையை ஒட்டியே அமைந்திருக்கும். அதே போன்று மற்ற எல்லா இசை முறைகளிலும் இல்லாத அளவிற்குப் பாடப்படும் பாடல் வரிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதும் கர்நாடக இசையில் மட்டுமே ஆகும். ஏனென்றால் கர்நாடக இசை கீர்த்தனைகள் இறை உணர்வை அதிகப்படுத்தும் ஒரு சாதனமாகவே கைக்கொள்ளப்படுகிறது. மேலும் கர்நாடக கீர்த்தனை வரிகள் ஒவ்வொன்றிலும் ஆழ்ந்த புராண இதிகாச இலக்கியங்கள் சுட்டிக்காட்டப்பட்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் இக்கலையானது 1920 களிற்குப் பிறகே ஈழத்தில் பரவலனதாக அறிய முடிகிறது. அதற்கு முன்னர் எம்மவரின் ரசனைக்குரியகலைகளாக இருந்தவை நாட்டுப்புறக் கலைகளே எனினும் இந்த நாட்டுப்புற கலைகளுள் கர்நாடக இசையின் தாக்கம் மிகுதியாகவே இருந்துள்ளது. இவ்வாறான கலைகள் மக்களின் பொழுதுபோக்கிற்கு உரியனவாகவும் வீட்டில் நடைபெறும் மங்கள வைபவத்தின் சந்தோச நிகழ்வுகளாகவும் மேலும் ஆலயத் திருவிழாக்களை சிறப்பிப்பனவாகவும் இருந்தன. கலைகளை மூன்று நிலைகளில் நோக்கலாம் .

1. தொன்மைக்காலக்கலை [Primitire art]

2. நாட்டுப்புறக்கலை [Folk art]

3. திருந்தியகலை [Classial art]

தொன்மைக்கலைகளானது நாட்டுப்புறக் கலைகளாகவும் நாட்டுப்புறக கலைகள் செம்மைப்படுத்தப்பட்ட பின்னர் சாஸ்திரீயாக கலைகளாகவும் வளர்கின்றன.

ஈழத்தில் கர்நாடக இசையானது பரவுவதற்கு முன் மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றிருந்த கலைகளாக சிலம்பாட்டம், காவடியாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், கோலாட்டம், கும்மி, பொய்க்கால் குதிரையாட்டம், வேதாள ஆட்டம், பேயாட்டம், வசந்தன் பாவை கூத்து. நாட்டுக்கூத்து, வில்லுப்பாட்டு, இசைநாடகம் என்பவற்றையும் கிராமிய நடனங்களாக குறத்தி நடனம், பொம்மை நடனம், கும்மிநடனம், முகமூடி நடனம் என்பனவற்றையும் கூறலாம். அத்துடன் நாட்டார் பாடல் வகைகளாக தாலாட்டுப்பாடல், கல்யாணப்பாடல், கப்பற்பாடல், குழந்தைப்பாடல், மருத்துவிச்சி வாழ்த்துப்பாடல், ஒப்பாரிப்பாடல், பள்ளுப்பாடல், குறவஞ்சிப்பாடல். கும்மி. கோலாட்டம், கரகம், காவடிப்பாடல்கள் என்பவற்றையும் குறிப்பிடலாம் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை விட கர்நாடக இசையின் தாக்கம் வெகுவாகக் காணப்படும் கலைகளான கதாப்பிரசங்கம் இசைச்சொற்பொழிவு, புராண படலம் வாசித்தல், வில்லுப்பாட்டு. இசை நாடகம் என்பவும் தென்மோடிக் கூத்துக்கள் என்பனவும் கிராமியக் கலைகளாகவே மக்களால் பார்க்கப்பட்டன. இவற்றுள் இசை நாடகமானது. முற்று முழுதாக கர்நாடக இசையால் அலங்கரிக்கப்பட்ட ஒரு கலைவடிவமாகும். 1920 களிற்கு முன் இந்து ஆலயத் திருவிழாக்களை அலங்கரித்த பஜனைப் பாடல்கள், இசை நாடகங்கள் என்பனவும் முக்கியமானவையாகும். இசை நாடகமானது கர்நாடக இசையின் அனைத்து நுட்பங்களும் உள்ளடங்கியதாக அமைக்கப்பட்டிருப்பதால் அக்கலையானது மக்கள் மத்தியில் தூய இசை ரசனையை ஏற்படுத்தியது எனலாம். அழகாக வேடமிட்டு இனிதாகப்பாடிச் சிறப்பாக நடித்து முத்தமிழ் முழக்கமிடும் கலையான இசை நாடகம் மக்களைக் கவர்ந்ததில் ஆச்சரியமில்லை.

இவ்வாறு மக்கள் மத்தியில் மகுந்த செல்வாக்குப் பெற்ற இசை நாடகமே ஈழத்தில் கர்நாடக இசை பரவுவதற்கும் மக்களால் கர்நாடக இசை ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும் காரணமாக அமைந்தது. எனலாம் ஆகவே ஈழத்தின் கர்நாடக இசையின் பிறப்பும் வளர்ச்சியும் இசை நாடகக் கலையுடன் தாய் சேய் உறவை உடையதாகக் காணப்படுகின்றது. ஏனெனில் ஈழத்தின் இசை முன்னோடிகளுள் ஒருவரான எஸ்.என்.சோமசுந்தரம் அவர்களின் தந்தையார் சிறந்த தொரு இசை நாடகக் கலைஞராவார் புத்துவாட்டி இரத்தினம் என அழைக்கப்பட்டவரும் இவர் வயலின் மிருதங்கம் ஆர்மோனியம் போன்ற இசைக் கருவிகளை இசைக்க கூடியவராகவும் சிறந்த பாடகராகவும் விளங்கினார் என அறியமுடிகிறது.

பொழுது போக்கிற்காகவும் எழுகின்ற வங்கி இருப்புக்காகவும் பழுதில்லாத இந்த பாரம்பரிய இசையைப் பலரும் கைக்கொள்ளும் பொழுது அழிகின்ற சில அம்சங்களையும் இந்த இசையின் மீது விழுகின்ற சில விரும்பத்தகாத விளைவுகளையும் குறித்து மட்டுமே நாம் விசனப்படுகிறோம். இத்தகைய இசை நாடகம் மற்றும் கர்நாடக இசைப்பாரம்பரியத்தை என்றும் காத்து இந்த தேசத்தை உய்விக்கும் உன்னத பணிகளை தொடர்ந்து ஆற்றவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி அருள்வாணி விஜேஸ்வரன்
வ/பாவற்குளம் கணேசுவரா ம.வி (ஆசிரியை).

## இயற்கையோடு இயைந்த பாவற்குளம்

காடுகளும் நதிகளுமே
காவியத்தின் எழில் வளங்கள்
காவியங்கள் காணவில்லை
ஓவியங்கள் தீட்டவில்லை
கால ஓட்டத்தில்
கரைபுரளும் எங்கள் வளம்
வரலாறு கண்டிராத
பாவற்குளத்தின் இயற்கைவளம்

பாராண்ட பாவலனும்
ஏர் பிடித்த ஏழைகளும்
ஏற்றங்கள் கண்டிடவே
தோற்றுவித்த எங்கள் குளம்
செட்டிக்குளமதனில்
பட்டி தொட்டி எங்கும்
வாரி வாரி நெல் மணியை
வழங்குகின்ற பாவற்குளம்

வன்னிக் காடென்று
வாகாய்ச் சொல்லுகின்ற
காட்டுவளம் கண்சிமிட்டும்
கண்ணுக்கெட்டும் தூரம் வரை
மாமரத்தில் தாவுகின்ற
மந்திகளின் சாகசமும்
தென்னை மரங்களிலே
தேன் குடிக்கும் வண்டினமும்
தேடியும் கிடைக்காத
தெவிட்டாத தேனமுதம்

கல்லுகளும் மலைகளும்
கச்சிதமாய் அமைந்திட்ட
கல்லாறு ஓடுகின்ற
கனிவான நகரமிது
வயலோரம் தலையசைக்கும்
கதிர் சுமந்த நெல்லினமும்
நதியோரம் அலைபாயும்
நன்னீர் மீனினமும்
உழவர்களை மட்டுமல்ல
ஊரினையே வாழ வைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'க'வளமும் 'கோ'வளமும்
தேனூறும் 'பூ'வளமும்
இலங்குகின்ற இவ்வூரில்
இயற்கைக்கு என்ன குறை
மழை நாளை அறிவிக்கும்
மகத்தான மயிலினங்கள்
சித்திரையை வரவேற்கும்
சின்னக் குயிலனங்கள்
மாகாணப் பறவையென்ற
மாட்சியைக் கூறுகின்ற
செண்பகமும் பாடடிசைக்கும்
செழுமை மிகு கிராமமிது

வீரம் விளைந்த வன்னி மண்ணின்
வீரிய விழுதுகள்
வீறு கொண்டு புறப்பட்ட
வீர மண் இந்த மண்
இலங்கைத் தீவெங்கும்
இன்றொளிரும் இரத்தினங்கள்
இந் நிலத்தில் விளைந்ததென்ற
இக் கதையை யாரறிவார்
இன்னும் வீர வரலாறுகள்
இம் மண்ணில் ஏராளம்

எல்லா வளங்களுமே
ஏனோ கொஞ்சம் அதிகம் தான்
இல்லை என்ற சொல்லுக்கே
இடமில்லை இந் நிலத்தில் - ஆனால்
வீதிகளின் விதி மட்டும் - இன்று
நாதியற்றுக் கிடக்கிறது
கதயறியமும் வீதிக்கு
உயிர் கொடுப்போர் யாரிங்கே
கண்ணியமாய் கேட்டிடுவோம்
காலமகள் பதிலுரைப்பாள்

எட்டுத் திசைகளிலே
ஏங்கி நின்ற மக்களையும்
பட்டினிச் சாவினிலே
பரிதவித்த மக்களையும்
வருக வருக வென்று
வரவேற்று நிலங்கொடுத்து
அள்ளி நீர் வார்த்த
அருமையான அன்னையிவள்
அவள் துயரைத் துடைத்தெறிவோம்
அவள் பெருமை போற்றிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. அன்ரனிஸ்குருஸ்
தலைவர்
வன்னியூர் கவிராயர் கலை
இலக்கிய பேரவை
இலுப்பைக்குளம்.

## வன்னியூர்க் கவிராயர் - எஸ். எல். சௌந்தரநாயகம்

வெண்ணிலவு வேட்டியும், மேற்சட்டையும், மெலிந்த தோற்றமும், மேவிவாரிப் படிய விடப்பட்ட தலைமுடி, ஒ ரு பழைய சைக்கிள், சைக்கிளில் கொழுவப்பட்டிருக்கும் இரு பை இவை தான் அந்த வன்னிக் கவிஞனின் அடையாளம். இற்றைக்கு முப்பத்தெட்டு ஆண்டுகளுக்கு முன்னர் செட்டிகுளம் பிரதேசத்ததை அண்டிய கிராமங்களையெல்லாம் அந்தப் பழைய சைக்கிள் சுற்றித் திரிந்திருக்கிறது. இனம், மதம் என்ற பேதங்களுக்கு அப்பால் அந்தப் பையிலிருந்த நாட்டு மருந்துகள் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன.

காடுகரம்பைகளிலும், வயல் வெளிகளிலும், குளக்கட்டுகளிலும் அந்தக் கவியுருவத்தின் காலடிகள் பதிந்திருக்கின்றன. யாவரையும் நேசித்த யாவராலும் நேக்கப்பட்ட அந்த மகத்தான மனிதன் "வன்னியூர்க்கவிராயர்" என்று அடைப்பப்பட்ட சந்தியோகு லோறன்ஸ் சவுந்தர நாயகம் அவர்கள்.

முல்லையா? மருமதமா? என்று பிரிந்துணரரமுடியாத செட்டிக்குளம் பிரதசத்தைச் சேர்ந்த வேப்பங்குளம், இலுப்பைக்குளம் ஆகிய இரட்டைக் கிராமங்களின் சொந்தக்கார் அவர் இரண்டு பெயர்களில் இருக்கும் இரு கிராமமாகவே கருதத் தோன்றும் இக்கிராமங்கள் இரண்டும் ஒரு கொடியில் உதித்த உறவுப் பிணைப்பால் ஆனவை இற்றைக்கு 170 வருடங்களுக்கு முன்னர் வேப்பங்குளத்தில் குடியேறிய விசயேந்த்திப் புலவரின் பேரனும், சந்தியோகுப் புலவரின் மகனுமாக வன்னியூர்க் கவிராயர் விளங்குகின்றார்.

பரம்பரை கவிப்புலமையும், வைத்தியப் புலமையும் கைவரப் பெற்ற அற்புதமான மனிதன் அவர். மருத்துவமும் கவித்துவமும் ஆகிய குலவித்தை கல்லாமலேயே அவரிடம் குடிகொண்டது. 1921.04.04 அன்று சந்தியோகு அன்னம்மா தம்பதிகளின் மகனாகப் பிறந்து மன்னார் நல்லாயன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைப் பெற்றுக் கொண்டார்.

ஆழ்ந்த அறிவும் சமூக நேயமும் கொண்ட மனிதனாக விளங்கியமையால் சமூகத்தில் நன்மதிப்பைப் பெற்றிருந்தார். சின்னச் செட்டிகுளம் கிழக்கு, இலுப்பைக்குளம். வேப்பங்குளம் வட்டார உறுப்பினராகவும் 1966 ஆண்டு போட்டியின்றி தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டு கடமையாற்றியவர். இளமையிலேயே தந்தையை இழந்து, வறுமையின் கோரப்பிடியில் சிக்கிக் கொண்ட தனக்கு பல்கலைக்கழகப் படிகளை மிதிக்கும் பாக்கியம் தானும் கிட்டவில்லை என்று ஆதங்கப்படும் கவிஞர் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உயர்தரக் கல்வி பயில முடியாமல் பட்டணவாகஞ் செய்யாமல் சிரேஷ்ட தராதர வகுப்புடனேயே குக்கிரமாத்தில் முடக்கி வாழும் நிலைக்கு கால தேவனால் தூக்கி எறியப்பட்ட நான் எழுத்தாளனாகுவது இலேசான காரியமா? ஏன்று மலைத்துப் போயிருந்த கவிஞன் பின்னாளில் பத்திரிகைகளில் பரிச்சமாகி வன்னியூர்கவிராயர், எஸ். எல். சவுந்தரநாயகம், வன்னியூநாயகம்,பாவேந்தர், எஸ். எல். ஏஸ், மனோகரி என்ற புனைபெயர்களிலெல்லாம் எழுதிப் பிரபல்யமானது எவ்வாறு.

1952 ஆண்டில் ஏற்பட்ட பஞ்சத்தைத் தொடர்ந்து 1953 இல் கூப்பன் அரிசிக்கு விலையேற்றிய போது அதனால் பாதிப்படைந்த மக்களின் இன்னல்களை வெளிப்படுத்தி, சகாய வேலைச் சம்பளத்தை உயர்த்தித் தரும்படி அராங்கத்திடம் கேட்டு பிரபல பத்திரிகை ஒன்றுக்கு எழுதப்பட்ட ஆசிரியர் கடிதமே அவரது எழுத்துப் பயணத்தின் ஆரம்பம்.

1964 ஆண்டில் சுதந்திரன் பத்திரிகையில் பிரசுரமான "முயற்சியின் அறுவடையே என்னை எழுத்தாளனாக்கியது" என்ற கட்டுரையில் அக்கடிதம் பற்றி இவ்வாறு குறிப்பிடுகின்றார் ஒரு சிறுகதை ஆசிரியனாக, கட்டுரையாசிரியனாக, கவிஞனாக திகழ்கின்றேனென்றால் அதற்குக் காரணம் அந்த ஆசிரியர் கடிதம் தான் அந்த ஆசிரியர் கடிதத்தை ஒருபோதும் மறக்கமுடியாது மறக்கவும் மாட்டேன். ஆசிரியர் கடித்திற்கு இலக்கிய அந்தஸ்த்துக்கொடுக்க முடியாதென்றாலும் என்னைப் பொறுத்தவரையில் அதுதானே எனது முதல் எழுத்தோவியம், தூண்டுகோல், வழிகாட்டியனைத்தும்.

கடிதத்தைத் தொடர்ந்து எழுதத் தொடங்கிய கவிஞர் சிறுகதை, குட்டிக்கதை, உருவகக்கதை, நடைச்சித்திரம், கட்டுரை கவிதைகள் என்று பரப்புகளில் தனது பேனாவை தாராளமாக ஓடத்தொடங்கினார்.

கவிஞன் என்ற வகையில் மன்னர் மத்தியில் நன்கு அறிமுகமாகினார். ஆசு, மதுரம். விந்தாரம் ஆகிய மூவகைப்பாவினங்களையும் சரளமாகப் படைத்ததுடன் கடினமான சித்திரக்கவிப்பாவினத்தையும் தேர்ந்தெடுத்து நாகபந்தம், சக்கரபந்தம், நீரோட்டம் போன்ற கவிதைகளை ஆக்கும் பலமை விளையாட்டுக்களை மிகச் சாதாரணமாச் செய்தார்.

மனிதனின் அகமும், புறமும் வளர்ச்சியடைய வேண்டும், சமூதாயப் புனரமைப்பு செய்யப்பட வேண்டும் என்ற கொள்கையுடன் எழுதியவர். எழுத்தாளன் என்பவன் காலத்திற்கேற்றவகையில் தனிமனித- சமுதாயப் பிரச்சினைகளென்கின்ற பிணிகளுக்கு "கருத்துக்கள்" என்ற மருந்தைக் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டியவர் என்ற கடமையுணர்வுடன் செயற்பட்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1973 ஆம் ஆண்டு அவரது இருபது கால இலக்கிய அறுவடையின் சிறு-பகுதியாக 15 சிறுகதைகளை உள்ளடக்கிய ஈழத்ததுக் காவிய தீபகம் என்னும் சிறுகதைத் தொகுதியை பல சிரமங்களுக்கு மத்தியில் வெளியிட்டார். இது போன்ற பல நூல்களைத் தொகுக்கக் கூடிய ஏராளமான சிறுகதைகள் இருந்தும் அவற்றை வெளியிட வாய்ப்புகளோ, வசதிகளோ இல்லாத நிலையை எண்ணி அங்கலாய்க்கால் இருக்கவும் அவரால் முடியவில்லை. துயில் புரியும் சிறுகதைகள், இலக்கியப் படைப்புகளை பள்ளியெழுச்சி பாடித் தூக்கி நிறுத்தும் சகாப்தம் இரத்தின துவீபத்தில் தோன்றுமா என்று இந்நூலின் முகவுரையில் குறிப்பிடுகின்றார்.

அன்பர்களின் ஆதரவுடன் வெளியிடப்பட்ட இச்சிறுகதைத் தொகுப்பைத் தொடர்ந்து 'தூண்டுகோல்' எனும் தலைப்பில் கவிதைத் தொகுப்பொன்றையும் வெளியிட விரும்பியிருந்த அவரின் முயற்சிகள் கைகூடவில்லை. அச்சுப் பதிப்புக்களான யாழ்நகரில் அவரின் உறவினரிடம் கையளிக்கப்பட்ட அத்ததொகுதிகள் 1978 இல் கவிஞரின் மறைவுடன் பெட்டிக்குள்ளேயே துயிலத்தொடங்கி 1994 ஆம் ஆண்டில் யாழ்நகரின் இடப்பெயர்வுடன் முற்றாகவே அழிந்து போய்வி ட்டன என்பது, இலக்கிய தாகம் உள்ள எவராலும் ஜீரணித்துக் கொள்ள முடியாத சோகம் ஆகும்.

இது மட்டுமன்றி ஊரில் பேணப்பட்டு வந்த அவரின் ஏராளாமான மருத்ததுவச் சுவடிகளும் ஏனைய ஆக்கங்களும் 1983 ஆம் ஆண்டில் செட்டிக்குளப் பிரதேசத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வுடன் கைவிடப்பட்டு கறையானுக்கு இரையாகிப்போயின.

இந்நிலையில் காலவோட்டத்தில் மறக்கப்பட்ட, மறைந்த கவிஞனை மீண்டும் வெளியுலகிற்குக் கொண்டுவரும் முயற்சியில் நல்லுள்ளம் கொண்ட இலக்கிய பணியாளர் முனைந்தனர். இவர்களில் முதன்மையானவராக ஊடகவியலாளரான திரு க. கனகரவி அவர்கள் அவர் பற்றிய விபரங்களை பத்திரிகை, வானொலி போன்ற ஊடகங்களில் வெளியிட்டார். எழுத்தாளர்களான திரு. முத்துசிவன், விரிவுரையாளர் திரு ந. ரவீந்திரன், திரு பாபு போன்றோார் கவிராயர் பற்றிப் பதிவுகள் வெளியிட்டனர். அத்துடன் தமிழ்மணி அகளங்கன், விரிவுரையாளர் திரு க. ஸ்ரீகணேசன், ஆகியோர் வவுனியா கலைஇலக்கிய நண்பர்கள் வட்டாரத்தினரால் கவிஞரின் கவிதைகள் சிலவற்றுடன் அவரது ஈழத்துக்காவிய தீபனத்தின் மறுபதிப்பை 'அமுதகங்களை' என்னும் பெயருடன் வெளிட தமது பங்களிப்பை ஆற்றினர். அதைத் தொடர்ந்து கவிராயின் பிறந்த ஊரான இலுப்பைக்குளத்தில் ஆரம்பிக்கப்பட்ட 'வன்னியூர் கவிராயர் கலைஇலக்கியப் பேரவை' முன்னெடுத்த முதல் நிகழ்வான கவிராயரின் சிலை திறப்பும் நூல் வெளியீடுகளும் அமைந்திருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிராயரின் கதைகளும், கவிதைகளும் இவ்வளவுதான் ஏனையவற்றைப் பெறமுடியாது என்று முத்திரையிடப்பட்ட நிலையில் கவிராயர் கலையிலக்கியப் பேரவையினர் எழுது தேடலைத் தொடங்கினர். கொழும்பு சுவடிகள் காப்பகத்தில் குறிப்பிடப்பட்ட 25 வருட காலப் பத்திரிகைகள் கட்டுக்களிடையே ஓயாது தேடியதில் மேலும் புதிதாக 10 சிறுகதைகள் மேலும் 20 கவிதைகளைக் கண்டுபிடித்தனர். பணியாளர்களிடம் சேகரித்ததில் அரிதான சக்கரபந்தம், நாகபந்தம் கவிதைகள் சில கிடைத்தன. இவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்துத் தொகுத்து 20.06.2015 அன்று கௌரவ முதலமைச்சர் சி. வி. விக்கினேஸ்வரன் தலைமையில் சிலை திறப்பும், நூல் வெளியீடுகளும் அரங்கேறின இச்சிலை தாபிப்பதற்கான நிதிப் பொறுப்பை திரு கனகரவி அவர்கள் பொறுப்பேற்று இருந்ததார். இந்நிகழ்வில் வெளியிடப்பட்டநூல்களின் விபரம் வருமாறு

1) வன்னியூர்க் கவிராயர் சிறுகதைகள்
2) வன்னியூர்கவிராயர் கவிதைகள்
3) இனியொருகாலம் இதுபோல் வருமா. கவிராயர் பிறந்து வளர்ந்த இரட்டைக் கிராமங்களைப்பற்றியது.

இம்மூன்று நூல்களும் வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியின் விரிவுரையாளர் திருமதி நெலோமி அன்ரனி குரூஸ் அவர்களினால் தொகுத்தும், எழுதியும் கவிராயர் கலைஇலக்கிய பேரவையின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டன.

4) ஈழத்துக்காவிய தீபகம் - 1973ம் ஆண்டு கவிராயர் வெளியிட்ட அதே அட்டைப்படத்துடன் மாற்றமின்றி மீள்பதிப்பு செய்யப்பட்டது – அனுசரனை கவிராயர் கலைஇலக்கிய பேரவை.

5) தமிழொளி – விழாமலர் - திரு க. கனகரவி அவர்களின் நிதியுதவியுடன், திருகனகரவி, வன்னியூர் கவிராயர் கலை இலக்கிய பேரவை கூட்டு இணைவில் வெளியிடப்ட்டது.

கவித்திறத்தால் உள மருத்துவமும், சுதேச மருத்துவத்தால் உடல் மருத்துவமும் செய்த கவிராயரின் புகழ் இனி மங்கப் போவதில்லை. குழந்தைப் பேற்றுக்களாகவும், வாழ்வின் இடர் நீங்கிச் சிறப்படையவும் கவிராயர் பாடிய பதிகங்கள் எண்ணி லடங்காதவை. ஒரு சில கிடைத்துக் கொண்டிருக்கின்றன.

குக்கிராமத்தில் இருந்து குவலயத்தை வெல்லத் துடித்த அக்கவிஞன் பற்றி மறைந்த எம்பிரதேச கவிஞன் வன்னிமைந்தன் ஆப்தீன் அவர்கள் குறிப்பிடும் வரிகள் இவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுபதுகளில்
உள்ளூர்ப் பார்வை
ஒன்று
உலகப்பார்வையானது
ஒரு குப்பி விளக்கில்
குவலயம் தெரிந்தது
ஒருஊற்றுப் பேனா
வரலாற்றை எழுதியது

வன்னிமகன்
இப்போது தான்
புண்ணாகிக் கிடக்கிறது
ஆனால்
இருபதாம் நூற்றாண்டுகளின்
இருபதுகளில்
ஒரு பொன்னை ஈந்தது.

அவன் இதயத்தில் வடித்த
எழுத்துகளின் வரிகளில் தான்
நாம் நடக்கின்றோம்.

உண்மைதான் அறிவுச்சுடர் வீசிய அற்புதக் கலைஞனின் சிந்தனைகளும் செயல்களும் ஒருவகையில் கிராமத்தின் வழிகாட்டியாகத் திகழ்கின்றன. நாடகக் கலைஞர்களையும், கவிஞர்களையும், மருத்துவர்களையும் தன்னுள் உள்ளடக்கி காலத்தால் தொலைத்த இக்கலைக் கிராமத்தை மீளவும் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு கலையுணர்வு கொண்ட உள்ளங்களைச் சார்ந்து நிற்கின்றது. தமது முதுசம் பற்றி அறிந்து கொள்ளாது ஆற்றல்களை வீணடித்துக் கொண்டிருக்கும் இளம் சந்ததியினரின் விழித்தெழல்தான் மீண்டுமொரு கலைக்கோவிலைக் கட்டி எழுப்பல் இயலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு: மு.மோகனதாசன்
விரிவுரையாளர்
சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கை நிறுவாகம்
கிழக்கு பல்கலைகழகம்

## உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது...

(சுவாமி விபுலானந்தரின் சிந்தனைத்துளியொன்றை அடி நாதமாகக்கொண்டு இளைஞர்களை நோக்கி சில கருத்துக்கள்)

"உன்னிடம் இருக்கும் திறமையை நீ நினைத்துப்பார், எழுந்து நீ உன் ஞானத்தை வெளிப்படுத்து, உனக்குள் மறைந்திருக்கும் ஞானத்தின், அறிவின், சக்தியின் மகத்துவத்தை நீ உணர்ந்த அடுத்த நிமிடம், உலகம் உன்னிடம் வசப்படும்" என இளைஞர்களைப் பார்த்து சுவாமி விவேகாநந்தரால் குறிப்பிடப்பட்டபடி இளைஞர்களே இன்றையின், நாளையின் சக்திகள்.

சமூகத்தின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் இளைஞர்கள் பங்கு கொள்வது தவிர்க்க முடியாததாகின்றது. தான் சார் சமூகத்தின் நடத்தைகளில் அவர்கள் கணிசமான பங்கினை எடுத்துக் கொள்கின்றனர். கல்வி, சலாசாரம், விளையாட்டு, சுயதொழில், சமய வழிபாடு மற்றும் சமூக தலைமைத்துவ செயற்பாடு என எல்லாவற்றிலும் இளைஞர்களின் ஈடுபாடு தேவையாக இருக்கின்றது. இன்று எல்லோரும் எல்லா விடயங்களிலும் மாற்றம் தொடர்பில் பேசுகின்றோம். சமூகத்தின், நாட்டின், உலகத்தின் மாற்றம் என்பது அது இளைஞர்கள் கைகளிலேயே உள்ளது. அவர்கள் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஏதுவான முகவர்கள் என்ற வகையில் பூரண உள்ளார்ந்த மிக்கவர்களாக செயற்பட்டு தமது சமூகத்தை வழி நடாத்தவும் சேர்ந்து நின்று அடுத்த கட்டத்திற்கு சமூகத்தை கொண்டு செல்லவுமான உள பலத்தினை இந்தப்பொது வெளி வழங்குகிறதா? என்பது இன்றையின் பிரதான கேள்வியாகின்றது.

சிக்மண்ட் பிராய்ட் உளவியல் சார்ந்து மூன்று விடயங்களைக் குறிப்பிடுகின்றார். அவையாவன, உள்முனைப்பு உந்துதல் **Id**, தன்முனைப்பு உந்துதல் Ego, உயர் தன்முனைப்பு உந்துதல் Super ego என்பனவாகும். உள்முனைப்பு உந்துதலானது அடிப்படை உணர்வின் வழி பெரும் ஆற்றலைக்கொண்டது. உள் முனைப்பின் முழுநோக்கம் இன்பம் அடைதலே **(Pleasure principle)**. நன்மை, தீமை, அறம் போன்றவற்றை சிந்திக்காதது இது. இவ்வியல்புகள் மனித நனவிலியில் இருப்பவை.

மனித ஆளுமையை உருவாக்கும் அறிவாற்றல், செயலாற்றல், சோதனை செய்துபார்த்தல், மதிப்பீடு செய்தல், திட்டமிடல், தற்காத்தல் போன்றவற்றுக்குத் தன்முனைப்பே பொறுப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்குபடுத்தப்பட்ட எண்ணங்களால் நம்மையும் உலகையும் புரிந்துகொள்ளச் செய்வது தன்முனைப்பு. உள்முனைப்பும், சமூகப் புற நடவடிக்கைகளும் எதிரெதிராக இயங்கும் நிலையில் அவற்றைச் சமப்படுத்த அரும்பாடுபட்டுப் பதற்றங்களுக்குள்ளாவது தன்முனைப்பு. இது தன்னை முன்னிலைப் படுத்துவதாக அமையும்.

உயர் தன்முனைப்பு என்பது, பெற்றோர், ஆசிரியர்கள், உயர் முன்மாதிரிகள் போன்றோர் போல மனத்தில் செயல்படும் இலட்சியப் போக்கு. எண்ணம், செயல் முழுச் சிறப்பாக அமைய வேண்டும் என வற்புறுத்துவது இப்போக்கு. முற்றிலும் உள்முனைப்பைக் கடிவது இது. தவறான உணர்ச்சிகள், எண்ணங்கள் தோன்றினால் மனத்தைக் கண்டிப்பது உயர் தன்முனைப்பு. இதனையே மனச்சாட்சி என்கிறோம். மனச்சாட்சியே குற்றவுணர்வைத் தோற்றுவிப்பது.

விலங்கு மனிதன், அறிவு வயப்பட்ட தனிமனிதன், பொதுநல நோக்கமுடைய சமூக மனிதன் என்ற படிநிலைக்குக் காரணமானவையே மேற்குறிப்பிட்ட உள்முனைப்பு, தன்முனைப்பு, உயர் தன்முனைப்பு ஆகியனவாகும். இந்த உணர்வு உந்துதல் மற்றும் தன் முனைப்பு உந்துதல் என்பன பல சமூகவியற்சிக்கல்களை உருவாக்கி விடுகின்றன.

தன்னைப்பற்றி மிகத்தாழ்வான சுய எண்ணக்கருவைக்கொண்டிருப்பவர்கள் தன்னுடைய திறன்களை மிக மட்டமாக மதிப்பிடுவதால், உணர்வெளிச்சியால் உருவாகும் தாழ்வுச்சிக்கலால் தமது மனப்பான்மையை மூடி மறைப்பதற்கு ஆக்கிரமிப்பு, வன்முறை போன்ற தன்முனைப்பு பிரதியீட்டு நடத்தையில் ஈடுபடுகின்றனர். தனிப்பட்ட பழக்க வழக்கங்கள் பண்புகளால் மற்றையவர்களில் இருந்து வேறுபடும் சிலர், தமது தோற்றம், நடத்தைகள் மற்றவர்களில் ஏற்படுத்தப்படும் துலங்கலைப்பற்றி அக்கறை காட்டாமல் தமது உணர்வின் வழியே விசித்திரப்போக்கான நடத்தையினைக்கொண்டிருப்பர். நல்ல முறையில் மற்றவர்களின் கவனத்தைப்பெற முடியாத சிலர் சில தேவையற்ற குழப்பமான நடத்தைகள் மேற்கொண்டு தம்பால் கவனத்தை ஈர்க்கவும் முயற்சிப்பர்.

இன்னும் சிலர் தங்களது குற்றங்கள், தாழ்வுகள், பிழைகள் ஆகியவற்றை மறைப்பதற்கு மற்றவர்களில் புறத்தேற்றி அவர்களில் இத்தகைய குற்றங்கள் இருப்பதாகக்குறை கூறுவர். மேலும் சிலர், மற்றவர்களின் பரிதாபத்தைப் பெறுவதற்காகத் தம் நிலையை உண்மைக்குப்புறம்பாகத் தாழ்த்திக்கூறி, மற்றவர்களின் பரிதாபத்தைப்பெற்று அதில் சந்தோசமடைவர். இத்தோடு பொய் பேசுதல், களவெடுத்தல், அமைதியின்மை, நம்ப முடியாத தன்மை என்பனவும் அறநெறி விருத்திகளில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. வன்செயல் நடத்தை தற்காப்பு நுட்பமுறையாகக் கருதப்படுகிறது. மனமுறிவுகள் ஏற்படும்போது அவற்றைச் சமாளிப்பதற்காக ஒருவர் வன்செயலில் ஈடுபடலாம். வன்செயல்கள் நேரானதாக, மறைமுகமான, இடம்பெயர்ந்ததாகவும் அமையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக தேவைகள் நிறைவேறாத பட்சத்தில் சமூக பொருத்தப்பாடுகள் அற்றவர்களாகவும் இவர்கள் காணப்படுவர். இளைஞர்களுக்கு குடும்பம் சகபாடிகள் ஆகியோரால் வழங்கப்படும் சூழல் இந்நடத்தைகளில் முக்கிய செல்வாக்கினைச் செலுத்துக்கினறன.

இவ்விளமைப் பருவத்தில் இளைஞர்கள் பல்வேறுவகையான பிரச்சனை-களையும், சவால்களையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது. அத்தோடு இவ்விளமைப் பருவமானது உடல், உள, சமூக விடயங்கள் தொடர்பிலும் மிக முக்கியமான பருவமெனக் குறிப்பிடலாம். அத்தோடு சாதனைகள் புரியக் கூடிய வயதாக இவ்விளைமைப் பருவம் காணப்படுகிறது. இந்த வகையிலேயே உணர்ச்சி உந்துதலும் தன்முனைப்பு உந்துதலும் தொழிற்பட ஆரம்பிக்கின்றன. இவை உடல், உள. சமூக ரீதியாகவும் தாக்கம் செலுத்தும். இப்பருவத்தில் ஏற்படும் மாற்றங்களை தனது நெருக்கமான நண்பர்களிடம் பகிர்ந்து கொள்வார்கள். சில வேலைகளில் நண்பர்கள் கொடுக்கும் பிழையான ஆலோசனைகளாலும், வழிகாட்டல்க-ளாலும் முழு வாழ்க்கையும் பாதிப்புறும் அபாயமும் இருக்கிறது. அத்தோடு மனிதன் உடல், அறிவு, ஆன்மா என்ற மூன்றையும் கொண்டிருந்தாலும் கூட பெரும்பாலான இளைஞர்கள் உடலையும் அறிவையும் கவனித்து விட்டு ஆன்மாவை முற்றாகப் புறக்கணித்து விடுகின்றார்கள். இப்புறக்கணி-ப்பானது முழு வாழ்வையும் பாதிப்புறச் செய்யும். இவ்வாறான வற்றுக்குக் காரணியாக இளைஞர்களை மட்டும் குறிப்பிட முடியாது. ஏனென்றால் இளைஞர்கள் வழிகாட்டல் பெற வேண்டியவர்கள். அத்தோடு பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துக் கொண்டிருப்பவர்கள்.

இன்று தற்கொலை மிகப்பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. 15- 29 வயது உள்வர்களில் தற்கொலையானது இறப்பிற்கான இரண்டாவது காரணமாகின்றது. மனவழுத்தம், இரு முனையப்பிறள்வு, மனப்பிதழ்வு போன்ற உளவியல் தாக்கங்களில் மனவழுத்தமே தற்கொலைகளுக்கு பிரதான காரணங்களாகின்றன. 170 நாடுகளைக் கொண்ட உலக தற்கொலை தரவரிசைப் பட்டியலில், தென் அமெரிக்க நாடான கயானா மற்றும் தென் கொரியா போன்ற நாடுகள் முதலாம் இரண்டாம் இடங்களைப்பிடிக்க இலங்கை மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. உலக மயமாக்கலும் உயர் தொழிநுட்பமும் மனிதர்களை தனியன்களாக மாற்றிக்கொண்டிருக்கும் இச்சூழலில் இளைஞர்கள் சார்ந்து மிகத்தீவிரமா-கச்சிந்திக்க வேண்டியுள்ளது. இந்த இடத்தில் சுவாமி விபுலானந்தரின் சிந்தனைகள் கவனிக்கத்தக்கன.

அடிகளார் கீழைத்தேய சிந்தனை மரபில் முனிவர்களதும், சித்தர்களதும், துறவிகளதும் ஒழுக்க வாழ்வியல்களிலும் சிந்தனைகளிலும் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். இந்திய அல்லது தமிழர் வாழ்வியலின் அர்த்தத்தை உணர்ந்து கொண்டவர். இவர் தனது வாழ்வில் கடமையின் மூலமாக பல சாதனைகளைச் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் மனிதனாக வாழ்வதற்கு புலன் அடக்கமும், தியானமும் அவசியமென சுவாமி அவர்கள் அவரது கட்டுரைகள், கவிதைகள், நூல்கள் ஆகியவற்றினூடாக உணர்த்தியது மட்டுமல்லாது வாழ்ந்தும் காட்டினார்.

புலனடக்கத்தின் இன்றியமையாமை பற்றிக்குறிப்பிடும்போது துறவிகள் மட்டுமன்றி இல்லறத்தாரும், குறிப்பாக இளைஞர்களும் புலனடக்கத்தை மேற்கொள்வதால் ஏற்படக்கூடிய மாபெரும் நன்மைகள், புலன்வழி செல்வதால் ஏற்படும் மாபெரும் தீங்குகள், அழிவுகள் பற்றி நுணுக்கமாக பல கருத்துக்களை கூறுகின்றார். புலன்களை அடக்குவதன் மூலம் அரும் பெரும் சாதனைகளைச் செய்யலாம் என "விபுலாநந்த உள்ளம்", "விபுலாநந்த அமுதம்" எனும் இரு கட்டுரைத் தொகுதிகளிலும் உள்ள கட்டுரைகள் விசேடமாக உணர்த்துகின்றன. மனிதன் பௌதீக உலகில் வாழ்ந்து பௌதீக உலகு தொடர்பான விடயங்களை கருத்தியல் ரீதியாக உணர்வதற்கு புலனடக்கமும் தியானமும் முக்கியமான கருவிகளென சுவாமிகள் பல இடங்களில் சுட்டிக் காட்டுகின்றார்.
ஆகவே இன்றைய சூழலில் இளைஞர்கள் தமது ஆன்மாவினைப்புடம் போடுகின்ற புலனடக்கம் மூலம் தனக்கும் தன்சார் சமூகத்திற்கும் அளப்பரிய நன்மைகளை வழங்க முடியும் என்பதே அடிகளார் தமது வாழ்வியலின் மூலம் உணர்த்தியிருக்கும் உண்மையின் தத்துவமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நா.நிதுசிகா
தரம் - 05
வ/ செட்டிக்குளம் ம.வி

## முதல் தெய்வம்



கருவறை தனிலே எனைத்தாங்கி
கஷ்டங்கள் பலவாய் அவள் ஏற்று
மகவாய் எனையே மண்ணில் தந்த
மாதாவே என் முதல் தெய்வம்

ஆடை அணிகள் எனக்கெனப்பூட்டி
அழகு பார்ப்பாள் என் தெய்வம்
குடுகுடு நடந்து கை நீட்ட
கொஞ்சி மகிழ்வாள் என் தெய்வம்

அன்பு, அக்கறை, அரவணைப்பு, பாசம்
நேசம், தியாகம் எனப்பல உணர்வுகளையும்
ஒரே இடத்தில் பெற முடிந்தால் அதுதான்
உண்மையாக வாழும் தெய்வம்.

கல்லில் செதுக்கிய கடவுளைவிட
என்னைக் கருவில் சுமந்த
என் தாயே என் உயிரே
என் முதல் தெய்வம் அம்மா.

தாய்மையின் வலி என்னவென்று
எனக்கும் தெரியும் அதனால்தான்
அன்று அம்மாவுடன் சேர்ந்து நானும்
அழுதேன் நான் பிறக்கையில்.

என் வாழ்நாளில் நான் நேசிக்கும்
முதல் தெய்வம் அம்மா
நான் எப்பொழுதும் இழக்க விரும்பாத
பொக்கிசமும் என் அம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ.மிருதுளா
வ/ கணேஸ்வரா ம.வி

## பாரதக் கலையின் தனித்துவமான பண்புகள்

பழந்தமிழ் சாஸ்திரீய கலைகளுள் ஒன்றாக எமது பரத நாட்டியக்கலையானது எமது பண்பாட்டின் தொன்மையை, நன்மையை, தெய்வீக மேம்பாட்டினை, மகிமையினை, பெருமையினை, அருமையினை எமக்கு எடுத்துக் காட்டுகிறது. பலவாறும் போற்றப்படும் பரதக்கலை ஒரு சிறப்புமிக்க வடிவம் நளினத்தோடும் பாவங்களோடும் விண்ணில் உலாவும் மண்ணில் கால் மிதித்து ஆடும் தெய்வீகக்கலையாகப் பரதம் விளங்குகின்றது.

"பரதம்' என்றும் "பதம்' எவ்வடிப்படை மூலங்களைக் கொண்டு பிண்ணிப் பிணைக்கப்பட்டுள்ளது. என்பது அறிதல் பொருத்தமானது. பரதக்கலையின் முகக்கண்களாகத் திகழ்வது. "பாவம், இராகம், தாளம்" என்றும் தெய்வீகக்கலைக் கூறுகளாகும். இம் மூன்றும் சொற்களிலும் முதல் எழுத்துக்களாக திகழ்வன பரத எழுத்துக்களாகும். அதே மூன்று செற்களிலும் இறுதி எழுத்தாகத் திகழ்வது "ம்" எனும் எழுத்தும் சேர்ந்து பரதம் எனும் பதம் பெறப்படுவது தனிச் சிறப்பாகும்.

பரத நாட்டியம் கவர்ச்சிகரமான நடனங்களில் ஒன்றாகும். தற்போது தமிழ் நாட்டினை மையப்படுத்தி திகழ்ந்தாலும் இந்தியா அனைத்துக்கும் பொதுவான நுண்கலை வடிவமாக விளங்குவது சிறப்பம்சமாகும். இந்நடனத்திற்குரிய முக்கிய பல நூல்கள் "நாட்டியசாஸ்திரம், அபிநயதர்ப்பணம், அபிநயசாரசம்புடம், பரதசித்திரம்" போன்றவை.

பரதக்கலையானது இந்துப்பண்பாட்டினை இந்த சமய அடிப்படைத்தத்துவங்களை விளக்கி நிற்கும் தனித்துவமுடையது. சமய நோக்கிலே இறைவன் வழி வந்த கலையாகக் கொள்ளப்படுகிறது. இறைவனே பல்வேறு நிலைகளில் பல்வேறு ஆடல்களை ஆடினார். சிவன் ஆடிய ஆடல்கள் ஒவ்வொன்றும் சமய தத்துவக் கருத்துக்கள் பொருந்தியவை நடராஜர் தனித்துவமானது. பிரபஞ்சத் தோற்றம் ஒடுக்கம் என்பவற்றை சுட்டி நிற்கின்றது. அத்தோடு இக்கலை அக உலகிற்கே முக்கியத்துவம் கொடுக்கும் தனித்துவமான சிறப்பினைக் கொண்டது.

பரதக்கலையின் இன்னொரு பண்பாக விளங்குவது சிவபக்தி மரபாகும் இன்றைய பரத நாட்டியத்துறை இடம்பெற்று விளங்கும் பக்தி மரபுகளில் சிறப்பிடம் பெற்று திகழ்வன தஞ்சாவூர் பந்தனை நல்லூர், வழுவூர் காஞ்சிபுரம் மரபுகளாகும். இப்பக்தி மரபுகள் பரதனின் அடிப்படை ஆட்டமுறை மீது ஆசிரியர்களின் மனோதத்துவத்திற்கும் கற்பனைத் திறத்திற்கும் அமைய அவ்வவ் ஊர்களைச் சேர்ந்த பிரபல்ய ஆசிரியர்களால் வளர்க்கப்பட்டு வந்த உத்தி துறைகளே பரதக்கலையின் தனித்துவமான பண்பினை எடுத்துக் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சிகளுடன் கலந்த சமூக நேர்விடயங்கள் (விழுமியங்கள்) பாத்திரங்களாலும், அசைவுகளாலும், அபிநயங்களாலும் குறியீட்டு இடைவினைகளாலும் இனையியல் (தெய்வீக அடிப்படை) தளத்தில் நின்று பரதநாட்டியம் எடுத்துக் காட்டுகின்றது. எனவே இவ் நாட்டிய சிறப்பு பண்பாக தூய்மை, செம்மை, அங்க சுத்தம், நளிமை என்பவை விளங்குகின்றது.

சமூக மானிடவியல் மனித நிலையை மேம்படுத்துவதற்கான சடங்குகளில் பிரித்தல் நிலை மாற்றுதல் புதிய நிலைகளில் ஒன்றுபடவைத்தல் என 3 பரிமாணங்கள் காணப்பட்டன, இம் 3 பிரிவுகளையும் உள்ளடக்கிய முழுமை பரத நாட்டிய கச்சேரி அமைப்பிலே காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

- அலாரிப்பு கச்சேரிகளில் அமைப்பில் முதலில் இடம் பெறுவது முன்னைய உலகத்தலதத்தில் இருந்து வேறொரு உலகத்தலத்திற்கு பிளைத்து செல்வதை புலப்படுத்தும்.

- பதம், வர்ணம், சப்தம் என்பன உணர்வுகளை நிலை மாற்றுவதற்கும் பொருத் தமானவை.

- தில்லானாவும் மங்களமும் புதிய நிலைகளில் ஒன்று பட வைப்பதற்கான தாளக் காட்டுக்களையும், அசைவுகளையும் கொண்டவை.

பிரித்தல் நிலைமாற்றுதல் புதிய நிலைகளில் ஒன்றுபட வைத்தல் என்பவை பிரபஞ்ச பற்றிய அறிவுறுத்தலுடன் இணைந்திருத்தல். சடங்குகளிலே காணப்படும் ஒரு பொதுவான பண்பு பரதநாட்டியத்தின் தனித்துவமான பண்பு ஆகும்.

பரதம் மேலைத் தேய அரங்கியலில் துன்பமே ஆழமானதும் அதியகலை விசைகளை ஏற்படுத்தக் கூடியதும் என்ற கருத்து மேலோங்கி நிற்கின்றது "துன்பம் மட்டுமே தமது உணர்வுகளில் தனித்துவரும் வலிமை மிகுந்து நிற்கையில் பொருத்தமான நிலையில் அவற்றை வெளியிடும் பொழுது மீண்டும் உறுதி எம்மிடத்தே தோன்றுகின்றது." என்ற மேல் நாட்டவரின் கூற்று மேலைத்தேசகலைகளின் துன்பவியல் மரபின் ஆழத்தைச் சுட்டிக் காட்டுகின்றது. ஆனால் இந்தியக்கலை மரபிலும் சிறப்பாகப் பரத நாட்டிய மரபிலும் துன்பம், இன்பம் என்பவற்றை உள்ளடக்கிய சமநிலைப் பண்புகள் வேரூன்றி உள்ளமை இதற்கேயான தனித்துவமான பண்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி நவதீசன் உதயலதா
வ/செட்டிக்குளம் மகாவித்தியாலயம்.

## பாரதிக்குப் பின்னர் தமிழ்க் கவிதை – ஒரு நோக்கு

'தமிழ் பாரதியால் தகுதி பெற்றதும்
தமிழால் பாரதி தகுதி பெற்றதும்
என்னவென்று சொல்வேன்'

என்று பாரதிதாசனால் மணியாரம் சூட்டப் பெற்றவன் பாரதி. இத்தகைய பாரதி தமிழ்க் கவிதை வரலாற்றின் மைல்கல்லாகவும், திசைகாட்டியாகவும் கருதப்படக் காரணம்தான் என்ன? இதற்கு விடை காண கவிதை பற்றியும், பாரதி பற்றியும் அறிய வேண்டிய தேவை உள்ளது.

கவிதை என்றால் என்ன? அது எவ்வாறிருக்கும்? என்று முடிவான வரையறைக்குள் உட்படுத்தக்கூடியதல்ல கவிதை. ஆயினும், படைப்பாளி ஒருவன் தனது மன உணர்ச்சியை வெளிக் கொணர்வதற்குரிய மிகச் சிறந்ததோர் இலக்கிய வடிவமாக கவிதை கொள்ளப்படுகிறது. 'அகவயமான தனிமனித உணர்ச்சியைப் பொதுநிலைப்படுத்த கவிதையே மிக வசதியாக உள்ளது' என்பது பலரது கருத்தாகும்.

தமிழ் உணர்வைத் தட்டியெழுப்பி நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலவாக ஒளி வீசிய கவிஞன் பாரதி. அவரது பாடல்கள் மொழிப்பற்றுக்கு ஒரு விழிப்புணர்வு. ஆன்மீகத்துக்கு ஒரு கலங்கரைத் தீபம். நாட்டுப்பற்றுக்கு ஒரு நாற்றங்கால். என்றெல்லாம் பேசப்படும் பாரதியின் சாதனையை ஒற்றைப் படையாகக் கூறின், தமிழ் மொழியின் பயன்பாட்டைப் பொதுமக்கள் நிலைப்படுத்தலுக்கான குரலைக் கொடுத்ததும், அந்தச் சாதனையைச் செயல் சாதனைப்படுத்தும் படைப்புகளை முன்வைத்ததுமாகும். இந்த இரண்டு சாதனைகளும் தமிழின் இலக்கிய ருசிப்பில் ஒரு புதிய செல்நெறியை உண்டாக்கின. தமிழிலக்கியம் புதிய உணர்முறையையும். உணர் திறனையும், அழகியல் உணர்வையும் பெற்றது. 'பாரதி திறந்து விட்ட கதவும், தளர்த்தி விட்ட பொருளும் பின் வந்த தேவைகளைப் பூர்த்தி செய்வனவாக அமைந்தனவையே.' (சிவத்தம்பி. கா. தமிழின் கவிதையியல்: ப 170)

'பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே'

என்ற நன்னூலாரின் சூத்திரம், மரபு என்பது அசையாத குட்டை அல்ல. அது வேகமாக ஓடும் காட்டாறு. காலத்துக்குக் காலம் மாறும் இயல்பினது. என்ற கருத்து நிலையை எம் முன்னே வைக்கிறது. இதனை உள்வாங்கிய பாரதியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் வகையில் முன்பு பழக்கத்தில் இருந்து வருகின்ற மரபு ரீதியாக அமைந்த ஒன்றிலிருந்து மாறுபட்டு அல்லது அதை மீறித் தோன்றுவது புதிது. மரபு ரீதியான, யாப்பு இலக்கணத்தோடு ஒட்டிய கவிதைகளில் இருந்து மாறுபடும் இக் கவிதைப் படைப்பு புதுக் கவிதை எனப்பட்டது. வசனத்தை மீறிய, ஆயினும், கவிதையின் பூரணத்துவத்தை எய்தாத உரு முயற்சியாக அவர் படைத்துள்ள வசன கவிதைகளே 'காட்சிகள்'.

இவ்வுலகம் இனியது
இதிலுள்ள வான் இனிமையுடையது
காற்றும் இனிதுஞு தீ இனிது
நீர் இனிதுஞு நிலம் இனிது
ஞாயிறு நன்றுஞு திங்களும் நன்று
வானத்துச் சுடர்களெல்லாம் மிக இனியன
மழை இனிதுஞு மின்னல் இனிது
இடி இனிது.

இவ்வாறு பாரதியால் திருப்பு முனையடைந்த கவிதையானது பாரதிக்குப் பின் எவ்வாறு வளர்ந்து வந்தது? ஈண்டு நோக்குவோம்.

பாரதிக்குப் பின்னரான கவிதை வளர்ச்சியிலே, மணிக் கொடி, எழுத்து, கசடதபற சஞ்சிகைகளின் பணிகள் விஸ்தாரமானவை. மணிக்கொடி காலம், எழுத்துக்காலம் என்று குறிப்பிட்டுக் கூறுமளவிற்கு அவற்றின் பணிகள் இருந்திருக்கின்றன.

இவ்வாறு, பாரதிக்குப் பின், கவிதை வளர்ந்த வரலாற்றைக் கட்டுரையின் விரிவஞ்சி மூன்று வளர்ச்சிக் கால கட்டங்களாக நோக்கலாம், அவை,

முதற் காலகட்டம் - 1930 – 1950
இரண்டாங் காலகட்டம் - 1950 – 1970
மூன்றாங் காலகட்டம் - 1970 களின் பின்

ஆயின், குறித்த கவிஞன், குறித்த வளர்ச்சிக் கால கட்டத்தினுள் மட்டும் தான், தன் கவியாற்றலை வெளிக்கொணர்ந்தான் என்றில்லை. பெரும்பான்மை நோக்கில் குறித்த காலகட்டத்துள் அவன் கவிதைகள் உள்வாங்கப்பட்டிருக்கின்றன.

முதற்கால கட்டத்திலே, மணிக்கொடி குழுவினர் பாரதியின் வசனப் பதிவுகள் சிலவற்றை அடிப்படையாகக் கொண்டும் மேலைநாட்டுக் கவிஞர்களாகிய எஸ்ராபவுண்ட், எஸ்எலியட்டு, வோல்ற் மில்ரன் போன்றோரின் கவிதைகளைக் கொண்டும் வசனகக் கவிதைகைள் எழுதினர். புதுக் கவிதையின் ஆரம்ப கால கட்டமாகிய இக்காலத்தில், ந. பிச்சமூர்த்தி, கு.ப.ராஜகோபாலன், புதுமைபித்தன், க.ந.சுப்பிரமணியன் போன்றவர்கள் புதிய கவிதை முயற்சியில் ஈடுபட்ட போதிலும், சம காலத்தில், பிரசுர வசதிக்கேற்றதாய் மணிக்கொடி, கலாமோகினி, கிராம ஊழியன், சிவாஜி, சூறாவளி போன்ற சஞ்சிகைகள் இருந்த போதிலும் குறிப்பிட்டுக் கூறக்கூடிய அளவில் புதுக் கவிதையின் வளர்ச்சி இருக்கவில்லை. ஆனாலும் பிற் காலங்களில் புதுக்கவிதை ஓர் இயக்கமாக வளர்ந்து தமிழ்க் கவிதை வரலாற்றில், உரிய அங்கீகாரம் பெறுவதற்கான அடித்தளம் இங்குதான் இடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்தில் புதுக்கவிதை முன்னோடியாக ந. பிச்சமூர்த்தி 1934 இல், எழுதிய 'காதல்' என்னும் கவிதையே தமிழின் முதல் புதிய கவிதையாகக் கொள்ளப்படுகிறது. பாரதியை நேரடியாகப் பின்பற்றிய இருவரில் ஒருவர் பிச்சமூர்த்தி. பாரதியாரின் அனைத்துக் கவி வெளிப்பாடுகளிலும் ஈர்ப்புக் கண்டவராக இருந்தாலும், வசன கவிதையின் நடையினையே தனக்கேற்றதாக எடுத்துக் கொண்டவர். 1934 இல், ந. பிச்சமூர்த்தி எழுதிய 'காதல்' என்ற கவிதை இவ்வாறு அமைந்திருந்தது.

'மாந்தோப்பு வஸந்தத்தின் பட்டாடை உடுத்திருக்கிறது.
மலர்கள் வாசம் கமிழ்கிறது.
மரத்திலிருந்து ஆண்குயில் கத்துகிறது.
என்ன மதுரம்! என்ன துயரம்!
ஆண்குயில் சொல்லுகிறது
காதற் கனல் பெருக்கெடுத்து விட்டது
கரைகள் உடைந்து போயின
நெஞ்சத்தின் வேர்கள் கருகுகின்றன.
குயிலி! காதல் நீரை வார்த்துத் தீயை அணைப்பாய்
கருகிய வேர்களுக்கு உயிரை ஊட்டுவாய்
க்காவூ............ க்காவூ............'

வசன கவிதை எழுதும்போதே, மரபுவழிக் கவிதை போல், தோற்றம் காட்டுகின்ற கவிதைகளை எழுதுவதிலும் பிச்சமூர்த்தி நாட்டம் கொண்டிருந்தார். 'அக்கா குருவி' என்பது இத்தகையதொரு கவிதை. இதனைத் தொடர்ந்து கொம்பும் கிணறும், மார்கழிப் பெருமை, பொற்றாமரை போன்ற கவிதைகளை 1939 இல்மணிக்கொடி ஜெயபாரதி இதழ்களில் வெளியாகின. பிச்சமூர்த்தியைப் பின்பற்றி 1938 இல் கு.ப.ராஜகோபாலனும் வசன கவிதைகள் எழுதத் தொடங்கினர். இவரது ஆரம்பகாலக் கவிதைகள் மணிக்கொடி இதழில் பிரசுரமாகின. கு.ப.ராஜகோபாலன், ந.பிச்சமூர்த்தியில் இருந்து இவரது கவிதைகள் தொனியிலும், சொல்லிலும் பொருளிலும் மாறுபட்டிருந்தன. கிராமியக் காதலர்கள் பற்றி கிரமியப் பாங்கான கவிவை எழுதுவதில் அதிக உற்சாகம் காட்டினார். நல்ல வெற்றியும் கண்டார்.

இவர்களைத் தொடர்ந்து புதுமைப்பித்தன் 1934 இல் ஊழியன் இதழில், வெளிவந்த 'திரு ஆங்கில அரசாங்க தொண்டரடிப்பொடியாழ்வார் வைபவம்' என்ற கவிதையினை முதன்முதலாக எழுதினார். இவர், வேளுர் வெ. கந்தசாமிக் கவிராஜர் என்னும் புனைப்பெயரில் தன்கவிதைகளை எழுதி வந்தார். ஆயின் தன் சமகால வசன கவிதை முயற்சிகளைக் கடுமையாக விமர்சித்தவர். ஆனால் புதிய கவிதை முயற்சிகளையும் வரவேற்றார். இவரது கவிதைகள் எதுகை, மோனைகளுடன் கூடிய சப்த ஒழுங்குடன் மரபுக் கவிதை வடிவத்தை ஏற்றும், மீறியும் புதிய வடிவத்தில் அமைந்திருந்தன. இடைக்காலத் தனிப்பாடல்களின் நடையைத் தழுவி அமைந்தனவாகவும் இக் கவிதைகள் காணப்பட்டன. இந் நோக்கில் இவை முற்றிலும் புதியன அல்ல. உருவ அமைப்பில் பழமை தென்பட்டாலும். கவிதைக்கான விசயங்களும், பார்வையும் புதுமையானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிக்கொடி கிராம ஊழியன், காலமோகினி, சிவாஜி போன்ற இதழ்களிலும், கவிக்குயிலி மலரிலும் இவரது கவிதைகள் வெளிவந்தன. இவரது கவிதையமைப்பைப் பின்பற்றிக் கவிதைகள் எழுதியவர் சிதம்பர ரகுநான். 1939 ஏப்ரலில் 'சூறாவளி' எனும் வார இதழைத் தொடங்கிய க.நா.சுப்பிரமணியம் 'மயன்' எனும் புனை பெயரில் 'மணப் பெண்' என்கின்ற புதுக்கவிதையைத் தனது இதழிலேயே எழுதியிருந்தார்.

'திரையிட்டு மறைத்த முகமும்
பெண்மை ஏசும் பட்டாடையும்
மறைத்து வைக்கும்
உண்மை அறியா வண்ணம்
அழகி என்று அவளை அறிவதெப்படி....'

எனத் தொடர்கிறது அக்கவிதை

1942 இல் வெளியான கலாமோகினி இதழ் வசன கவிதைகளை வெளிடுவதில் மிகுந்த ஆர்வம் காட்டியது. வசன கவிதைகள் மட்டுமன்றி அவை தொடர்பான அபிப்பிராயங்களும் பிச்சமூர்த்தி, கு.ப.ராஜகோபாலனால் வெளியிடப்பட்டன. வல்லிக் கண்ணன் 1942 முதல் வசன கவிதைகளையே குறிப்பிடுகின்றார். இக் காலகட்டங்களில், எம்.வி.வெங்கட்ராம், தி.க.சிவசங்கரன் போன்றோரும் வசன கவிதைகளை எழுதியுள்ளார்.

பாரதியின் சமகாலத்தவரான பாரதிதாசன் பாரதியாரின் கவிதை மரபை முரணி ல்லாது பின்பற்றுபவராக இருந்தார். பாரதிதாசன் தனி ஆள்நிலைக் கவிதைகள் பலவற்றினை எழுதியவரெனினும், பாரதியின் மறைவுக்குப் பின்னர் படிப்படியாக சமூக அரசியல் முக்கியத்துவம் பெற்று வளர்த்த திராவிட இயக்கத்தின் முக்கியமான கவித்துவ வெளிப்பாடாக அமைந்தார். 1930 – 1940 களில் பிரதான தமிழ் இயக்கக் கவிதைகளில் புலனுணர்ச்சி ஈடுபாடு அதிகமாக இருக்கும். இவருடைய படிமங்கள் இதனை நன்கு வெளிக்கொணரும். குறிப்பாகப் பெண்கள் நிலைப்பட்ட எடுத்துரைப்புக்களில் இந்த உணர்திறன் தொழிற்படுவதைக் காணலாம். விதவைகளைப் பற்றிப் பாடும போது கூட,

'கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே – நன்கு
வேரிற் பழுத்த பலா
மிகக் கொடிய தென் றெண்ணிடப்பட்டதண்ணே – குளிர்
வடிக்கின்ற வட்ட நிலா'

என்று கூறுகின்றார். இவர் உணர்ச்சி ததும்பும் கவிதைகளை எளிய சொற்களில் அமைத்துப் பாடினர். இவருடைய பாடல்களைப் படிக்க இலக்கணம் தேவையில்லை.

பாரதிதாசனைப் போலவே தேசியவிநாயகம்பிள்ளையும் மக்களுக்காக மக்களைப் பற்றி, அவரிடையே வழங்கும் மொழியில் கவிதை இயற்றினார், பாடலுக்கு அழகு படித்தவுடன் விளங்காதிருத்தல் என்று அவர் கருதவில்லை. நாமக்கல் கவிஞர் இராமலிங்கப்பிள்ளை தமிழர் உள்ளத்தை நன்றாக உணர்ந்தவர். பொது மக்களும் படித்து விளங்கிக் கொள்ளும் நிலையில் எளிய இனிய தமிழ் நடையில் அவர் கவிதைகள் அமைந்திருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கன்னத்தில் முத்தமிட்டால் - உள்ளந்தான்
கள்வெறி கொள்ளுதடி
உன்னைத் தழுவிடிலோ – கண்ணம்மா
உன்மத்த மாகுதடி'

என்ற பாரதியார் பாடலும்,

'தமிழரின் சீர்தனைக் குறைத்துத்
தனியொரு சொல் சொன்னாலும்
பார்ப்பான் தன்னை
உமிழ்ந்திடுக மானத்தை
ஒரு சிறிது மிழக்காதீர்'

என்ற பாரதிதாசன் பாடலும்,

'கூவிப் பறக்குமொரு – கிளியினைக்
கூட்டில் அடைத்து வைத்தால்
தேவர் உலகமெல்லாம் - அது சினத்
தீயை எழுப்பிடும்'
என்ற தேசியவிநாகம்பிள்ளை பாடலும்,

'நாதமெனும் பிரமத்தைப் பணிவோம் ஆனால்
நாமறியா மொழியில் நமக்கேது நாதம்
கீதமென்று புரியாத பாட்டைக் கேட்டுக்
கிளர்ச்சி பெறா உணர்ச்சியிலே கீதம் ஏது.'

என்ற நாமக்கல் கவிஞர் பாடலும் இவர்கள் கையாண்ட எளிய நடைக்குச் சான்று பகரும்.

1950 – 1970 வரையான இரண்டாவது கால கட்டத்தை நோக்குகின்ற போது, இக் காலத்துக்குரிய கவிஞர்களோடு, முதற்காலகட்டக் கவிஞர்கள் சிலரும் உள்ளடங்குவர்.

பாரதி, பாரதிதாசன் வழியிலே, கண்ணதாசன், கம்பதாசன், கலைவாணன் முதலியோரும், பிறரும் இக் காலகட்டத்தில் கவிதைகளைத் தந்தனர். 'பாரதியும் பாரதிதாசனும்' என்ற கண்ணதாசனின் கவிதை கண்ணதாசனின் கவியாற்றலையும், பாரதி வழிவந்த பாரதிதாசன் பற்றிய காட்சிப்படுத்தலையும் எம் முன்னே கொண்டு வருகின்றது.

'களைமண்டிக் கிடந்த கனித்தமிழ் மொழியைக்
குளைநீக்கி வடித்த கவிஞன் பாரதி!
களை நீக்கித் தந்த கழனியில் பலவாய்
கனிக்காடு கண்டவர் பாரதிதாசன்!
. 1962 ஓகஸ்டில் வெளிவந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருள்சூழ்ந் திருந்த இவ்வைய முழுதும்
எழுகதி ரான இளைஞன் பாரதி!
எழுந்த கதிர்முன் மானிடச் சாதிக்கு
இரத்தம் ஊட்டினார் பாரதிதாசன்!

நிலைகுலைந் திருந்த நெஞ்சினைத் தூக்கி
'நில்' எனச் சொன்ன வல்லோன் பாரதி!
நிற்க வைத்த நெஞ்சினைத் தட்டி
நிலைக்க வைத்தவர் பாரதிதாசன்!

வகுத்தவன் முன்னோன் காத்தவன் பின்னோன்!
வாழும் தமிழன் காவலர் இவர்கள்!
இதுவே அக் கவிதை.

இக் காலகட்டத்தில் எழுத்து, கசடதபற இதழ்கள் கவிதை வளர்ச்சியில் பெரும்பங்காற்றின.

இக் காலப்பகுதியில், சிலர் ஆங்கிலச் சொற்களை மிதமிஞ்சிக் கலப்படம் செய்து அரைகுறைத் தமிழில் மேலைநாட்டுப் 'புதுக்கவிதை' கள் சிலவற்றை எதிரொலிக்கத் தொடங்கனர். உள்ளடக்கமாக மனமுறிவு, பாலியல் தடுமாற்றம், விரக்தி என்பனவெல்லாம் இடம்பெறலாயின. இவற்றோடு நம்பிக்கை வரட்சி, தெளிவின்மை, போலித்தன்மை, அன்னியப்பாடல், தமிழ்மரபு அறியாமை, வீண்பகட்டு, பொறுப்புணர்ச்சியின்மை, சமுதாயவிரோதம், மட்டுமீறிய தனிமனிதத்துவம் போன்றனவும் அமைந்திருந்தன. இவற்றில், யாப்பமைதி இல்லை என்றாலும், தமிழ்ச் சொற்களின் இயல்பான சொல்லமைதியும், பெரும-ளவுங்கூடு அருகிய நிலை காணப்பபட்டது. இதனால் கவிதைகள் பொருளற்ற பண்டங்களாய் மாறின. சிலர் கைகளில் புதுக்கவிதை தன்னையே அழித்துக் கொள்ளும் பரிதாப நிலையையும் எட்டிவிட்டது. ஆனாலும், அவற்றினின்றும் விலகிய நல்ல கவிதைகளும் வரத்தான் செய்தனபிச்சமூர்த்தியின், 'காட்டுவாத்து' ஒக்டோபரில் வெளிவந்த 'புதுக்குரல்கள்' 1964 ஏப்ரலில் வெளிவந்த 'வழித்துணை' போன்றன இத்தகையவை. மரபுக் கவிஞர் சிலர் இக் காலத்தில் புதுக் கவிதை எழுதினர். இதில் ஒரு தனிப் பார்வை இருந்தது, கற்கனை வளம், இனிய சொல்லோட்டம், கருத்தாழம் இருந்தன. 1963 இலக்கிய வட்டம், 1968 நடை போன்றன குறிப்பிடத்தக்களவு பங்காற்ற-யனவாகக் காணப்பட்டன.

1970 இற்குப் பிற்பட்ட கவிதை வளர்சியை மூன்றாங் காலகட்டமாக நோக்-கலாம். இக் கால கட்டத்தில், பொதுவுடைமைக் கொள்கைகள் முக்கியம் பெற்றன. தமிழ் நாட்டின் முற்போக்கு இலக்கிய இதழான 'தாமரை' புதுக்கவிதைத் துறையின் வளர்ச்சிக்குத் துணைப்புரிந்த. ஆரம்பத்தில் புதுக்கவிதை பற்றிய திறனாய்வை மேற்கொண்டது. தொடர்ந்து புதுக்கவிதைகளை வெளியிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1971 இல். 'நிகழ்காலத்தின் சாத்தியங்களையும், வருங்காலத்தின் மகோன்னதங்களையும் தரிசிப்பதற்காக உருவாக்கப்படும் இதழ் என்றவாறு 'வானம்பாடி' உருவானது. இக் காலம் மரபுவழிக் கவிஞர் சிலர் புதிய மரபுக்குத் தவழ்ந்தும், தாவியும் வந்தனர். கலைக் கண்ணோட்டதுடன், சமூக அறிவுடன் சிறந்த கவிதைகள் படைக்கப்பட்டன. கவிதை புலவர்களின் பிணிப்பிலிருந்த விடுபட்டு மக்களின் அரவணைப்பில் மகிழத் துடித்தது. முற்போக்கு எண்ணத்துடன் எண்ணற்ற கவிமடல்கள் வெளிவந்தன. இக் காலத்தில் தனிமனித வாதத்திற்கெதிரான சமூக யதார்த்த வாதம் தன் தத்ததுவப் பின்னணியோடும், பலத்தோடும் வியூகம் அமைத்துக் கொண்டது வானம்பாடி இதழ்களிலே. வானம்பாடிக் கவிஞர்களாக புவியரசு, கங்கைகொண்டான், சிற்பி, தமிழ்நாடன், அக்னிபுத்திரன், சக்திக்கனல், மு.மேத்தா, இரவீந்திரன், அப்துல் ரகுமான், மீரா, தமிழன்பன், ஞானி, பா.ஜெயபிரகாசம், பாலா, பிரபஞ்சன் போன்றோர் எழுதி வந்தனர்.

1970 இல் வைத்தீஸ்வரனின் 'உதயநிழல்' 1971 இல் மீராவின் 'கனவுகள் கற்பனைகள் காகிதங்கள்'. 1972 இல் இன்குலாப்பின், 'இன்குலாப் கவிதைகள்', 1973 இல், சோம் தமிழ்நாடனின் 'மண்ணின் மாண்பு', 1974 இல் மு.மேத்தாவின் 'கண்ணீர்ப் பூக்கள்', மீராவின் 'ஊசிகள்' வல்லிக் கண்ணனின் 'அமர வேதனை', அப்துல் ரகுமானின் 'பால்வீதி', 1975 இல், சிற்பியின் 'சர்ப்பயாகம்' முதலானவை இக் காலத்துக்குரியதான சில கவிதைத் தொகுதிகளாக வெளி வந்தன.

'வைகறைப் போதுக்கு
வார்த்தை தவமிருக்கும்
வானம்பாடிகளே – ஓ
வானம்பாடிகளே
இந்த
பூமி உருண்டையைப்
புரட்டி விடக்கூடிய
நெம்புகோல் கவிதையை

உங்களில் யார் பாடப் போகிறீர்கள்?' என்ற மு.மேத்தாவின் கவிதை சமூக மாற்றங்களை அவாவி நிற்கும் தன்மையைச் சுட்டுகின்றது.

1970 களில் வெளிவந்த தீபம், கணையாழி, ஞானரதம், வானம்பாடி, கொல்லிப்பாவை, யாத்ரா,ழ போன்ற இதழ்களுடன் 80 களில் வெளிவந்த ஸ்வரம், மீட்சி, லயம், முன்றில், காலச்சுவடு, விருட்சம், கனவு போன்ற சிற்றிதழ்களும் எண்பதுகளின் புதுக் கவிதை வளர்ச்சிக்குத் துணைபுரிந்தன. இக் காலத்தில்தான் ஜெயமோன் அறிமுகமானார். ரு. ஸ்ரீனிவாசன், ஆ. இளம்பரிதி 'ழ' இதழ் மூலம் புதுக் கவிஞர்களாக அறிமுகமானார்கள். இவர்களுடன் நகுலன், காசியப்பன், ஆத்மாநாம், பிரம்மராஜன், உமாபதி, தேவதச்சன், ஆனந்த், ஞானக்கூத்தன், ஆர். ராஜகோபாலன், எஸ். வைத்தியநான், சத்யன், சுகுமாரன், பசுவையா, ராஜசுந்தரராஜன், கவிதைகளும் வெளிவந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுக் கவிதையில் படிமங்கள், குறியீடுகள், அதீதமான பிரயோகங்கள் தவிர்க்கப்பட்டு நேரடியாகவே அனுபவங்களை உணர்த்தும் போக்கு இக் காலத்தில் வலுவடையத் தொடங்கியது.

தொண்ணூறுகளில் வைரமுத்து, மு.மேத்தா, தமிழன்பன், அப்துல் ரகுமான், ஞானக்கூத்தன், நா.காமராசன், பொன்மணி, எஸ்.வைத்தீஸ்வரன், நா.விஸ்வநாதன், ரிஸி, மனுஸ்யபுத்திரன், புகழேந்தி போன்றோர் எழுதினர். இக்காலத்தல் 'புல் வெளியில் ஒரு கல்', 'அந்தரத்தில் ஓர் இருக்கை' முதலான கவிதைத் தொகுதிகளும் வெளிவந்தன. 90 காலக் கவிஞர்கள் தங்கள் அனுபவங்களைச் செய்நேர்த்தியுடனும், புதிய கோணத்திலும் சுயமாகக் கைகூடிய கவிதை மொழியிலும் வெளிப்படுத்தியுள்ளனர். 80 களில் காணப்பட்ட அகநோக்குப் பார்வையும். புறநோக்குப் பார்வையும் 90 களின் பிரதான கண்ணோட்டமாயின். ஐரோப்பியத் தூண்டுதல் பெற்ற உணர்வுகளுக்குப் பதில் தனது மரபின் கூறுகளை இக் காலத்தினர் முதன்மைப்படுத்தினர். ஐரோப்பிய சாயல் கொண்ட படிமங்களும், சர்வதேசத் தன்மையுள்ள குறிப்புகளும் நமது மரபு சார்ந்தவையாக மறு உருவாக்கம் செய்யப்பட்டன. இதனால் கவிதையின் மொழிவட்டம் விரிவடைந்தது. எழுத்து நடையில் கட்டமைக்கப்பட்ட கவிதை மொழி, பேச்சு வழக்கு, தொனி வேறுபாடுகள் என்று விஸ்தாரமானது. நகர மத்தியதர வாழ்க்கையின் கலாசார உற்பத்தியாகக் குறுக்கப்பட்டிருந்த கவிதை, எல்லைகளைப் பரவலாக்கி கொண்டது.

இரண்டாயிரம் ஆண்டுகளில் பெண்ணியக் கவிதைகள், கைக்கூ, தலித் கவிதைகள் முக்கியமாக வெளிவந்தன, கவிதைத் தொகுப்புக்களும் அதிகமாக வந்தன. தேவதேவனின், 'விண்ணளவு பூமி', சுகுமாரினின் 'சிலைகளின் காலம்', ர.ஸ்ரீனிவாசனின், 'கணத் தோற்றம்', சிபிச்செல்வனின், 'கறுப்பு நாய்', கல்மாவின் 'பச்சை தேவதை' போன்றன அவற்றுட் சில.

இவ்வாறாக பாரதிக்குப் பின்னரான கவிதையின் வளர்ச்சிப் போக்கு தமிழகத்தில் நிலவி வந்திருக்கிறது.

தமிழக நிலை இவ்வாறிருக்கின்ற பொழுது, பாரதியின் செல்வாக்கு, ஈழத்திலும் நிலவியிருக்கிறது. ஈழத்தில் பாரதிக்குப் பின்னரான புதுக்கவிதைப் போக்கானது ஈழகேசரியுடன் அரும்பத் தொடங்கி, மறுமலர்ச்சியுடன் ஆரோக்கியத் திசையில் செல்லலாயிற்று. நாவற்குழியூர் நடராஜன், சோ.நடராஜன், அ.ந.கந்தசாமி, சோ.தியாகராஜா, மஹாகவி, சாரதா, செ.கதிரேசப்பிள்ளை, யாழ்ப்பாணன் முதலியோர் இக் காலத்தில் முக்கியம் பெறுகின்றனர். ஐம்பதுகளின் அரசியல்சார் நவீன கவிதைகள் தோற்றம் பெற்றன. இவைமுனைப்புப் பெறுகின்ற காலகட்டத்தில் நீலாவணன், முருகையன் முதலிய கவிஞர்கள் கவிதைத் துறையில் பிரவேசித்தனர். மேலும் காசிஆனந்தன், புரட்சிக் கமால், சில்லாலையூர் செல்வராசன், சாஜபாரதி முதலியோரும் இக் காலத்தில் தமது கவிதைகளை வெளிப்படுத்தினர். அறுபதுகளில் முற்போக்குச் சித்தாந்தங்களைக் கொண்ட அரசியல் கட்சிகள், சமூக இயக்கங்களுடன் தொடர்புடைய கவிஞர்களாக சுபத்திரன், பசுபதி, புதுவை இரத்தினத்துரை, எம்.ஏ.நு.ஃமான், சண்முகம் சிவலிங்கன் போன்றோர் எழுதினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுபதுகளில் வ.ஐ.ச.ஜெயபாலன், சி.சிவசேகரன் போன்றோர் முக்கியம் பெறுகின்றனர். எண்பதுகளில், சேரன், செழியன், இளவாலை விஜயேந்திரன் கவிதைகள் குறிப்பிடத்தக்கன. 'அலை', 'புதுசு' சஞ்சிகைகள் இவர்களுக்குக் களம் கொடுத்தன.
எண்பதுகளில் இன முரண்பாடு தொடர்பான கவிதைகள் பல வெளிவந்தன. பேரினவாதிகளைக் கண்டிப்பனவாகவும், பாதிக்கப்பட்ட தமிழர்களுக்குத் தெம்பூட்டுவனவாகவும், அதே வேளை வீறுகொள்ளச் செய்வனவாகவும், இந்திய அரசியல் மேலாதிக்கத்திற்கெதிரான கவிதைகளும் எழுந்தன. தொண்ணூறுகளில் இவற்றுடன் முஸ்லீம் தேசியக் குரல் ஒலிக்கும் கவிதைகளும் தோற்றம் பெற்றன. தொடர்ந்து போர், போரின் தாக்கம், போரின் மீதான வெறுப்புணர்வு முதலானவையெல்லாம் கவிப்பொருளாயின.

இவ்வாறாக பாரதிக்குப் பின்னரான கவிதை வளர்ச்சி தமிழகத்திலும், ஈழத்திலும் நிலவி வந்திருக்கிறது.

உசாத்துணை நூல்கள்


1. இராமலிங்கம்.எஸ், கவிதை பயிற்றும் முறை – 1983 – செல்வி அநுராதா பதிப்ப கம், சென்னை
2. தணிகாசலம்.க, தேவராஜா.சோ. பாரதி பன்முகப்பார்வை – 1984 - ஸ்ரீகாந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.
3. அரங்கன்.து, எண்ணக் கோலங்கள் - 1993 – அருள் பதிப்பகம், சென்னை.
4. மௌனகுரு.சி, கலை-இலக்கியக் கட்டுரைகள் - 1994 – குமரன் பதிப்பகம் சென்னை.
5. வல்லிக்கண்ணன், புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் - 1997 – அகரம் சிவகங்கை.
6. சோமலெ, வளரும் தமிழ் - 1998 – வானதிப் பதிப்பகம், சென்னை.
7. முருகையன்.இ, இன்றைய உலகில் இலக்கியம் - 1998 – மிதிலா அச்சகம், சென்னை.
8. கைலாசபதி.க, ஒப்பியல் இலக்கியம் - 1999 – மோனார்க் கிராபிக்ஸ் சென்னை.
9. பொன்னடியான், நினைவலைகளில் பாவேந்தர் - 2000 – சக்தி அச்சகம் சென்னை.
10. சுப்பிரமணியன்.கோ, பாரதிதாஸன் தேன் தமிழ்க் கவிதைகள் - 2002 – முத்து கிராபிக்ஸ் சென்னை.
11. ராஜமார்த்தாண்டன். புதுக்கவிதை வரலாறு – 2003
12. ராணி.சீ, இலக்கியக் கட்டுரைகள் - 2005 – ரெயின்போ மினிலாப் திருகோண மலை
13. பிரசாந்தன்.ஸ்ரீ, இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க் கவிதைகள் - 2006 – கவிதா பப்ளிகேசன் சென்னை.
14. யோகராசா.செ, ஈழத்து நவீன கவிதை, 2007 – குமரன் அச்சகம், கொழும்பு
15. சிவத்தம்பி.கா, தமிழின் கவிதையியல், 2007 – குமரன் அச்சகம்.
16. வித்தியானந்தன்.சு, இலக்கியத் தென்றல், 2008 – சேமமடு பதிப்பகம், கொழும்பு
17. குமரன்.ஈ, கவிதை கற்றல் கற்பித்தல், தாயகமலர், 2013 – மதி கலர்ஸ் பிரிண்டஸ், நல்லூர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி உதயகுமார் டக்சாயினி
தரம் - 05
வ/பாவற்குளம் கணேசுவரா ம.வி.

## மாறும் உலகை மாற்றுவோம்

புதுமைமிகு உலகினிலே
புனிதமாய் பூத்திட்ட
பூவுலகை ஆளவந்த
புன்னகை பூக்கள் நாம்

கல்வி என்ற மூன்றெழுத்தை
கருத்துடன் கற்றிட்டால்
காலத்தை மாற்றிடலாம் - புதுக்
கோலங்கள் அமைத்திடலாம்

மரங்களை நாட்டிடுவோம்
மாற்றங்கள் கண்டிடுவோம்
சுத்தத்தைக் கடைப்பிடிப்போம்
சுந்தரமாய் வாழ்ந்திடுவோம்

அன்னைக்கும் தந்தைக்கும்
பணி விடைகள் செய்திடுவோம்
ஆசானை வாழ்த்திடுவோம்
மூத்தோர் சொல் கேட்டிடுவோம்

பட்டங்கள் பெற்றிடினும்
சட்டங்கள் கற்றிடினும்
பணிவுடனே வாழ்ந்திடுவோம்
பாரெல்லாம் வாழ வைப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

M.லதாசாந்தி
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்

## இலங்கையில் இந்துசமயத்தின் தோற்றமும், வளர்ச்சியும்

இலங்கையில் இந்துசமயம் தோன்றி வளர்ச்சியடைந்தமையை எடுத்து நோக்குகின்ற வேளை பாக்குத்தொடுவாயாற் பிரிவுண்டிருப்பினும் பாரதநாட்டிற்கு மிக அண்மையில் இலங்கை அமைந்துள்ளதால் அந்நாட்டின் சமயகலாச்சாரம் படர்ச்சி இங்கும் பண்டும்தொட்டே நிகழ்ந்து வந்துள்ளமை இயல்பேயாகும். வரலாற்றுக்கு முன்பிறந்த இந்துசமயம் இலங்கையிலே பரவியிருந்து இன்றும் தொடர்வது குறிப்பி டத்தக்கது. இராமாயண இதிகாச காலத்திலே இலங்கையும் அதன் அரசனான இராவணனும் பற்றிய செய்திகள் முதன்மை இடம் பெறுகின்றன. இராவணன் சிவபக்தன் என்பதும் அவனுடைய பட்டத்து தேவியான மண்டோதரி சிவனை வழிபட்டாள் என்பதும் இராமாயணத்தின் மூலம் அறியப்படுகிறது. மற்றும் சம்பந்தர், அப்பர், மணிவாசகர் போன்ற சமயக்குரவர்களாலும் விதந்து கூறப்படுகின்றது. வரலற்றுக்கு முன்பு இலங்கையிலே வாழ்ந்த சாதியர், இயக்கர், நாகர் எனப்படுவோர் ஆவர். இராவணன் இயக்கன். இலங்கையிலே முதற் சிங்கள அரசனாகிய விஜயன் இலங்கைக்கு வந்தபொழுது தன் மனைவியாய் குவேனியை ஏற்றான். அவள் இயக்கி என்பதை சிங்கள வரலாற்று நூல் கூறுகிறது. மகாவம்சம் மூலம் அறியவரும் செய்தி தமிழிலே எழுந்த "யாழ்ப்பாண வைபவமாலை" விஜயனை இந்து மத்தினன் எனக்குறிப்பிடும். இராவணன் பற்றிய செய்திகள் தக்கிணகைலாயபுராணம், கைலாயமாலை முதலான தமிழ் நூல்களிலே பேசப்படும்.

எனினும் இதிகாசகதைகளோ, செவிவழிக்கதைகளையோ, சான்றுகளாகக் கொள்வது ஒரளவுக்கு நம்பகரமானது. அவற்றை முழுமையான வரலற்றாதாரங்களாக கொள்வது ஏற்புடையதன்று. எனவே தொல்லியற் சான்றுகளான கல்வெட்டுகள், நாணயங்கள், புராதன கட்டிடச்சிதைவுகள் போன்றவற்றின் அடிப்படையிலே வரலற்று உண்மைகள் நிறுவப்படல் வேண்டும்.

இலங்கையிலே இந்துசமய வரலாற்றை ஆதாரத்தோடு நிறுவும் முயற்சிகள் நீண்டகாலமாக மேற்க்கொள்ளப்படாதிருந்து வந்தமையால் உண்மையான வரலாற்றினை திட்டவட்டமாக அறியமுடியாதுள்ளது. இது பற்றி வரலாற்றாய்வாளர் ஒருவரின் கூற்றை இவ்விடத்தில் நோக்குதல் அவசிமாகும்.

"துர்திட்டவசமாகிப் பண்டைய ஈழத்தில் இந்துமதம் பெற்றிருந்த முக்கியத்துவத்தினை அறிந்து கொள்வதற்கு இந்தியாவில் இதற்குக்காரணம் கிறிஷ்து சகாப்தத்திற்கு முன்பே பௌத்தம் இங்கு கால்கொண்டு இராசமதமாக விளங்கியதே. இருந்தும் இலக்கிய தொல்லியற் சான்றுகளை நுணுகி ஆராயும்போது பௌத்தத்தைப் போல இந்துமதம் அரசமதமாக விளங்காவிட்டாலும் மக்கள் மத்தியில் பேணப்பட்டது தெளிவாகிறது.

அண்மைக்காலத்தில் இத்தகைய நுணுக்க ஆய்வுகள் மூலம் இலங்கையில் இந்துமதம் பற்றிய வரலற்றுண்மைகள் யாவும் வெளிக்கொணரப்பட்டன. இவற்றின் அடிப்படையில் இவ்வரலாற்றினைப் பின்வரும் காலகட்டங்களாகப் பிரித்து நோக்குதல் பயனுடையதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1)வரலாற்றுக்கு முற்பட்டகாலம் (கி.மு 200 - 600)
2)அனுராதபுரகாலம் (கி.மு 600 - கி.பி 1000)
3)பொலநறுவைக்காலம் (கி.பி 1000 - 1250)
4)இடைக்காலம் (1250 - 1505)
5)ஐரோப்பியர்காலம் (1505 - 1948)
6)இக்காலம் (இற்றைவரை) - (1949)

வரலற்றுக்கு முற்பட்டகாலத்தை எடுத்து நோக்குமாயின் இலங்கையில் ஆதிக்குடிகள் சிங்களவர் என்றும் இலங்கை வாழ் தமிழர் வந்தேறு குடிகள் என்றும் மகாவம்சத்தை ஆதாரமாகக் கொண்ட திரிபுக்கருத்து நீண்ட காலமாக நிலவிவந்தது. ஆனால் தொல்லியல் ஆய்வுகள் இது தவறானது என்று வலுவான சான்றடிப்படையில் நிறுவுகின்றன. கி.மு 2000 ஆண்டளவில் தமிழ்நாட்டிலும், இலங்கையிலும், பெருங்கற்பண்பாடு நிலவியமை தெரிய வந்துள்ளது. இப்பண்பாட்டுக்குரியோர் திராவிட மக்கள் தமிழர் திராவிட இனத்தைச் சேர்ந்தோர்.

தென்னிந்தியாவிலே ஆதிச்சநல்லூர், திருநெல்வேலி ஆகிய இடங்களிலே அகழ்வாராய்ச்சிகள் நடத்தியவர்கள் அங்கு மிகப்பழமைவாய்ந்த தொல்பொருட்சின்னங்களைக் கண்டுபிடித்தார்கள் அவற்றுள் ஈமத்தாழிகள் குறிப்பிடத்தக்கவை. இவைகள் ஆதித்தமிழ்க் குடிகள் பயன்படுத்தியவை. கி.மு 2000 ஆண்டு பழமை கொண்டவை இவை போல்வன 1955 ஆம் ஆண்டிலே புத்தளப்பகுதியில் நிகழ்ந்த புதை பொருளாய்விலும் கிடைத்தன. மற்றும் பொம்பரிப்பு, வளவை கங்கைப்பள்ளதாக்கு, கதிரைவெளி, வல்லிபுரம், வரணி, மாதோட்டம், கந்தரோடை ஆகிய இடங்களிலே நிகழ்ந்த ஆய்வுகளின் போது ஆதிச்சநல்லூரிற் கிடைத்தவை போன்ற வேலாயுதங்களும், சேவற்சிலையும், காவடிச்செடில்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. எனவே இந்துசமயத் தெய்வமாகிய முருகனின் வழிபாடு தமிழகத்திற் போலவே இலங்கையிலும் அங்கு வாழ்ந்த தமிழ் மக்களாலே கைக்கொள்ளப்படமை புலனாகிறது. வடநாட்டின் ஆரியமரபுவழி வந்த இந்துசமயமன்றித் தென்னிந்தியப் பின்னணியிலமைந்த வழிப்பாட்டு நெறியாகவும், வரலற்றுக்கு முற்பட்டகாலச்சமயமாகவும் உள்ள ஒன்றே அக்காலத்தில் கடைப்பிடிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே இலங்கை வேடர்களின் மூதாதையராக இயக்கர் வாழ்ந்தார் எனவும் இவர்கள் அமானுஷ்யர்கள் எனவும், பூசிக்கத் தகுந்தோர் எனவும் கொள்ளப்பட்டதால் "யஷ்" வழிபாடும் அக்காலத்தில் இடம்பெற்றதாய் ஆய்வாளர் கொள்வர். இவர்களிலும் நாகரிகத்தால் உயர்ந்த நாகர்கள் நாகத்தினை வழிபட்டனர் என்றும் கூறப்படுகிறது. இன்றும் வட இலங்கயில் புளியம்பொக்கனை புதூர்நாகர் கோயில் ஆகிய இடங்களில் நாகதம்பிரானுக்குக் கோயில்களும், வழிபாடும் இடம் பெறுவதை நோக்க அது வரலற்றுக்கு முற்பட்ட வழிபாட்டின் எச்சசொச்சமாகக் கொள்ளப்படத்தக்கது. யஷ் வழிபாடு பிற்கால பூ வழிபாட்டிற்கு அடிகோலியது என்பதும் வரலாற்றறிஞர் கருத்தாகும் இவ்வழிபாடுகள் யாவும் வேதாகம காலத்தில் வழிப்பட்டவை என்று கொள்ளப்படாவிடினும் ஏதோ ஒரு வகையில் இந்து சமயிகளால் இன்றும் கைக்கொள்ளப்பட்டே வருகின்றன. இவற்றோடு பத்தினி வழிபாடும் நிகழ்ந்தது இவ்வழிபாடே கொற்றவை உருக்கொண்டதுடன் சப்தகன்னியர், நாச்சிமார் வழிபாட்டுக்கு தோற்றுவாயாய் அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் இன்று நிலவும் இந்துசமயத்தின் மூலக்கூறுகள் பலவும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே கருவாகி உருக்கொண்டுவிட்டன.

தேவநம்பியதீசன் என்ற சிங்கள அரசனின் ஆட்சிக்கால தொடக்கம் (கி.மு 247 – 207) 5வது மகிந்தன் சோழரால் வெற்றி கொள்ளப்படும் வரை (கி.பி 993) ஏறக்குறைய 1300 ஆண்டுகள் அனுராதபுரம் இலங்கையின் தலைநகராய் விளங்கியது தேவநம்பியதீசன் காலத்திலேயே பௌத்தமதம் இங்கு பரவத்தொடங்கியதும் அதற்கு முன்னுள்ள சில நூற்றாண்டுகளில் இலங்கையில் நிலவிய சமயம் எது என்பதை ஆராய்ந்தோர் அது இந்து சமயமாகவே இருந்திருக்கும் என்று முடிவுக்கு வருகின்றனர். கி.மு 3ம் நூற்றாண்டுக்கு உரியனவான பிரமிய கல்வெட்டுக்கள் இவ்வுண்மைக்கு சான்று பகர்கின்றன.

யாழ்ப்பாணவைபவமாலை ஆசிரியரான மாதகல் மயில்வாகனப் புலவர் அனுராதபுரம் தலைநகராவதற்கு முன்பே முதற்சிங்கள அரசனான விஜயனால் இலங்கையில் நான்கு திசைகளிலும் சிவாலயங்கள் அமைக்கப்பட்டன. அவையாவன திருக்கோணேஸ்வரம், சந்திரசேகரம், திருக்கேதீச்சரம், முன்னீச்சரம், நகுலேஸ்வரம் ஆனால் விஜயன் வருகைக்கு முன்பே 5 சிவாலயங்கள் இருந்ததாகிய செய்தி சேர். போல். பீரிஸ் என்ற சிங்கள வரலாற்றறிஞரால் கூறப்பட்டுள்ளது.

தேவநம்பியதீசன் முன்பிருந்த அரசர்கள், அவர்கள் சிங்களவராயினும் இந்து மதத்தவராயிருந்ததோடு, பிராமணர்களையும் ஆதிகரித்து வந்தமைக்கு மகாவம்சத்திலேயே ஆதாரங்கள் உண்டு சிங்களக்கவிதை நூலாகிய "கந்த உபத" கதிர்காமத்தில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமானை துட்டகாமினி சென்று தரிசித்துத் தனது நேர்த்திக்கடனைச் செலுத்தியதாகத் தெரிவிக்கின்றது.

துட்டகாமினியாலே தோற்கடிக்கப்பட்ட எல்லாளன் என்ற மன்னன் இந்து சமயத்தவன். இவன் இந்துமதத்தை மட்டுமன்றி பௌத்தத்தையும் ஆதரித்தான் என்று மகாவம்சம் கூறுகிறது. கி.பி 2ம் நூற்றாண்டில் கஜபாகு (174 – 196) சேரநாட்டிலிருந்து பத்தினி வழிபாட்டைக் கொணர்ந்து இலங்கையில் அறிமுகம் செய்தான். கி.பி 17ம் நூற்றாண்டினரான திருஞான சம்பந்தர், திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் மீதும் கி.பி 8ம் நூற்றாண்டினரான சுந்தரமூர்த்தி நாயனரால் திருக்கேதீஸ்வரம் மீதும் பதிகங்கள் பாடப்பட்டுள்ளன. மற்றும் இராசேந்திர சோழனால் திருக்கேதீச்சரத்தை புனருத்தாரணம் செய்த வரலாறு கூறுகிறது. மகாசேனனால் அழிவுக்குள்ளான கோணேஸ்வரம் பின்னாளில் பாண்டியனால் புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளது.

அனுராதபுர காலத்தில் சிங்கள, தமிழ் மக்களால் பரவலாக இந்துசமயம் கடைப்பிடிக்கப்பட்டது. சிவம், சிவகூடம், சிவன், மூத்தசிவன் என்று கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டுள்ளது யஷ், முருகன், விஸ்ணு, விநாயகர், பத்தினி வழிபாடுகள் செல்வாக்கு பெற்றமை மறுக்கமுடியாத உண்மைகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து பொலநறுவைக்காலத்தில் இந்து சமய வளர்ச்சி பற்றி நோக்கின் பொலநறுவையில் அகழ்வாராய்ச்சியின் பயனாக அங்கு பத்து சிவன் கோயில்கள். ஐந்து விஸ்ணு கோயில்கள், ஒரு காளி கோயில் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனாலும் இவை யாவும் சோழர்காலத்தவை என்பது ஐயத்திற்கு இடமானது என வரலாற்றறிஞர்கள் கருதுகின்றனர்.

பொலலநறுவைச் சிவாலயங்களுக்கு 1ம் சிவாலயம், 2ம் சிவாலயம் என எண்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றுள் 3 சிவாலயம் சோழர்காலத்தவை கலாநிதி. கா. இந்திரபாலா கூறுகின்றார் வடமத்திய மாகாணத்தில் பதவியாக்குளம் அமைந்துள்ள பதொன்னரு என்ற பழைய நகரத்தில் சிவாலயங்கள் கட்டப்பட்டுள்ளன.

பொலநறுவைக்கால 1ம் பராக்கிரமபாகு இந்து சமயத்திற்கு ஆதரவு வழங்கினான், இவன் பிராமணருக்காக ஹேமமந்திரம், தரணஹாரம் என்ற இருமண்டபங்களை கட்டி வேதக்கிரயை நிகழ உதவியதோடு 24 தேவாலயங்கள் கட்டினான். அத்தோடு 79தேவாலயங்களை புனரமைத்தான் என்று மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளது இவன் வழிவந்த நிசங்கமல்லன் பார்வதி அன்னசத்திரம் அமைத்ததோடு பிராமணருக்கு அன்னசத்திரங்களை அமைத்ததோடு, இந்துசமயத்தை தழுவ நிர்ப்பந்தித்தான் என்றும் வரலாற்றடிப்படையில் எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

1886 இல் எஸ். எம். பறொஸ் என்ற புதைபொருள் ஆய்வாளர் பொலநறுவையில் விஸ்ணு ஆலயம் ஒன்றின் சிதைவினை தமது அகழ்வராய்ச்சியிற் கண்டுபிடித்துள்ளார். தூபராம சமாதியில் இருந்து மேற்கு நோக்கிச்செல்லும் பாதையில் மேலும் நான்கு கோயில்கள் கண்டுபிடிக்கப்பட்டன. பொலநறுவையில் கண்டெடுக்கப்பட்ட சோமஸ்கந்தமூர்த்தி, நடராஜர். சிவகாமி, விநாயகர், காரைக்காலம்மையார், சுந்தரமூர்த்தி நாயனார் முதலான செப்புப்படிமங்கள் கொழும்பிலும் அனுராதபுரத்திலுமுள்ள அரும்பொருட்காட்சியங்களில் வைக்கப்பட்டுளன தொகுத்து நோக்கின் பொலநறுவைக்காலம் இந்துசமயத்தின் மேன்மையை பறைசாற்றுவதாக விளங்குகின்றது.

இடைக்காலத்தை எடுத்துக்கொண்டோமாயின் 2ம் பராக்கிரமபாகு பௌத்தசமயியாயினும், தேவேந்திர முனையிலிருந்த விஸ்ணுவாலயத்தைப் புதுப்பித்ததோடு, பெருந்தோட்டையில் காளி கோயிலும் கட்டிவித்தான். தேவேந்திர முனையில் புத்தவிகாரை சைவக்கோயில் இரண்டும் அருகருகே இருந்தமை சிங்கள அரசரின் சமயதத்துவ பாங்கு எத்தகையது என்று விளங்கிக் கொள்ளலாம்.

இக்காலக்கட்டத்தில் யாழ்ப்பாணத்திலே ஆரியரச்சக்கரவர்த்திகள் என்ற பரம்பரையினர் ஆட்சி செலுத்தினர் இந்நிலையில் இந்து சமயமானது இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் உன்னத நிலையினை எய்திற்று. இந்து சமயம் சார்ந்த பிரபந்தங்கள் பல தோன்றின. பல ஆலயங்கள் அமைக்கப்பட்டன, புனருத்தாரணம் செய்யப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே காலகட்டத்தில் நல்லூரிற் கைலாசநாதருக்கும், சட்டநாதருக்கும் கோயில் அமைக்கப்பட்டது. நாயன்மார்கட்டில் வெலிகந்த பிள்ளையார் கோயிலும், இணுவில் கருணாகரப் பிள்ளையார் ஆலயமும் எழுந்தன. நல்லூரிலுள்ள வீரமாகாளியம்மன் கோயில், நாயன்மார்கட்டு அரசகேசரிப் பிள்ளையார் கோயில். அரியாலை விநாகர் முதலான கோயில்கள் இக்காலத்தவை மாவி ட்டபுரம் கந்தசாமி கோயில், சந்நிதி முருகன் ஆலயம் என்பனவும் எழுந்தருந்தன.

யாழ்ப்பாண தமிழரசர்காலத்தில் சோதிடம், வைத்தியம், சார்ந்த நூல்களும் இரகுவம்ச மொழிபெயர்ப்பும் வெளியானது. போலவே சைவப்பி ரபந்தங்களும் எழுந்தன. திருகோணமலையில் வாழ்ந்த பண்டிதரால் தக்கிணகைலாய புராணத்தையும், கவிராசர் கோணேசர் கல்வெட்டு என வழங்கும் கோணேசர் சாசனத்தையும், கரைசைப்புலவர் திருக்கரைகை புராணத்தையும் இயற்றினர் கதிரைப்பள்ளு, மற்றும் தே.முத்துராசரின் கைலாயமாலை வரலாற்றுச் செய்திகளை எமக்கு தருகின்றது.

இவ்வாறாக சமயவரலாறானது இலங்கையில் அனுராதபுர காலம், பொலநறுவைக்காலம், ஆகிய காலங்களில் சிறப்புற்று விளங்கியது. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் காலங்களில் சைவசமயம் வீழ்ச்சியுற்று நாவலர் போன்ற பெரியோர்களினால் மீண்டும் வளர்ச்சியடைந்தது. இவரை பின்பற்றி சிவபாதசுந்தரனார், காசிவாசி செந்தில் நாதையர், ஞானப்பிரகாசர், வடகோவை, சு.சபாபதிநாவலர் போன்றோரால் தொடர்ந்து சைவசமயம் இன்றுவரை பேணிபாதுகாக்கப்பட்டுவருவது அனைவராலும் மறுக்கமுடியாத உண்மையாகும்.


"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகெமெல்லாம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி :- யோகசிகாமணி ஷாதுரி
இல :- 250,
வீரபுரம்.

# வன்னியின் மலரும் மொட்டுக்கள்



காலம் கடந்தது
கவிதை மலர்ந்தது
வன்னியின் மலரும் மொட்டுக்கள்

குண்டடி சத்தமும் மாய்ந்தது
குழறல் சத்தமும் ஓய்ந்தது
இரத்தம் நித்தமும் காய்ந்தது
வன்னியின் முத்தம் புதிதாய் மலர்ந்தது.

நாளை மலரும் மொட்டு
மறுநாள் இறப்பதை எண்ணாது
இன்று மொட்டோடு இசைக்கிறது மொட்டு
இறப்பு இன்றும் உண்டு
என்றும் உண்டு
வாழும் வழியில் சாதனைகள் பலவும் உண்டு
இறந்தபின் உன் பெயரை
இம் மண்ணுரைக்க வாழ்பவரே
வன்னியின் மலரும் மொட்டுகள்

சோதனை கண்ட அந்த மொட்டுகள்
இன்று சாதிக்க துடிக்கும்
வன்னியின் மலரும் மொட்டுக்கள்
வாழ்த்தி வரவேற்போம்
நாளைய சமுதாயத்திற்கு
இன்றைய வன்னியின் மலரும்
மொட்டுக்கள்....................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேகு சஹாப்தீன் பாத்திமா
அஸ்ரா
முதலியார்குளம்

## அல்குர்ஆனைக் கற்றுக் கொள்வோம்.

இஸ்லாமிய சமுதாயம் வரலாற்றில் பல்வேறு தனித்துவ சிறப்புக்களைப் பெற்று உயர்ந்த கண்ணியத்துடன் வாழ்ந்து சிறந்த நாகரிகத்தை உலகுக்கு வழங்கியது. அறிவியல் துறைக்கு அளப்பரிய பங்களிப்பைச் செய்தது. ஒழுக்கம், பண்பாடு என்பவற்றின் மாதிரியாக அமைந்தது. இத்தகைய சிறப்பம்சங்களுக்கு பின்னணி யாக அமைந்தது அல்குர்ஆன் ஆகும்.

மீண்டும் இழந்த கண்ணியத்தைப் பெறுவதாக இருந்தால், அல்குர்ஆனுடனான நமது உறவை பலப்படுத்த வேண்டும் அல்குர்ஆன் எம்மிடம் வேண்டி நிற்கும் அம்சங்களைப் புரிந்து அதன்பால் நாம் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை கற்று விளங்கி நிறைவேற்ற வேண்டும்.

அல்குர்ஆனை ஓதுதல்

அல்குர்ஆனுக்கு முன்னால் நிறைவேற்ற வேண்டிய கடமைகளுள் மிகப்பிரதானமாக அதனை ஓதுவது அமைந்திருக்கின்றது. அல்குர்ஆன் அல்லாஹ்வின் கலாம் (பேச்சு) என்பதால். அதனைத்தொடுவதும் பார்ப்பதும் ஓதுவதும் (இபாதத்தாக) வணக்கமாக கருதப்படுகின்றது. இத்தூய அந்தஸ்த்து முன்னைய வேதங்களுக்கோ ஏனைய இஸ்லாமிய கிரந்தங்களுக்கோ வழங்கப்படவில்லை. அல்குர்ஆனை ஓதுவதன் மூலம் ஈமான் அதிகரிக்கின்றது. தனது அனைத்த விவகாரங்களையும் அல்லாஹ்விடம் பொறுப்புச் சாட்டும் மனோநிலை வளர்கின்றது.

"நிச்சயமாக மு.'.மின்களுக்கு அல்லாஹ்வை ஞாபகப்படுத்தினால் அவர்களது உள்ளங்கள் நடுங்கும். அவனது வசனங்கள் அவர்களுக்கு ஓதிக் காண்பிக்கப்பட்டால் அவர்களது ஈமான் அதிகரிக்கும். மேலும் தமது விவகாரங்களை அவர்களது ரப்பிடமே (இறைவனிடமே) பொறுப்புச் சாட்டுவார்கள்" (ஸுரதுல்அன்பால் : 2)

அல்குர்ஆனை தொடர்ச்சியாக ஓத வேண்டும், அத்தகைய செயற்பாடு அல்லாஹ்விடம் மிக விருப்புக்குரியது. அல்குர்ஆனின் ஒவ்வோர் எழுத்தையும் ஓதுவதன் மூலம் அல்லாஹ்விடமிருந்து அதற்கு பத்து நன்மைகள் கிடைக்கின்றன. இது குறித்து சில அல்குர்ஆன் செய்திகளை நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அல்குர்ஆன் ஓதுவது பற்றி அல்குர்ஆனில்

"அல்குர்ஆன் ஓதப்பட்டால் அதனை செவிமடுங்கள் மேலும் அமைதியாக இருங்கள். நீங்கள் அதன் மூலம் அருள் பெறலாம்" (அல்அ.'ராப் : 204)
"நிச்சயமாக அல்லாஹ்வின் வேதத்தை ஓதி, தொழுகையை நிலைநாட்டி நாம் அவர்களுக்கு அளித்தவற்றிலிருந்து இரகசியமாகவும் பரகசியமாகவும் செலவுசெய்பவர்கள் நட்டமடையாத வியாபாரத்தை எதர் கொள்வார்கள்" (அல்பாதிர் : 29)
"......மேலும் ஆல்குர்ஆனை நிறுத்தி நிதானமாக ஓதுவீராக!"(அல்முஸ்ஸம்மில்: 04)

அல்குர்ஆன் ஓதப்படும் பொழுது அதனை அமைதியா இருந்து செவிமடுப்பது கடமையாகும் அவ்வாறில்லாமல் புறக்கணிப்பது வார்த்தைக்கு மாறு செய்வதாக அமையும்.
கூட்டாக அல்குர்ஆன் ஓதுவதன் சிறப்பு

இஸ்லாத்தில் தனித்துத் தொழுவதை விட கூட்டாகத் தொழுவது எந்தளவு சிறப்புக்குரியதோ அதேபோன்று கூட்டாக அமல்கள் செய்வதும் குர்ஆன் ஓதுவதும் சிறந்ததாகும்.

"ஒரு கூட்டத்தினர் அல்லாஹ்வின் மாளிகைகளில் ஒன்றிலமர்ந்து அல்லாஹ்வின் வேதத்தை ஓதிக் கொண்டும் தங்களிடையே பரஸ்பரம் கற்பித்துக்கொண்டுமிருக்கின்றனர். அவர்கள் மீது அமைதி இறங்குகின்றது. அவர்களை அருள் சூழ்கின்றது. மலக்குகள் (வானவர்கள்) அவர்களை சூழ்ந்து கொள்கின்றனர் அல்லாஹ் தன்னி டத்திலுள்ளோரிடம் அவர்களைப் பற்றி சிறப்பித்துக் கூறுகின்றான்." (முஸ்லிம்)

## அல்குர்ஆனை விளங்குதல்

"பின்னர் (இந்தக் குர்ஆனை விட்டு) நீங்கள் எங்கு சென்று கொண்டிருக்கிற-ீர்கள்? இதுவே அனைத்துலக மக்களுக்கும் உயரிய ஓர் அறிவுறையாகும்." (81 : 26, 27)
அல்குர்ஆன் இங்கு எம்மை நோக்கி ஒரு வினாவை எழுப்புகிறது "உங்களு-க்கான உன்னத அறிவுரைகளை விட்டு, உயர்ந்த வழிகாட்டுதலை விட்டு எங்கே சென்று கொண்டிருக்கின்றீர்கள்?" என்பது அந்த வினா.

எங்கிருந்து வந்தோம்ஞ என்ன செய்கின்றோம்? எங்கு செல்கின்றோம்? செல்லும் பாதை சரியாஞ பிழையா? குர்ஆனின் அறிவுரைகள் என்ன, வழிகாட்டுதல் என்ன?

இவை எதனையும் நாம் அறியாமல் போனதற்கான காரணம் என்ன? வேறு ஒன்றுமில்லைஞ குர்ஆனைப் பொருளறிந்து ஓதும் பழக்கம் நம்மிடம் இல்லாமல் போனதுதான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று எல்லாத் துறைகளிலும் முஸ்லிம்கள் முன்னோடிகளாகத் திகழ்ந்ததற்கு காரணம் அல்குர்ஆனுடனான உறவு நெருக்கமாக இருந்ததுதான். முஸ்லிம் சமூகம் தான் இழந்த கண்ணியத்தை மீளப்பெற வேண்டுமெனில் அல்குர்ஆனுடனான உறவை வலுப்படுத்த வேண்டும்ஆ அல்குர்ஆனைக் கற்க வேண்டும். கற்பிக்க வேண்டும் அதுவே சிறந்த வாழ்க்கையை ஈட்டித்தரும்.

"அல்குர்ஆனை தாமும் கற்று பிறருக்கும் கற்றுத்தருபவரே உங்களில் சிறந்தவராவர்" (நூல் புகாரி)

பொருளறிந்து அல்குர்ஆனை ஓதுவது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நாம் இங்கு விளங்கிக்கொள்ள முடியுமாக உள்ளது. அல்குர்ஆனைக் கற்றுக் கொள்ளாமலிருப்பது நாமே நமது வாழ்வின் வழிகாட்டலை புறக்கணிப்பதற்கு சமமாகும். மனிதர்கள் ஏற்று. நம்பி விளங்கிக் கொள்ளும் வகையில்தான் அல்குர்ஆன் அல்லாஹ்வால் அருளப்பட்டுள்ளது.

"நீங்கள் நன்கு புரிந்து கொள்ளும் பொருட்டு இந்தக் குர்ஆனை அரபு மொழியில் இறக்கி வைத்துள்ளோம்." (12 : 2)

அல்குர்ஆன் மனித வாழ்வின் தேவைகளுக்கும் பிரச்சினைகளுக்குமான தீர்வாகவும் சவால்களை எதிர்கொளவதற்கான ஆலோசனையாகவும் தனிமனித குடும்ப, சமூகவாழ்வை ஒழுங்குபடுத்தும் நெறியாகவும் அரசு, நாடு, நிர்வாகம் என்பவற்றை சீர்படுத்துவதற்கான யாப்பாகவும் அமைந்திருக்கிறது. இவ்வத்தனையையும் குர்ஆனிலிருந்து பெறாத ஒருவர் வழிதவறுவர்ஆ இருளில் சிக்கி, பாதை தெரியாது முட்டி மோதி தன் ஈருலக வாழ்வையும் அழத்துக் கொள்வார்.

"நாம் இந்தக் குர்ஆனை அறிவுரை பெறுவதற்காக இலகுபடுத்தியுள்ளோம் பின்னர், அறிவுரையை ஏற்றுக் கொள்வோர் எவரேனும் இருக்கின்றாரா?" (54 : 17)

இதே அத்தியாயத்தில் இதே வினாவை அல்லாஹ் நான்கு முறை வினவுகிறான் எனின் அதன் ஆழமான பொருளென்ன என்பதை சிந்தித்துப் பாருங்கள்.
"இவர்கள் அல்குர்ஆனை ஆழமாக சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? அவ்வாறு ஆழமாக சிந்திக்காமல் இருப்பதற்கு அவர்களது உள்ளங்கள் மீது பூட்டுக்கள் போடப்பட்டுளளனவா?" (47 : 24)

அல்குர்ஆனைக் கற்க வேண்டும். அதனைப் புரிந்து கொள்ள வேண்டும் அப்போதுதான் நம் முன்னோர்கள் உயர் அந்தஸ்தை எவ்வாறு பெற்றனர் என்பது புரியும். நமது நோக்கமும் இலட்சியமும் தெளிவாகும். நமது பயணம் வெற்றி பெறும். மறுமை வாழ்வு ஈடேற்றம் பெறும்.

"அல்குர்ஆனை ஓதுவோம், அதனைவிளங்குவோம் அதன்பால் அழைப்போம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வ/செட்டிக்குளம் மகா வித்தியாலயம்.
Praveena Ramasamy
GR-10 M (2017)

## கவிதை

கற்பனைகள் கருவுற்று பிரசவிக்கும்
கருவறை கவிதை
சிந்தனைகளின் சிகரமாய் சிற்பமாய்
நிற்பது கவிதை

கலைத்ததிட்ட கனவுகளையும் திரையிட்ட
திரைக்கூடம் கவிதை
துன்பங்களைத் தூரமாய் வழிகாட்டும்
வடிகால் கவிதை

துயரங்களை துடைத் தெரியும்
துடைப்பான் கவிதை
ஆணிவேர் முதல் ஆகாயம் வரை
ஆராய வைத்தது கவிதை

பூக்களையும் புழுக்களையும் இரசிக்க
வைத்தது கவிதை
ஏக்கங்களை எட்டாத உயரத்தில் ஏற்றி
வைத்த ஏணி கவிதை

இயற்கையையும் இதயங்களையும் இணைக்கும்
பாலம் கவிதை
நெல்சன் மண்டேலா தன் கையில் எடுத்த
முதல் அகிம்சை ஆயுதம் கவிதை.

பாரதியாம் பெண் விடுதலை
சாதி ஒற்றுமையை பாரினில்
விதைத்திட்ட விதை
கவிதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீ. லஜீவன்
7c
வ/செட்டிகுளம் மகா.வி

## விடுதியே வாழ்க

வளமான மாணவராய்
வளர்த்திடும் விடுதியே வாழ்க
ஏறலாமென ஏணியிலே
ஏற்றும் விடுதியே வாழ்க

அன்புள்ளம் கொண்டு
பேணும் விடுதியே வாழ்க
உயரிய ஒழுக்கத்தை
ஒருங்கே ஊட்டும் விடுதியே வாழ்க

வேறிடம் அதில் இருந்த – எம்மை
சேர்த்த விடுதியே வாழ்க
பிரிவினை உணர்த்தாமல்
பாசமூட்டும் விடுதியே வாழ்க

கல்வியதை காலையிலேயே
கற்பிக்கும் விடுதியே வாழ்க
கல்லாரை கல்வியூட்டியே
சான்றோராக்கும் விடுதியே வாழ்க
கடவுளின் காட்சியதை
காட்டிய விடுதியே வாழ்க

## அழகு

அளவுடன் பேசுவது அடக்கத்திற்கு அழகு
ஆணவம் ஒழிப்பது அமைதிக்கு அழகு
இன்ப துன்பங்களை சமமாய் ஏற்பது மனிதனுக்கு அழகு
ஈன்றோரை மதித்து போற்றுவது பிள்ளைக்கு அழகு
உண்மை பேசுவது உத்தமர்க்கு அழகு
பணிந்து நடப்பது மாணவனிற்கு அழகு
பொறுமை காப்பது யாவருக்கும் அழகு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுத்தார் பூமி ஆழ்வார் என்பர்
பொறுத்து வாழ்வதே வாழ்வோம்
உயிர் போனாலும் பொறுமை
இளமையிலும் பொறுமை பேண்
முதியவனானாலும் பொறுமை பேண்
ஆயரம் துன்பம் வந்தாலும்
இடியோ மின்னலோ உன்னை
நெருங்கி வந்தாலும்
பொறுமை கொள்வோர்
வாழ்க்கையில் உயர்வர்
துன்பம் உன்னை நெரித்தாலும்
பொறுமையை ஒரு போதும்
இழந்தே வறுத்தே விடாதே
பொறுமை பொறுமை பொறுமை
அதை வெறுத்தால் வருவதே வெறுமை
இளமையில் நீ பொறுமையை பழகு இல்லையெனின்
முதுமையில் நீ வெறுக்கப்டுவாய்
தனிமையிலும் ஓர் இனிமையுண்டு
பொறுமை என்ற சொல்
பெருமைக்குரிய சொல்லாகும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந.கா. பிரதீஸ்
ஆசிரியர்
வ/ தாலிக்குளம் அ.த.க. பாடசாலை.

# விசித்திர மகளிர்

தமிழ் இலக்கியங்களிலும் நடைமுறையிலும் பிரகாசித்த இதிகாச புராண நூல்களில் இடம்பெற்ற பெண் பாத்திரங்கள் நல்ல தலைவியாக, தோழியாக, செவி லியாக, நற்றாயராய் வரும் மகளிர் பற்றி அறிந்து உள்ளோம். கணவன் இறந்ததும் தன்னையும் மாய்த்துக் கொண்ட பெருங்கோப் பெண்டு, கோப்பெருந்தேவி போன்ற பத்தினிப் பெண்ணை அறிந்து பொருமைப் பட்டு உள்ளோம். "ஒரு மகன் அல்லது இல்லோன் செருமுகம் நோக்கிச் செல் கென விடுமே" (புறநானூறு 279) என்ற நாட்டுக் காவலுக்கெனவே பெற்று தியாகம் செய்த வீர மாதர்களை கண்டு உள்ளோம். மனம் பொறி போகாது உடல் மாசு அடையாது வாழ்ந்த கற்புடைய பெண்களை அறிந்து உள்ளோம். சீதை, குந்தி, மண்டோதரி, கண்ணகி என பலரின் பரிசுத்த தன்மையை அறிந்த நாம் விசித்திர மகளிர் பற்றி நோக்குவோம்.

அணங்குறு மகளிர்

பாடிக்கொண்டு குறி சொல்லுகின்ற வழக்கம் தொன்று தொட்டு நிகழ்ந்த ஒன்று. அதற்கு முந்திய நிலையில் ஆடிக்கொண்டே வருங்காலம் உணர்த்தும் நிலை இருந்துள்ளது. இதனை "வெறியாட்டம்" என்றனர். இவ்வகை வெறியாட்டத்தை நிகழ்த்திய மாதரே அணங்குறு மகளிர் எனப்பட்டனர். அணங்கு என்பது இன்றும் மோகினி என அஞ்சப்படுகின்ற வன தேவதைலயைக் குறிக்கும் சொல் அகும். திருக்குறள் தலைவர் கூடி "அணங்கு கொல் ஆய் மயில் கொல்லோ....." (குறள் 1081) என்கின்றார். "இறைவனை ஆடல் கண்ட குளிய அணங்கு" என்கிறது. சிலப்பதிகாரம் (சி. அகி 20-7.38). சாதாரண பெண்மணியே தெய்வம் ஏற்றப்பட்டு மந்திரவாதி போல் மாற்றம் அடைகின்றார். வெறி மகளிர் என அழைக்கும் தன்மை காணப்படுகின்றது. "வெறிக்கொள் பாவையின் பொலிந்த" (அ.நா 370) "வெறியாடு மகளிரொடு செறிய" (ப.பா – 155) ஆடுதல் பண்பு வெறிமகளிரொடு இணைந்த ஓர் பண்பாகும்.

கலம்பக இலக்கியத்தில் ஆடும் மகளிர் "மதங்கியர்" எனப்படுகின்றனர். கம்பரின் சடகோபரந்தாதியில் மதங்கி பற்றிய குறிப்பு வருகிறது. வெறி மகளிரது ஆடுகிற இயல்பு தமிழிலக்கியத்தில் அழகுற விளக்கப்படுகின்றது. "முருமெய்ப்பட்ட புலந்தி போல தாவுப தெளிக்கும் ஆண்" (பு.நா 259) "கடியுண் கடவுட்கிட்ட செழுங்குரல் அறியாதுண்ட மஞ்ஞை ஆடுமகள் வெறியுறுவனப்பின் வெய்துற்று நடுங்கும்" (குறு- தொ. 105) "வெறிகொள் பாவையின் பொலிந்த என் அணி துறந்து (அகநானூறு 370) உணர்த்தி நிற்கின்றது. வெறிமகள் சிறந்த அணிகலன்களை அணிந்து இருந்தமையும் அவள் ஆடிய ஆட்டம் யாவருக்கும் அழகு உடையதாக இருந்தமைக்கு "வெறியுறுவனப்பு" (கு.தொகை 105) என்பது ஊடாக புலனாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேய் மகளிர்

தமிழ் இலக்கியத்தில் புறப்பாடல்களோடு அதிகம் பேசப்படும் பாத்திரம் பேய் மகளிர்களாகும். போர்க்களங்களில் நிணம் நின்று குதி ஆடுபவர்களாக இவர்கள் காணப்படுகிறார்கள் "வெற்றிடு வியற்கனம் பாடித்தோள் பெயரா நிணத்தின் வாயள் (திருமுருகாற்றுப்படை 55 – 56) கூறப்படுகின்றது. தோற்றத்தில் அச்சம் தருகிறவர்கள் பேய் மகளிர்கள் "அஞ்சவரு பேய்மகன்" (தி.மு.ப 51) தலையில் காய்ந்த மயிர், 3 பழுங்கற்ற பற்கள், பிளந்த வாய், சுழலுகின்ற கண்கள், கூர்மையான பார்வை, கூகையும் பாம்பும் பற்றியுள்ளமையால் நீண்டு தொங்குகின்ற செவிகள் இவை பேய் மகளிர் கொண்டு உள்ள தோற்ற மாகும். அருகில் கண்டவர்களை அதிர்ச்சி அடையச் செய்யும் உருவம் பேய் மகளிர் உருவம் என்பதற்கு. "சாரந்தோர் துட கென்பே எயுருவம்" (பெருங்கதை 2: 8: 110) என்பதும் பேய்க் கண் என்ன பிளிரு கடிமுரசம் (ப.பா – 236) எனக் கூறுகிறார். பேய் மகளிரின் தோற்றம் பாட்டும் அல்ல அவளது ஆட்டமும் அச்சம் தருவதாகும்.

பேய் மகளிர் பிணங்களில் இருந்து எடுக்கப்பட்ட குடலை அணிகலனாக்குவார். வரிக்குடர் அடைச்சி பேய் மகள் ஆட " (பு.நா 370) என்றும் குருதி பூசி ஆடும் தன்மை காணப்படுகின்றது. பிணங்களின் கண்களைப் பெயர்த்தெடுத்து உண்டு பிளவு பட்டு இருக்கும் பாதங்களை எடுத்து வைத்து மிகவும் மகிழ்ச்சியுடன் பேய் மகளிர் ஆடினர். என்பதற்கு "கண்டோட்டுண்டுகவையடி பெயர்த்து தண்டாக் களிப்பி னொடுங் கூத்து" (மணிமேகலை 6:25) மெய்யெல்லாம் புலால் பட்டவராக பேய் மகளிர் காட்சி தருகின்றனர் என்பதற்க்கு "பே எய் மகளிர் பிணம் தழூஉ பற்றி வெம்புலால் மெய்யர்" (புறநானூறு 359) கூறுவது ஊடாக மற்றொரு விசித்திர மகளிரை நோக்க முடியும்.

## சூரர மகளிர்

சூரர மகளிர் தெய்வ மகளிராவர். "வான அர மகளிர்". (மலைபடு கடாம் 294) இவர்கள் பேய் மகளிருக்கு நேர் மாறுபட்டவர்களாக இருத்தல் வேண்டும். சோலையில் ஆடுவார்கள், மலைகளில் விரும்பித் தங்குவார்கள், காதல் வலைப்பட்டு இருக்கும் தலைவனையும் தலைவியையும் பிரியாமல் இருக்க தெய்வ மகளிரை சாட்சி வைத்து ஆணை இடுவது வழக்கமாக இருப்பதற்கு "நேரிணை முன் கை பற்றிச் சூரர மகளிரோடுற்ற சூளே" (கு. தொ 53) இல் விரிவு படுத்துகின்றது. தமிழ் இலக்கியத்தில் வருகின்ற விசித்திர மகளிர் ஆடல் கலைக்கு முக்கி யத்துவம் கொடுக்கும் தன்மையினை காண முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விறலிப் பெண்கள்.

ஆதித் தமிழ் இலக்கியங்களில் புதுவகையாக ஆற்றுப்படை இலக்கியம் நிகழ்ந்தது. இவ் இலக்கியத்தில் விறலியாற்றுப்படை என்று பெயர் இருந்தது. முற்கால இலக்கியத்தில் மகளிரின் பெயரில் விளங்கிய ஒரே இலக்கியம் இதுவாகும். விறலிப் பெண்களுக்கு "விறலி" என்று பெயர் அமைந்தது. ஆடலிலும் பாடலிலும் ஆகும். விறல் என்றால் ஆற்றல் என்பதாகும். ஆடற்கலையில் எழிற்கை, தொழிற்கை என்று விரல் முத்திரை காட்டும் வழக்கம் உண்டு. ஆடற்கலைக்கு உடைய மகளிர் என்பதற்கு விரல் என்பதை சுட்டிக் காட்டி விரலி என பெயர் வந்ததாகவும் கூறப்படுகின்றது. விரலி என்பதே விறலி ஆயிற்று. கலைச்சொல் ஆக்கம் கருதி "ர" கரம் பெயராகும் போது "ற" கரம் ஆவது மரபுவழிப்பட்டதே. விறலில் விரல் வளமும் பாடலில் குரல் வளம் என்று விரலும் குரலும் இவர்தம் வெற்றிக்குப் பின்னணியாக காணப்படுகின்றது. இவர்கள் இசைக் கருவியை இசைக்கும் வல்லமை கொண்டவரகள், இதனால் கிணைமகள் என்ற இலக்கியக் குறிப்பால் விளக்கி நற்கின்றனர். திணை என்பது தடாரிப்பறை எனும் பழங்கால இசைக் கரவியாகும். கவர்ச்சி மிக்க ஆடலைக் கொண்ட இவர்களின் ஆடலை புலவர்கள் உவமையாக்கி கவி படைத்துள்ளானர். "ஆடுமயில் வெறியுது துடக்கம் போலத் ....." (பதிற்றுப்பத்து 51:10-10) "ஆடுகள் அல்கல் நப்ப வாடி...." (புறநானூறு 398:21) என்பன சான்றாகின்றன.

விறலிப் பெண்களை "பாணர்" என்பவர்களே துணையாக்கும் நிகழ்வு காணப்படுகின்றது. பண்டையத் தமிழ் பண்பாட்டில் கூத்துக் கலையை தெருக் கூத்து என்ற நிலையில் இருந்து அரசசபையில் நிகழ்த்தப்படும் வேதியம் கூத்து என்ற நிலைக்கு கொண்டு வந்த பெருமை இவர்களைச் சாரும். இவ்வாறான மகளிர் எவ் நிலையிலும் தம் கற்பை காத்து நின்று உள்ளார். என்பதற்கு "முல்லை சான்ற கற்பின் மெல்லியன் மடமா நோக்கின் வாணுதல் விறலியர்" (சிறு. பா. படை 30-31) என்பது ஊடாக தெளிவாகின்றது. இலக்கியங்களுக்கு எழில் விளக்கம் கொடுத்து செழிப்புடன் விழங்கும் விறலிப் பெண்கள் சங்ககால மகளிர் சமுதாயத்திற்கு தலை சிறந்த முன் மாதிரியாய் திகழ்ந்து உள்ளனர். உழைப்பை மூலதனமாக்கு புகழ் ஈட்டியவர்கள் பொதுப் பணியினையும் இல்லறப் பணியினையும் இடைவிடாது நிகழ்த்தும் இவர்கள் திறமையினை நோக்கும் போது விறல் என்ற திறமைக்காகவே விறலியர் ஆனார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓரை மகளிர்

ஆற்றங் கரையிலும் கடற்கரையிலும் குழுவினராய் சென்று விளையாடிப் பொழுது போக்கும் இளம் பெண்களின் கூட்டத்தை "ஓரை மகளிர்" என பெயரிட்டுள்ளது தமிழ் இலக்கியம் ஓரை மகளிர் என்பதற்கு மாற்றுச் சொல்லாக "ஆயம்" என்ற சொல் பயன்படுத்துவதையும் காண்கின்றோம். ஆயம் என்றால் குழு அல்லது கூட்டத்தை குறிக்கின்றது. இதற்கு இலக்கியம் உவமையாக சங்கு என்பதையும் விண்மீன்களையும் குறிப்பது மரபு. இன்னொரு பக்கம் கற்புடை மகளிரை நட்சத்திரங்கள் என்பது பழங்கால இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றது. சிலப்பதிகாரத்தில் கண்ணகியை இளங்கோ அடிகள் நட்சத்திரம் என்றே அறிமுகப்படுத்துகிறார். ஓரை மகளிர் மிக இளமையானவர்களாக இருப்பதுடன் உண்மையானவர்களாகவும் கள்ளங் கபடம் அற்றவர்களாகவும் காணப்படுவார்கள். ஓரை மகளிருக்கு திருமணம் நிகழும் நேரம் சிலம்பு கழி நோன்பு எனும் நிகழ்வு நடைபெறும் ஓரை மகளிர் என்பது காற்சிலம்புடன் இருக்கும் பருவமாகும் என்பது உண்மையாகின்றது.

பகல் முழுவதும் நீராடுதல், நண்டுகளை ஓட்டி விளையாடுதல், பூ கொய்தல், கழங்காடுதல், பந்தாடுதல், ஊஞ்சல், அம்மானை போன்ற விளையாட்டில் ஈடுபட்டு பொழுது சாயும் நேரம் வீடு திரும்புவார்கள் வியர்த்து களைத்து ஒப்பனைகள் கலைந்து அழகிழந்து வீடு திரும்புவார்கள். முற்றிலும் பொழுது போக்கையே நோக்கமாகக் கொண்டு ஓரை விளையாட்டு அமைந்தாலும் சில மகளிரின் வாழ்க்கையின் திருப்பு முனையாக அமைந்துள்ளது. என்கின்றது. அம்மானை, பந்து, கழங்காடல், ஊஞ்சல் விளையாட்டுக்கள் இசையோடு பாடப்பட்டன. பெண்கள் இருவர் கூடிவிட்டால் பிற மகளிரைப் பற்றிப் பேசுவது இயல்பு, அம்பல் தூற்றல் என்ற பெயரால் இதனை கெட்ட வழக்கமாக இலக்கியம் கூறுகின்றது. ஒற்றுமையான ஓரை சங்கத்தின் முன்னோடியான ஓரை ஆயம் மூலம் கிடைக்கப் பெற்ற நல் விளைவுகள் இன்னும் கிடைக்க பெறுகின்றதா என்பது பொதுவான வினாவேயாகும்.

## விலைமாதர்

பழம் தமிழ் இலக்கிய காலம் முதல் பெண்கள் ஆடவர்களை ஏதோ வகையில் ஆனந்தப்படுத்தியவர்களாகவே சித்தரிக்கப்படுகின்றனர். ஆடல் மூலம் பாடல் மூலம் மகிழ்வித்ததுடன் மட்டும் இன்றி உடல் இன்பம் கொடுக்கும் தன்மையும் காணப்படுகின்றது. பரத்தையார் என்ற பெண் மூலம் சிற்றின்பம் அடைந்து அது பிற்காலத்தில் தவிரக்க முடியாத ஒன்றாக மாறியது. விலை மாதர் என்பது தொழில் அல்ல. அது பொருளாதாரத்தினை ஈடு செய்வ-தாகவும் தமது தேவையினை பூரணப்படுத்தவதற்காகவும் தொடர்ந்தும் வருகின்றது. தெரிந்து அல்லது தெரியாமல் தம் உடலை பிற ஆடவருடன் பகிர்ந்து கொள்ளும் தன்மையினை காணப்படுகின்றது. ரம்பை, ஊர்வசி போன்றவர்கள் மட்டும் அல்லாமல் காப்பியத்திலும் சில மகளிர் கற்பினை இழந்தவர்களாகவே சித்தரிக்கப்பட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை மட்டும் இன்றி அகவன் மகளிர் (குறி சொல்லும் பெண்) விறலி மகளிர் (ஆடன் மகளிர்) சூர் மகளிர் (வெறியாடும் பெண்கள்) மூதின் மகளிர் (மூது பெண்டிர்) உமட்டியர் (உப்பு விற்கும் பெண்கள்) உழத்தியர் (உழவுத்தொழில் புரியும் பெண்கள்) என் என்னும் பல விசிதிர மகளிர் பலரை தமிழ் இலக்கியம் காட்டி நிற்கின்றது. இவை இன்று மருவிப் போவது வேதனையாக இருப்பது உண்மையே தொடர்ந்தும் மகளிர் தன்மையினை தேடி விசித்திர பெண்களை நோக்க முடியும் புதுமைப் பெண் பாஞ்சாலி சபதம், தமிழச்சியின் கத்தி என்று. பெண்கள் கொடுமைகள் இலக்கியத்தில காட்டி நிற்கின்றது. உடன் கட்டை ஏறுதல் போன்ற பெண் கொடுமைகளை அறிந்த நாம் காதல் வாழ்வு, திருமணம் போன்றன பெண்களின் மேன்மை மாறி நின்கின்றது. வளவாழ்வு வாழ்ந்து உயர்ந்த பெண்களின் பெருமையினை எந்நாளும் மனதில் சூடி கொள்ளட்டும்.

நன்றி

உதவிகள்:-

- தமிழ் இலக்கிய விநோதங்கள்
- தமிழ் கூத்துக்கள்
- தமிழிலக்கியத்தில் அறிவியல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெ. மேரிஅருந்துஷா
A/L
வ/செட்டிக்குளம் மகா.வித்

## விடைபெற்றுவிட்டோம்.

பள்ளியில் ஒரு காலம் - அது
பழக்கமாய் பழகி வந்த காலம்
நண்பர்களுடன் நட்பாய்
நட்பின் சண்டையை நினைத்து
ஆசானிடம் உலர வைத்து – அதற்கு
உதவாக்கறை என்ற பட்டம் பெற்று
சாப்பாட்டை சகபாடியுடன்
சந்தோசமாய் ஓர் தட்டில் சாப்பிட்டு
ஆரம்பக்கல்வியை அம்மா
அறிவோடு கற்று
இடைநிலைக் கல்வியை – என்
உறவோடு கற்று
வீட்டு வேலை செய்யாமல்
பாடசாலை செல்ல
ஆசான் அதட்டி விட்டு
அதிபரிடம் கூட்டிச்செல்ல
அவரும் எம்மை அதட்டி விடவே
உள்ளுக்குள் சந்தோசம்
மீண்டும் வகுப்பறையில்
பள்ளி முடிந்தவுடன் பரவசமாய்
வீடு செல்லும் போது வேலியோரம்
தொங்கும் மா தேக்கு பிடுங்கி
ஆனந்தம் பொங்க சாப்பிட்டு
வீடு சென்ற பின் - கவலை
இவ்வாறு நாட்கள் ஓட ஓட
நானும் ஓடினேன் - என்
பள்ளிக்காலம் முடிய
பிரியாவிடையில் விடைபெற்று
விளையாடிய விளையாட்டுக்களையும்
பிடித்த சண்டைகளையும்- எண்ணி
எண்ணிலடங்கா கண்ணீரை விட
விம்மி விம்பி அழுது – எதையும்
ஏற்றுக்கொள்ளாத மனதுடன்
அங்கிருந்து விடைபெற்று
சிதறிய நீர்த்துளி போல
சிதறுண்டு இருக்கன்றோம்
எங்கோ ஓரிடத்தில் நாமின்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக கட்டமைப்பு மாற்றமும் மனித அலங்கோலங்களும்

ஆசிரியர் :- திருமதி விமலன் இமெல்டா

மனிதன் மனிதனாக வாழ்வதற்கும், வளர்ச்சி அடைவதற்கும் அவன் உருவாக்கிக் கொண்ட ஒரு வேலியே சமூககட்டமைப்பு. இக் கட்டமைப்பு நாம் வாழும் சூழலில் குறிப்பாக எம் பிரதேசத்தில் எவ்வாறுள்ளது. அதற்கான காரணங்கள் என்ன என்பதை சற்று புரட்டிப்பார்ப்பதே இக் கட்டுரை.

மாற்றங்கள் என்பதை மனிதனால் தடுக்கமுடியாது, மனித பரிணாம வளர்ச்சியில் காலத்துக்கு காலம் இடம்பெறும் மாற்றங்களை அவன் தாண்டியே ஆகவேண்டும். மாற்றங்கள் மறுக்கப்படும் போது பல்வேறுபட்ட குறைநிலைகளையும் இடர்பாடுகளையும் உருவாக்கிவிடுகின்றது. தேவையான இடத்தில். தேவையான காலங்களில் தனிமனிதனாக இருந்தாலும் சரி அல்லது ஒரு சமூகமாக இருந்தாலும் சரி மாற்றங்களை உள்வாங்கியாக வேண்டும். பரிணாமம் என்பது மாற்றம் என்று பொருள் கொண்டால் அது தானாக நிகழும். அங்கு மனித முயற்சிகள் தேவையற்றது. இங்கு நாம் கருதும் மாற்றம் முறைப்படுத்தப்படுதலாகும்.

இவ் முறைப்படுத்தப்படுதல் எமது சமுதாயத்தில் எவ்வாறு உள்ளது. இதனால் எங்கள் மக்களின் வாழ்க்கையில் பல மாற்றங்கள் நடந்துவிட்டன.

"திங்கள் தோறும் தினங்கள் கொண்டாடி
மங்களம் பொங்க உறவுகளுடன்
கூடி மகிழ்ந்திருந்த காலங்கள்
இன்று ஏடுகளில் மட்டுமே!
மரணித்த மனிதர்களாய் - இன்று
எம்மக்கள் வாழ்கின்றனர்."

1990ம் ஆண்டுகளுக்கு முன்னர் எம் பிரதேசம் தற்போது உள்ள நிலையில் முற்றிலும் மாறுபட்டது. விவசாயமும் அதுசார்ந்த தொழிலுமே மக்கள் வாழ்க்கையாக காணப்பட்டது. நெல் உற்பத்தி நிறைவுகண்டிருந்தது. திரும்பும் பக்கமெல்லாம் மக்கள் தம்நிலங்களை செழுமையாய் வைத்தருந்தனர். பாதையில் சென்றால் எல்லோரும் அறிந்தவர்கள், நம் (நிற்கும்) சொந்தங்கள், நல்லது, கெட்டது நடந்தால் ஊர் கூடி உதவி நிர்க்கும் நிலை அறியாதவர் யாரும் இல்லை. அன்பு, பாதுகாப்பு, மகிழ்ச்சி என்பன குடும்பத்திலும் சமூகத்திலும் நிறைவாய் இருந்தது. கையேந்தி உதவி கோரும் நிலை அரிதாகவே காணப்பட்டது. எமக்கென்று விரதங்களும், விழாக்களும் காலத்துக்கு காலம் கொண்டாடி மகிழ்ந்திருந்தோம். எம்மைச் சுற்றி எப்போதும் ஒரு பாதுகாப்பு காணப்பட்டது. நாம் போடத வேலியாக ஒரு சிலந்தி வலை போல் எமது சமூக அமைப்பு காணப்பட்து. (படம் 01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலைகள். கொள்ளைகள் நடக்குமென்று மக்கள் அஞ்சியது இல்லை, வீட்டில் இருந்து புறப்பட்டால் அந்திவரும் இடமெல்லாம் பழக்கப்பட்ட இடங்களும். பழகிய அன்பான முகங்களும் தான் தென்படும். ஆரோக்கியமான உணவு பழக்கவழக்கங்களும், தானகருமங்களில் ஈடுபடுதல், ஏழைகளுக்கு உதவி செய்தல். பழிபாவங்களுக்கு அஞ்சும் நிலைதான் காணப்பட்டது. இல்லை என்று வாயால் சொல்லுவதற்கு மக்கள் கூச்சப்பட்டனர். ஒட்டுமொத்தமாக நோக்கினால் எமது பண்பாடு பேணப்பட்டது. எமது காச்சாரம் வளர்க்கப்பட்டது.

போரின் போது ஏற்பட்ட பாரிய அளவிலான இடப் பெயர்வு பல மாற்றங்களை தோற்றுவித்துள்ளது. எமது பிரதேசங்களுக்கு உரித்துடையவர்கள் தம் காணிகள். உடமைகள், உறவுகள் அமைனத்தையும் விட்டு வேறுமாவட்டங்களுக்கும். அந்நிய நாடுகளுக்கும் புலம் பெயர்ந்தனர். ஆங்காங்கே மாற்றங்களை எதிர்கொள்ள மறுத்தவர்கள் உயிரைக்கையில் பிடித்தபடி ஊரில் வாழ்நதனர். ஆனால் இன்று நாம் பாதுகாப்பாக வாழ்ந்த சமுதாய முறைமை தகர்த்தெறியப்பட்டுவிட்டது. நாம் வாழுந்த ஊரும் இல்லை. எம் உறவுகளும் இல்லை. திரும்பும் திசையெல்லாம் எம்முடையது என்ற உணர்வும் இல்லை. யாரோ வருகின்றனர், யாரோ போகின்றனர். ஊரில் முகம் அறியாதவர்கள் தான் அதிகம் பாழடைந்த வீடுகளும், பற்றைக்காடான காணிகளும் தான் அதிகம். காணிச் சண்டைகளும். வேலிச்சண்டைகளும் தான் ஊரில் அதிகம். சிலந்தி வலைபோன்ற அழகிய கட்டமைப்பு முற்றிலும் தகர்க்கப்பட்டுவிட்டது. அன்பு, பாதுகாப்பு, மகிழ்ச்சி, விட்டுக்கொடுத்தல், விரதங்கள், விழாக்கள் அனைத்தும் மாற்றம் அடைந்து விட்டது. நூல் அறுந்த சிலந்தி வலை போன்று காணப்படுகின்றது. இதனை படம் இரண்டில் காணலாம்.

இவ் கட்டமைப்பு சிதைவடைந்ததால் வசதியாய் வாழ்ந்தவர்கள் இன்று வறுமையில் வாழ்கின்றனர். சொந்தங்கள் சொல்லி வாழ்ந்தவர்கள் அநாதைகள் ஆக்கப்பட்டனர், தனிமையில் வாழ்கின்றனர். சின்ன வயதில் குடும்ப சுமைகளுடன் வாழும் இளைஞர் யுவதிகள், சுயமதிப்பு இழந்து இல்லையென்ற நிலையில் கையேந்தி அலைகின்றனர். ஒவ்வொருவர் மனதிலும் தாழ்வு மனப்பாங்கும். பிரச்சனைகளை எதிர்கொள்ள முடியாத நிலையும் காணப்படுகின்றது. யாருடைய துன்பத்தை யார் கேட்பது. எல்லோருக்கும் துன்பம். (படம் 02)

ஒவ்வொருவருடைய வீட்டிலும் தேவைகள் அதிகரித்த நிலை, வறுமை. துன்பங் களை பகிர்ந்து கொள்ள முடியாத மனம் இறுகிய மகிழ்ச்சியற்ற வாழ்க்கையில் இலட்சியம் அற்ற நிலையில் வாழ்கின்றனர்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான காட்டமைப்பு சிதைவடைந்துள்ள நிலையில் எமது சமூதாயம் பல்வேறு மனித அலங்கோலங்களை மாற்றங்கள் என்ற பெயரில் நாம் உள்வாங்கிக் கொண்டுள்ளோம். பல ஆண்டுகளாக கட்டப்பட்டிருந்த நிலையில் இருந்து சற்று கட்டுக்கள். இறுக்கங்கள் அரசியல். பொருளாதார நிலையில் எமது நாட்டில் மாற்றம் கண்டுவரும் சந்தர்ப்பதில் மக்கள் சுதந்திரமாக நடமாடவும், தொழில் செய்யவும் வாய்ப்புக்கள் மிகவும் அதிகமாகவே காணப்படுகின்றது. அரச, தனியார் வங்கிகள் காத்திருக்கின்றது. ஆனால் கடன் பெறுவதற்கு மக்கள் கூட்டம் கூட்டமாக அலைகின்றனர். அதனை மீளக்கட்டுவதற்கும், அதனை முதலீடாகக் கொண்டு தொழில் செய்வதற்கும் பின்வாங்குகின்றனர். இதற்கிடையில் தொண்டர்சார் நிறுவனங்களிடமும். அரச சேவை வழங்குனர்களிடம் தேவைநாடியும். தமது பிரச்சனைகளுக்கு தீர்வு நாடியும் அலைகின்றனர். இன்று பெரும்பாலுமுள்ள பிரச்சனைகளாக இளவயது பெண்கள், தாய்மார்கள் வெளிநாடு செல்லுதல்.

- இளவயது திருமணங்கள்
- பலதார திருமணங்கள்
- மது போதைப் பொருள் பாவனைகள்
- குடும்ப பிரச்சனைகள், வன்முறைகள்
- உளநோய்கள்
- பிரிந்து வாழுதல்

இவ்வாறு பிரச்சனைகளை சொல்லிக்கொண்டே போகலாம். இவ்வாறு பாதிப்படைந்த மக்களுடைய வாழ்க்கை முறையை நோக்கினால் வேறு இடங்களில் இருந்து பல இடப் பெயர்வுகளையும். யுத்த நிலைகளையும், நலன்புரி நிலைய வாழ்க்கையையும் கடந்து குடியேற்றங்கள் என்ற பெயரில் பல்வேறுபட்ட சமூகங்களுக்குள் வாழ்ந்தவர்கள் ஒன்றாக இணைத்து குடியமர்த்தப்படவர்கள் இவர்களின் உளநிலைகளை நோக்கினால் எப்போதும் யாராவது ஒருவர் எமக்கு உதவி செய்யட்டும் என்ற நிலையும். சுயமதிப்பு குன்றிய நிலைப்பாடும், சந்தேகம், வன்முறையான போக்குகள், பிரச்சனைக்கு முகம் கொடுக்க முடியாதநிலை, முரண்பாட்டை தோற்றுவிக்கும் நடத்தைகள் என்பன காணப்படுகின்றன.

இவ்வாறு உடைந்து கிடக்கும் சமூகத்தை முன்னேற்றம் அடையச் செய்வதும். ஆளுமையுள்ள சமூக கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கும் பல வருடங்கள், முயற்சியும், காத்திருப்பும் எப்படித்தீர்வு காணுவது என்பது புரியாததாகிவிடுகின்றது. இந்த நிலையில் இக்கட்டங்களை வட, கிழக்கில் வாழ்ந்த ஒவ்வொரு நபரும் தாண்டியே வந்துள்ளோம். அடிக்கும் சூழல் காற்றில் நாம் மட்டும் விதிவிலக்கா? கட்டாயமாக எம் ஒவ்வொருவரிடையேயும் நேரடித் தாக்கங்கள் இல்லாவிட்டாலும் மறைமுகமாக பல்வேறுபட்ட தாக்கங்களும், உள வெளிப்பாடுகளும் கட்டாயமாக காணப்படும். இதனை எம்மால் உணரமுடியா விட்டாலும். பிறறால் உயரமுடியும் எம்மிடையே வகையானவர்களைக் காணலாம். அதாவது ஆங்கில மொழியில் கூறினால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. "I'm not ok, Your ok" – நான் பிழையானவர், நீ சரியானவன்
2. I'm ok, you're not ok – நான் சரியானவன், நீ பிழையானவன்
3. I'm not ok, your not ok – நானும் பிழையானவன், நீயும் பிழையானவன்
4. I'm ok, your ok – நானும் சரி, நீயும் சரி.

இவ் அடிப்படை நிலைக்குள் ஏதாவது ஒன்றினுள் கட்டாயம் நாம் அடக்கப்படுவோம். எம் பெரும்பாலானவர்களிடம் தற்கால நிலையில் காணப்படுவது இரண்டாம் நிலையாகும். I'm ok, your not ok – நான் சரியானவர், நீ பிழையானவன். இன்று நாம் வேலைசெய்யும் அலுவலகங்களிலும், கிராம அமைப்புக்களிடையேயும். ஏன் குடும்ப உறவுகளிடமும், இவ் நிலையே அதிகம் காணப்படும். இதற்கு காரணம் பல இடர்களுக்கு முகம் கொடுத்து அதனை கடந்துள்ள நிலையில் மனதில் உள்ளார்ந்த ரீதியாக என்னால் வெற்றி பெறவும், சாதிக்கவும் முடியும் என்ற வைராக்கி யததுடன் வாழ்க்கையில் சில படிகளை வெற்றியுடன் கடந்துள்ள நிலையில், தன்னுடன் அருகில் இருப்பவன், தன் வாழ்க்கைத் துணை. தன் நட்புவட்டத்துடன். தன்னுடன் பணி செய்பவர்களுடன் இருக்கும் போது "I'm ok" என்ற சுயமதிப்பு உருவாக்கப்படுகின்றது. நான் / நாம் செய்வது சரி என்னுடைய செயற்பாடுகள், நடத்தைகள் அனைத்தும் நல்லது எனக் கண்டவர்கள் தன்னுடன் கூட இருப்பவர்களும் அப்படித்தான் என்பதை மறந்து Your not ok என்று எதற்கும் உணர்ச்சி வசப்பட்டு செல்பவர்களாகவும், தனிமையை நாடுபவர்களாகவும். முரண்படுபவர்களாகவும், தனி வழியில் செல்வர்கனாகவும், தனிமையை நாடுபவர்களாகவும். மதுபாவனையுடையவர்களாகவும், சந்தேகம், அமைதியற்ற மனநிலை, மற்றவர்களிடம் குற்றம் காண்பவர்களாவும் காணப்படுகின்றனர். (இதற்கு காரணம் எம்முடைய உளநிலையுடனேயே தொடர்புபடும்.) இந்த நிலையுள்ள நபர்கள் வாழ்க்கைத் துணைகளாகவும், நண்பர்களாகவும், உடன் வேலை செய்பவர்களாகவும், ஒன்றாக இணைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் பிரச்சனைகளும் முரண்பாடுகளுக்கும் தினமும் குறைவிருக்காது போய்விடும்.

யாரொருவர் நான்காம் நிலையான I'm ok, your ok என்ற உயரிய எண்ணம் கொண்டவர்களாக மாறுகின்றார்களோ அவர்களே சிறந்த ஆளுமையும், சுயமதிப்பும் கொண்டவர்கள். இவ்வாறானவர்களை நாம் சந்திப்பது மிகவும் அரிது. இவர்களால் எதையும் சாதிக்கவும், எதையும் ஏற்றுக்கொள்ளவும், வெளிப்படுத்தவும் முடியும். தன்னையும் தன்னைச் சூழவுள்ள சமூதாயத்தையும் நேசிக்கவும் பாராட்டவும் முடியும். நேர்மைத் தன்மையுடன் வாழவும் முடியும். இவ் நிலைப்பாட்டிற்கு எம்மையும், எம் சமூக கட்டமைப்புக்களையும் மாற்றுவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும்.ஓ

"கனியைக் கொண்டு மரத்தின் தன்மையை அறிய முடியும்
ஒருவரது செயலைக் கொண்டு அவரது ஆளுமை நிலையை அறிய முடியும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் கருத்து இச் சந்தர்ப்பத்தில் ஏற்புடையது. "ஐயோ எனக்கு ஒரு பிரச்சனையும் இல்லை. நான் நல்ல ஆளுமையுடன் இருக்கின்றேன்" என்று யார் ஒருவர் தன்னைப்பற்றி எண்ணுகின்றாரோ அங்கேதான் பிரச்சனை உண்டு. மாற்றம் அவசியம். நாம் எம்முடைய மாற்றம் காணும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் வாழும் சமூக கட்டமைப்பில் மாற்றம் காண உதவி புரிகின்றோம் ஒருவர் தன் நடத்தைக் கோலங்களை அறிந்து அதற்கான காரணங்கள் ஆராய்ந்து தன் உணர்வுகளுடன் உறவாடி தன்னை திருப்தி படுத்தும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் புதுப் பொழிவு அடைகின்றான். மற்றவர்களிடம் இருந்து வித்தியாசம் அடைகின்றான். பிரகாசம் அடைகின்றான்.

எனவே தன்னை அடையாளம் காணும் மனிதன் சமூதாயத்தை அடையாளம் காண்கின்றான் தன்னை நேசிக்கும் ஒவ்வொரு மனிதனும் சமூதாயத்ததை நேசிக்கும் மனிதராகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச.ஐதுர்சிகா
6c
வ/செட்டிகுளம் மகா வித்தியாலயம்.

# அம்மா.....!

பத்துமாதம் கருவில் சுமந்து
பரிவுடனே என்னை பாசத்துடன்
வளர்த்தவளே அன்னை
ஊண் உறக்கமின்றி
உயிரிலும் மேலாக என்னை
வளர்த்தவளே அன்னை
தன் சுயம் பாரம் என்சுகம்
பார்த்து தன்னை மறந்தவளே அம்மா
தாலாட்டு பாடி மடிமீது உறங்க
வைத்தவளே அம்மா
கொட்டும் மழையிலும் குளிரிலும்
பனியிலும் எனக்காய் பாடுபட்டவளே அம்மா
வாலிபம் என்னைக் கடந்த போதும்
வாரி அணைத்து என்னை முத்தமிட்டவள்
தான் அன்னை
குற்றம் நான் செய்தாலும்
பக்குவமாய் எனக்கு எடுத்துச்
சொல்பவளே அம்மா
வேண்டும் என் உறவு என்றும்
எங்கும் என் இதயம்
பாசம் வைத்து என்னை
பாரினில் வாழ வைக்க
நீ பட்ட க'டங்களை
என்றும் மறவேன் அம்மா
மீண்டும் ஒரு பிறவி என்றால்
வேண்டும் நீயே
என் தாயாய் யுகம் தோறும்
உன் மடியில் தலை சாய்ந்து
குழந்தையாய் உன் மடியில்
தவழ்ந்திட வேண்டும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கால உலக நாடுகளுள் இலங்கை ஒரு அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக உலகின் அபிவி ருத்தி அடைந்த நாடுகளின் நிலையை அடைய அபிவிருத்திப் பாதையில் செல்கின்றன என்பதாகும் அண்மைக்காலம் வரை அபிவிருத்தி என்பது பொருளாதாரத் துறை சார்ந்தது மட்டுமே என விளக்கமளிக்கப்பட்டது என்றாலும் தற்காலத்தில் அபிவிருத்தியினால் எதிர்பார்க்கப்படுவது மக்களின் அடிப்படைத் தேவைளை நிறைவு செய்வதாகும் எனவும் உணரப்பட்டது எனவே இதன்படி அபிவிருத்தியை அளவிடுவதற்கு ஆயுட்கால எதிர்பபார்க்கை. சிசுமரண வீதம், எழுத்தறிவு என்பவற்றை உள்ளடக்கிய வாழ்க்கைப் பண்புச் சுட்டெண் மொத்த தேசிய உற்பத்தி தனியார் வருமானம் போன்ற குறிகாட்டிகளின் மூலம் அபிவருத்தி தங்கி யுள்ளது என்பது உணரப்பட்டுள்ளது.

எனவே மனிததெரிவை கட்டியெழுப்புவதற்கு அடிப்படையாக அமைவது மனிதரது திறமைகளே – மனிதரால் பாதிக்க கூடியவையே மனித விருத்தியின் அடிப்படை திறன்களான நீண்ட ஆரோக்கியமான வாழ்வு வாழ்தல் கல்வி யறிவு பெற்றிருத்தல். மரியாதைக்குரிய வாழ்க்கைத்தரம், சமுதாய வாழ்க்கையில் பங்குபற்றுவதற்கான அரசியல், சமூக, சுதிந்திரம் பெற்றிருத்தல் என்பன அமைவதாக (ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி அறிக்கை. – 2003) குறிப்பிடுகிறது.

எனவே இலங்கையைப் பொறுத்த வரை 2004 ம் ஆண்டு அறிக்கையின் படி எழுத்தறிவு வீதம் 92% ஆக உள்ளது உயர்ந்து காணப்பட்டாலும் இலங்கை சம காலத்தில் பல்வேறு விதமான கல்விப்பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றது. இலங்கையில் 1950 – 1960 தசாப்தங்களில் கல்விக்கு முக்கிய இடம் கிடைத்தது என்றாலும் பல நூற்றாண்டு காலம் ஏகாதிபத்திய ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்றிருந்தது. குறிப்பிடத்தக்கது என்றாலும் மனித வளத்தை முன்னேற்றுவது ஒரு முதலீடாகும் என்ற கோட்டிட்டுக்கு அமைய தேசிய வருமானத்தின் கூடுதலானதொரு வீதத்தை கல்விக்காக முதலிட ஆரம்பித்து அதன் காரணமாக எழுத்தறிவு வீதம் அதிகரித்ததுடன் பாடசாலையில் சேரும் மாணவர் தொயைும் அதிகரித்தது. எனினும் இவ்வாறான ஒரு சூழ்நிலையில் இலங்கையானது சமகாலத்தில் கல்வித்துறையில் பல சவால்களை (பிரச்சினைகளை) எதிர் கொண்டு வருகிறது என்பதை அறிய முடிகின்றது. அவ்வாறான பிரச்சினைகளான.

- மாணவர் இடைவிலகல்
- வரையறுக்கப்பட்ட வளங்கள்
- வினைத்திறனின்மை
- கலைத்திட்ட சீர்திருத்தம்
- பித்தியேக வகுப்பு வுரவழைெ உடயளளநள
- பிரபல பாடசாலையில் சேர்வதற்கான போட்டித்தன்மை
- பயன்படுத்தப்படும் கற்பித்தல் முறைகள்
- குடும்ப சூழல், வறுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வந்த நாடுகளுடன் இலங்கையின் கல்வித்திட்டம் ஓரளவு திருப்தியாக காணப்பட்டாலும். பல்வேறு விதமான சிக்கல்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது. அந்தவகையில் ஆராயும் போது கல்விச் செயற்பாட்டில் மிக முக்கியமாகக் கருதப்படுகின்ற சிக்கலான ஒரு அம்சம்தான் மலைத்திட்டம் இது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பலவற்றில் முன்னர் சிலருக்காகத் தயாரிக்கப்பட்ட கலைத்திட்டம் இன்றைய நிலைமைக்குப் பொருத்தமான விதத்தில் அதாவது பெருந்தொகையானவர்களின் தேவைக்கு ஏற்றவாறு நவீன மயமாக்கப்படவில்லை. என்பதோடு இலங்கையின் காலத்திட்டம் அடிக்கடி மாற்றப்படுவதும் ஒரு துரதிஸ்டமான நிழ்வாக காணப்படுகிறது.

அந்த வகையில் நோக்கும் போது இலங்கையில் இலவசக் கல்வி முறைமை காணப்படுவதோடு 6-14 வயது வரை கட்டாயக்கல்வி முறைமை காணப்பட்ட போதிலும் துரதிஸ்டவசமாக பாடசாலை செல்வதை கட்டுப்படுத்துகின்ற ஒரு புறக்காரணியாக மாணவர் இடைவிலகல் காணப்படுகின்றது.

அந்த அடிப்படையில் இலங்கையில் காணப்படும் பாடசாலை பல்வகைமை காரணமாக வளங்களின் பகிர்வும், வினைத்திறனின்மையும் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது உதாரணமாக இலங்கை அரசால் அண்மையில் கொண்டுவரப்பட்ட (1000 பாடசாலைத்திட்டம்) ஒரு நோக்கில் முன்னேற்றம் காணப்பட்டாலும் பெரும்பாலும் கிராமப்புர பிரதேச மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற்படும் ஏனெனில் நகர்ப்புற பாடசாலைகளுக்கான வளப்பகிர்வு, ஆசிரியர் விகிதாசாரம், தொழில்நுட்ப உபகரணங்கள் பெருத்தமான கற்றல் சூழல், போக்குவரத்து என்பன கிராமப்புற மாணவர்களின் கானல் நீராகவே காணப்படுகிறது. இவ்வாறான செயற்பாடுகள் காரணமாக கிராமப்புற மாணவர்களின் அடைவுமட்டத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

அந்த வகையில் ஆராயும் போது இலங்கையின் இடைநிலைக் கல்வி மட்டத்தில் காணப்படுகின்ற பொதுப் பிரச்சினையாக சில விடயங்களை அடையாளப்படுத்த முடிகிறது அவையாவன.

- விசேட ஆசிரியர்கள் பற்றாக்குறை – தொழில்நுட்ப, விஞ்ஞான தொழல்சார் கல்வியை பெற்றுக் கொடுப்பதற்கு திறமையுள்ள ஆசியர்களின் பற்றாக்குறை.
- பொருளாதார கஸ்டம் காரணமாக ஏற்படும் ஆய்வுகூடங்கள் வேலையறைகள் உபகரணங்கள் என்பவற்றின் பற்றாக்குறை.
- மாணவர்களிடமும் பெற்றோர்களிடமும் தொழில்சார், துறைகல்வி சார் துறையை விடத் தாழ்ந்தது என்ற பிழையான மனப்பாங்கு காரணமாக அத்துறையைத் தெரிவு செய்வதற்கான தூண்டுதல் குறைவாக காணப்படல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான நிலையில் வளப்பற்றாக்குறை, ஆசிரியர் பற்றாக்குறை, உபகரணப்பற்றாக்குறை, என்பன இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலேயே கூடுதலாக காணப்பபடுகிறது. அதேவேளை விஞ்ஞானத்தையும் தொழில்நுட்பத்தையும் கற்பிக்க கூடிய ஆசிரயர்களுக்குப் பெருந்தட்டுப்பாடு உண்டு மேலும் ஆசிரியர் தொழல் மிக குறைவன சம்பளத்தைத் தரும் தொழிலாகும் சேவை நாட்டம் குன்றியிருப்பதற்கு பெரும்பாலும் ஆசிரியர்களது சம்பளம் குறைவாகவிருப்பதும் குறைந்த தொழில் வசதிகளுமே காரணம் என இனங்காணப்பட்டடுள்ளது.

எனவே இலங்கையில் சமகாலமாக கல்விப் பிரச்சினைகளுள் வினைனத்திறனின்மை அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. சமூகத் தேவைக்கும் கல்விக்கும் இடையயல் காணப்படும் பொருத்தப்பாடற்ற தன்மையாகும் கல்விக்கும் தொழில்வாய்ப்புக்கும் இடையில் காணப்படும் ஒவ்வாமை இன்று அதிகரித்துள்ளது.

இலங்கையில் இவ்வாறான ஒரு வரலாற்றுப் பின்னணியில் பொருளதாரம் வளர்ச்சி அடையாது கல்வி மட்டும் அளவு ரீதியாக அதிகரித்ததே இதற்கான காரணமாகும். கல்வி என்பது ஒரு பொது மனித உரிமை எனக்கருதப்பட்டாலும் இலங்கையிலுள்ள இலவசக் கல்வி முறை மூலம் எல்லோருக்கும் கல்வியில் சம சந்தர்ப்பம் வழங்கப்பட்டாலும் கல்வியை முடித்த எத்தனை வீதமானவர்களுக்கு தொழில் வாய்ப்பை பெற்றுக் கொடுக்க முடிகிறதா? என்ற தரவுகளை அடையாளப்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும். இவ்வாறான தொழில் வாய்ப்பு போட்டியும், அரசியல் தலையீடுகளாலும் இளைஞர்கள் விரக்தியுற்று புரட்சி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் மேலும் இவ்வாறான சூழ்சிலையில் இவர்களுக்கு போதிக்கப்படும் பாட உள்ளடக்கத்தினூடாக அபிவிருத்திக்குத் தேவையான நிலைமையோடு பொருத்தப்பாடுடையும் திறனுள்ள ஆக்கபூர்வமான தலைவர்கள், தீர்மானம் எடுக்க கூடியவர்கள், தொழில் முயற்சியாளர்களாக செயற்படக்கூடியவர்கள் அதிக எண்ணிக்கையில் உருவாக்கப்படுவதில்லை என்ற ஒரு குறை காணப்படுவதை நன்கு அவதானிக்க முடிகிறது.

எனவே இலங்கை போன்ற எமது நாட்டில் இலவசக்கல்வி, இலவசசீருடை, மதியஉணவு போன்ற அரசின் நடைமுறைக்குச் சாத்தியமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டாலும் பெற்றோரின் குடும்பச் சூழல், வறுமை காரணமாக மாணவர்களின் வரவு, இடைவிலகல், சிறுவர்களின் தொழில் முயற்சிகள் காரணமாக கல்விச் செயற்பாட்டை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்ல முடியாமல் அரசின் செயற்பாடுகளும் காணப்படுவதை ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எனவே உலகில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பொதுவான கல்விப் பிரச்சினைகளையே இலங்கையும் அண்மைக்காலங்களாக எதிர் கொண்டு வருகிறது. எனினும் பொருளாதாரப் பின்னடைவு கல்வியில் அரைகுறையாகவேனும் தாக்கத்தை செலுத்தக்கூடியதாக காணப்படுவதை அவதானிக்க முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தவகையிலே இலங்கை சமகாலத்தில் எதிர் கொண்டு வருகின்ற கல்விப் பிரச்சினைகள் மாணவர்கள் மத்தியில் கல்விச் செயற்பாட்டில் ஓரளவேனும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வெளிப்படையான காரணிகளாக அடையாளப்படுத்த முடிந்துள்ளது. எனவே இவ்வாறான பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கு கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்கு ஒரு நிபுணத்துவ குழுவை நியமித்து அக்குழுவின் அறிக்கைகளையும், பரிந்துரைகளையும் மையமாக கொண்டு ஒரு தேசிய கல்வி மாநாட்டை ஏற்பாடு செய்து அங்கு இலங்கையிலுள்ள கல்வியாளர்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொண்டு ஒரு சுமுகமான தீர்வுகளை நாளைடைவில் பெற்றுக் கொள்ள முடியும். என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

எனவே இவ்வாறான ஆக்கபூர்வமான/ உணர்வுபூர்வமான கல்விச் செயற்பாடுகள் மூலமாக வழங்க முடியும், அவ்வாறு காணப்படாதவிடத்து இலவச கல்வி முறைமைகள் இல்லாதொழிந்து தனியார் பாடசாலைகளின் ஆதிக்கம் தலைதூக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆகவே இலங்கையின் சிறந்த கல்விக் கொள்கையின் கீழ் ஒன்றிணைத்து செயற்பட்டு எதிர்கால மாணவர்களின் கல்வி வளர்ச்சிப்பாதையில் ஓரணியில் அணி திரள்வதன் மூலம் எமது இலக்கை நோக்கிப் பயணிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மனித உரிமைகளை நிலைநாட்ட நாங்கள் என்ன செய்ய முடியும்?" பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இப்படி ஒரு கேள்வி சிலரால் எழுப்பப்பட்டது. அந்தக் கேள்வியும் அதன் உட்பொருள் சார்ந்த சிந்தனையையும் அந்தச் சவாலை எதிர் கொள்ள வேண்டுமென்னும் ஆர்வத்ததையும் ஏற்படுத்தியது. ஒரு மனித உரிமை அமைப்பு கல்வி என்னும் அதன் செயல்தளத்திலிருந்து வேறுபட்ட ஒரு தளத்தில் ஈடுபடத் துணியலாமா? ஒரு சமூக ஆர்வலர் கல்வியாளராகச் செயல்பட முடியுமா? கல்வியின் குறிக்கோள் தகவல்களைச் கற்றுத் தருதல் அல்ல சமூக உணர்வூட்டுவதும் மனித நேயத்தை வளர்த்தெடுப்பதும் எனக் கொண்டால் சமூக ஆர்வலரைக் காட்டிலும் யார் சிறந்த கல்வியாளராக இருக்க முடியும்?

தொழிநுட்பக் கல்வி உட்பட அனைத்து வகைக் கல்வியுமே ஒருவகையில் மனித உரிமைக் கல்வியாகத்தான் இருக்க வேண்டும் "அனைத்து அறிவியல், தொழில்நுட்ப முயற்சிகளின் முதல் இலட்சியமே மனித வாழ்க்கை, அதன் எதிர்காலம் குறித்த கரிசனைதான் உங்கள் அறிவியல் வாய்ப்பாடுகள், வரைபடங்களுக்கு இடையில் சிக்கி இதை ஒருபோதும் மறந்துவிட வேண்டாம்". என மாபெரும் அறிவியலாளர் ஆல்பெர்ட் ஐஸ்டீன் சொன்னதை இங்கே குறிப்பிட வேண்டும்.

நடப்பிலுள்ள இன்றைய கல்வி முறை சமூகத்தை பல கூறுகளாக பிரிக்கி றது. ஏற்கனவே உள்ள ஏற்றத் தாழ்வுகளை நியாயப்படுத்துகிறது. நவீன உலகத்திற்கேற்ப புதியவகைப்பட்ட ஏற்றத்தாழ்வுகளை உருவாக்குகிறது. மாணவர்களைத் தம்மைச் சுற்றியுள்ள உலகிடமிருந்தும் தம் சொந்தச் சமூகத்திடமிருந்தும் அன்னி யப்படுத்துகிறது அன்னியப்படுத்தும் கல்வி சமூக நீதி, சமத்துவம் ஆகிய நாகரீக உலகின் பதிப்புகளைப் பேணத்தவறுவதுடன் அதன் மகத்தான பணி எனப் போற்ற-ப்படும் அறிவுத்தேடல் சார்ந்த முயற்சிகளிலும் மிக மோசமாகத் தோல்வியடைகி றது. தடுப்புப்பட்டை அணிந்த கண்களின் வழியே உண்மையின் குன்றிப் போன சொரூபத்தைத் தான் மாணவர்களுக்குக் காட்டுகிறது இன்றைய கல்வி முறை.

மேற்குறித்த கேள்விகளுடன் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் மனித உரிமைக்கல்வித்திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கான தேடலை முன்னிறுத்திச் செயல்படத் தொடங்கிய போது அதை வடிவமைப்பதற்கான கருத்தியல்களும் ஊக்கமும் களத்திலிருந்து கிடைத்தன. கல்வி என்பது அதில் தேர்ச்சிபெற்ற நிபுணர்களின் பங்களிப்பைக் கோருவது. ஆகவே அதை வடிவமைக்கும் பணியைக் கல்வியாளர்களின் பொறுப்பில் விடத்தீர்மானித்தார்கள். ஆறு, ஏழு, எட்டு வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் இக்கல்வியை பெற்றுவந்தனர் ஆறாம் வகுப்பில் மனித உரிமைகள் குறித்தும் ஏழாம் வகுப்பில் குழந்தைகளின் உரிமைகள் குறித்தும் எட்டாம் வகுப்பில் பாகுபாடு குறித்தும் அறிமுகப்படுத்தும் விதத்தில் பாடத்திட்டங்கள் வகுக்க-ப்பட்டன. பாடங்கள் மாணவர்களின் வாழ்வியல் சூழல், அவர்களது அன்றாட அனுபவங்கள், ஊடகச்செய்திகள் ஆகியவற்றிலிருந்து உருவாக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதிப் பாகுபாடுகளைப் பல ஆசிரியர்கள் அணுகும் முறை சாதியச் சித்தாந்தம் இச்சமுதாயத்தை முழுமையாக ஆட்கொண்டிருப்பதற்கு சாட்சி, தலித், தலித் அல்லாத ஆசிரியரிடைய பயிலரங்குளில்வெளிப்படும் நம்பிக்கையின்மைகள் இட ஒதுக்கீட்டால் முன்னேறியிருக்கும் பிற்படுத்தப்பட்டோரிடையே தலித் மக்களுக்கான சட்டங்கள் சலுகைகள் உருவாக்கும் காழ்ப்புணர்ச்சி இவற்றையெல்லாம் உடைத்துதான் இவர்களை மனித உரிமை கற்பிக்கும் ஆசிரியர்களாக மாற்ற இயலும் இது பிரம்மப் பிரயத்தனம் தான். ஆனால் இவற்றையும் கடந்து சிறந்த அர்ப்பணிப்பு உணர்வு கொண்ட ஆசிரியர்கள் பலர்உருவாகியுள்ளனர் என்பது நம்பிக்கையூட்டும் நற்செய்தி.

நாங்கள் சிந்திக்க வேண்டியுள்ள சவால்களும் கேள்விகளும் பெருகிக்கொண்டிருக்கின்றன. எல்லாக் கேள்விகளுக்கும் எங்களிடம் விடைகள் இல்லை. மனித உரிமைக் கல்வி ஆசிரியரும் மாணவரும் என்றோ ஒரு நாள் விடைகளைக் கண்டுபடிப்பர் என்னும் நம்பிக்கையில் நாங்கள் எங்கள் பணியைத் தொடர்கிறோம். சக்தி வாய்ந்த விதைகளை எங்கள் சிறிய கரங்களால் எடுத்து இந்த உபகண்டத்தின் மேல் வீசியுள்ளோம் அவை எங்கு விழுந்தாலும் முளைத்தெழும் என்னும் நம்பிக்கையோடு தொடர்கிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு செ.ரஞ்சன் செல்வகுமார் (ஆசிரியர்)
வ/செட்டிக்குளம் ம.வி.

## அன்னையின் மறுபெயர் அன்பே!

அன்னையின் மறுபெயர் அன்பே! – பல
ஆயிரம் உறவுகள் யாவும் அவள் பின்பே !!
பாசம் வைப்பதில் முதலிடம் தாய்க்கே! – பல
தேசம் அறிந்த பேருண்மை இதுவே !!
மாசம் பத்து சுமந்தவள் அவளே – மண்ணில்
வாசம் வீசிடும் அன்புமலர் தாயே !!

நேசம் கொள்வார் பிள்ளையில் பலரும் - பகல்
வேசம் பலவும் கலந்ததில் இருக்கும் !
மோசம் போகவும் இடம் உண்டாகும் - பரி
நாசம் ஆகிடும் பிள்ளையின் வாழ்வும் !!

தோசம் அற்ற அன்பைச் சொரிவாள் - வெகு
தோதாய்க் கண்டிப்பும் கலந்தே தருவாள் !
வாசம் நிதமும் மழலைக்காய்ப் புரிவாள் - விரைந்து
வளரும் பயிரினை முளையிலே தெரிவாள் !!

மோட்சம் இருப்பது தாயின் காலடியில் - என்ற
கோ'ம் இருக்குது தாய்க்காய் இப்பூவுலகில் !
பேசவும் நேரமில்லைத் தந்தைக்கோ பிள்ளையிடம் - அவர்
மாசாமாசம் சென்றிடுவார் பணமீட்டத் தொலைவிடம் !!
நேசமுடன் பிள்ளைகளைப் பேணுதலோ தாயிடம் - இது
தேசமெங்கும் தெரிந்த உண்மை ! – நீர்
கேட்டுப் பாரும் யாரிடம் !!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி. றதீபன் விஜயதர்ஜினி (ஆசிரியர்)
வ/கணேசுவரா ம.வி.

## மாறும் உலகில் மாறாத செழுமை

இயற்கை என்பது இறைவன் எமக்களித்த அளப்பெரிய பொக்கி'ம். இது என்றும் நிலைத்திருக்கும் தன்மை கொண்டது. என்பதனால் தான் அதன் பெருமையை யாராலும் மாற்ற முடியாத செழுமையைக் கொண்டு விளங்குகிறது.

அந்த வகையில் எனது கிராமம் அவ்வாறான அழகுள்ள ஒரு இடமென்றே கூறமுடியும். இங்கு இயற்கையின் அனைத்து அம்சங்களும் சிறப்புறக் கிராமத்தை வளப்படுத்துகின்றன. அந்தவகையில், "நிழல்தரும், மழைதரும், காய்தரும், கனிதரும், காற்றும் தரும் காய்ந்து விழுந்தாலும் விறகாகத் தன்னையே தரும்" இப்படித் தரும் தாய் அதன் பெயர் தரு என்றனர். அவ்வாறான செழிப்புள்ள ஓங்கி உயர்ந்து பல்வேறுபட்ட தருக்கள் பாவக்குளத்தின் பொருமையினைத் தேவலோகத்தின் கற்பகத்தருக்கள் கொண்ட பெருமையிலே விளங்குகின்றன.

இயற்கை எழில் கொஞ்சும் வண்ணம் தொன்று தொட்டு பழமை பேணும் கலாச்சார மாந்தர் கூட்டம், ஆங்கங்கே இயற்கை வனப்புள்ள மலைத்தொடர்கள். பரந்து விரிந்த வயல் வெளிகள் அவற்றை காத்து நிற்கும் புல்வெளிகள் அதனருகே சோவென்று இரச்சலுடன் சோலையாக்கும் ஆறோடும் நீர்வளம் பெருக்கும் பென்னம் பெரிய தடாகங்களும் தடாகத்தில் தங்கம் போல தாமரை மலர்களும் தன்னகத்தே கொண்டு விளங்கும் கிராமமிது என்பதில் ஐயமில்லை.

இக்கிரமத்தில் இவ்வாறான இயற்கைத் தன்மைகள் எங்கும் காண முடியாத அளவு இன்றும் பெருமை சேரப்பதென்பது யாவரும் அறிந்த மறக்க முடியாத உண்மை. அந்த வகையிலே இவற்றை எவ்வாறு என நோக்குமிடத்து அதன் அருமைகளையும் பெருமைகளையும் அறிய முடியும்.

இங்குள்ள மக்கள் என்றும் பழமை போற்றும் பண்புடன் இன்றும் மாறும் உலகிற்க ஏற்ப மாறாமல் தமது கலாசாரத்தையும் பண்பாட்டையும் இன்று பேணிக்காக்கின்றனர் என்றே கூறவேண்டும் அன்று எமது ஆன்றோரும், சான்றோரும் கூறிய ஒழுக்கம், விழுமியங்கள் என்பனவற்றை வெறுமனே கூறுவதில் பயனேதுமில்லை அவற்றைக் கண்ணெதிரே காணும் போது மனதிற்கு ஒன்றுமில்லாத அளவுக்கு மகிழ்ச்சி பொங்கும். ஆம் அதாவது ஒவ்வொரு இடங்களிலும் "ஔவையார்" கூறியது போல கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பதனை என்றும் மறக்காமல் பல கோயில்களும் கலாச்சாரங்களை மதித்துப் பழமையை என்றும் பேணிக்காத்து அதனை அழியாமல் பாதுகாக்கும் மக்கள் வாழும் வழ்ந்து கொண்டிருக்கும் கிராமம் இது.

ஆங்காங்கே ஆண்டுகள் தோறும் ஆலயங்களில் நடைபெறும் ஆலயவிழாக்கள் அவ்விழாக்களை சிறப்பான முறையில செவ்வனே செய்யும் மக்கள் காணப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மக்கள் தமது அன்றாட வாழ்வுக்கு அவசியமான ஜீவனோபாயத் தொழிலாக விவசாயத்தைச் செய்து வருகின்றனர். தமது கிராமத்தின் செழுமைக்கு அங்கே தடாகத்தின் தண்ணீர்த் தானமாக வயல் வெளிகள் பெற்று வனப்படைவதுடன் வளமான வாழ்வை வளப்படுத்தி நெல் வயல்கள் காணப்படுகின்றன. இவ்வயல்களில் மாந்தர் வேர்வை சிந்தி உழைக்கின்றனர். நவீன இயந்தி சாதனங்களுக்கு முகங்கொடுக்கின்ற போதும் பழமையினை மறப்பவர்களாக இல்லை.

இதுமட்டுமன்றி செல்வங்கள் சிறப்படையச் செய்யும் செழுமை பெறச் செய்யும் என்பது போல ஆக்களின் நிரை ஆங்காங்கே அளவுக்கதிகமாக வயல்வெளிகளில் புற்களை மேயும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். இது தவிர வயல்வெளிகளில் வண்ணமயிலின் வண்ணக்கோலங்களையும் காணும் போது உமது கிராமத்தில் சிறப்பும் செழுமையும் என்றும் மாறாது பேணப்படுவதை அறியலாம் உழவர்கள் வயலை உழும்போது அவர்களை வாழ்த்தும் கூட்டம் வெண்பஞ்சுக் கூட்டம் போல வெள்ளைக்கொக்குகளின் காட்சியும் கிராமத்தை மேலும் செழுமை பெறச் செய்கின்றது

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்
மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்வர்"

என்பது வள்ளுவர் வாக்கு அதே போல உழவுக்கு கலப்பையும், கலப்பையில் மாடும் கொண்டு வயலை வளமாக்கும் காட்சி சிறப்பானது இதனையே ஔவையார் மிக அழகாகக் கூறுகிறார்.

"நெல்லுக்இறைத்த நீர் வாய்க்கால் வழியோடி
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் கொல்லுவதில்

நல்லார் ஒருவர் உளரே அவர் பொருட்டு
எல்லோருக்கும் பெய்யும் மழை"

என்பது போலவே மழைக்காலம் வந்துவிட்டால் போதும் இங்கு வாழும் மக்கள் நல்லார் என்றே கூறமுடியும். வறுமையிலும் செழுமையாகவே வாழ்கின்றனர். தமது பொருளாதார முன்னேற்றத்திற்காகவே பெரும்போகம், சிறுபோகம், வீட்டுத்தோட்டங்கள், பசுக்களில் பால் பெறுதல் என ஏதோ தமது வாழ்வைக் கொண்டு இன்றும் சிறப்பான முறையில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றானர்.

அதுமட்டுமன்றி இங்கு இன மத மெழியின்றி மூவின மக்களும் முன்னேறும் அளவு தமிழர், சிங்களவர், முஸ்லீம்கள் என்ற பாகுபாடின்றி ஒற்றுமையாகவும் விட்டுக்கொடுத்ததும் தமது பண்பாட்டைக் காத்து விழுமியங்களைப் போற்றிப் பேணிக்காப்பவர்களாக வழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்றால் அது மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது போலவே நாம் என்ன கல்வியில் குறைந்தவர்களா? என்று கூறும் அளவுக்கு கற்றவர்களும் வாழ்ந்து கொண்டிருப்பது வீரத்தமிழன் வாழ்ந்து காட்டிய மாபெரும் கிராமம் மற்றுமல்ல தொடர்ந்தும் வாழ்ந்து கொண்டேதான் இன்றும் இருக்கிறார்கள் அவர்கள் தமது கல்வியின் பயனை முழுமையாவும் சரியான முறையிலும் பெற்றுப் பேரும் புகழுமை மங்காத வகையில் இக்கிராமத்திற்கு செழுமையும் வளமும் சேர்ப்பவர்களாக உள்ளனர் இன்றைய காலங்களில் பல்வேறு இடங்களில் சமூகச் சீர் கேடுகளும் கலாசார்ச சீர்கேடுகளும் இடம் பெற்று வருகின்ற போதிலும் தமது ஒழுக்க விழுமியப் பண்புகளையும். பண்பாடுகளையும் கட்டிக்காத்து வரும் ஆன்றோர் வாழும் கிராமம் என்றே கூறமுடியும்.

இது தவிர அடர்ந்த பெருங்காட்டின் மூலமே ஆண்டுகள் தோறும் மழை பெய்து வருவது சிறப்பான செயலாகும் இக்காட்டில் ஏராளமான பயன்தரும் தாவரங்களும் அதில் மூலிகைத்தாவரங்கள் வீரமரம், பாலை மரம், முதிரை மரம், என பலமுள்ள பலம் தரும் பல தருக்கள் அதனைக்கொண்டு அன்றாட வாழ்வுக்கு வேண்டிய தேவைகளை நிறைவேற்றி வருகின்றனர். உலகம் இன்று பல்வேறு நவீன சாதனங்களை பலவற்றைத் தோற்றுவித்துக் கொண்டே இருந்தாலும் அதனையும் தொட்டு விடும் நமது மக்கள் தொட்டுப்-பார்த்தால் மட்டும் போதும் தொடர்ந்து பார்க்க மறுத்து நமது பண்டைய முன்னோர் கட்டிக்காத்த "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" எனும் பழமொழிக்கேற்ப தமது குறையாத செல்வங்களாக பழமையயைப் பேணிக்கா-த்து வருவது யாவரும் அறிந்த ஒன்றே.

அடுத்து இயற்கையில் நாம் வாழ்கின்றோம் இயற்கை எங்களை வாழவைக்க-றது என்று கூறும் அளவு ஆறும், குளங்களும் நீர்வளத்தை நிலையாகக் கொண்டு நின்மதியான தொழிலுக்குத் துணைபுரிவதாக அமைந்திருப்பது பெருமை. அதாவது எமது பண்டைய மூதாதையர் விட்டுச் சென்ற எச்சங்க-ளான மிகப்பெரிய "பாவற்குளம்" இதை என்றும் நாம் எள்ளளவும் மறந்துவிட முடியாத சொத்து முதியவர்கள் விட்டுச் சென்ற அருமைகளை இன்றும் நாம் பெருமையாக்கி செழுமையாக்குவோம் என்று கங்கனங்கட்டும் அளவுககுப் பேணிக்காத்துப் பயன்படுத்தி இன்றும் இயற்கையின் சீற்றங்களுக்கு முகங்கொ-டுத்தாலும் எமக்குள் சீற்றமினிற சிறப்பாக வாழவைக்கும் வளமுள்ள கிரமம் இது என்றால் அது உறுதியானதே.

இது தவிர எத்தனையோ தகவல்கள் பெறும் ஊடகங்கள் தோன்றினாலும் நாம் பழமையை என்றும் பேணிக் கொண்டே வாழ்வோம் என்று வாழ்த்து கொண்டிருக்கும் கிராமமக்கள்.

"அன்பு என்பது சொற்களில் வாழ்வதில்லை
அன்பைச் சொற்களால்
விளக்கவும் முடியாது
பெறுகிறது அன்பு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அன்னை திரேசா கூறியது போல அன்புள்ளங்கொண்ட மக்கள் தமது செயல்கள் மூலம்வாழத்தான் செய்கிறார்கள்.

"தேவைக்கு மேலே பொருளும்
திறமைக்கு மேலே புகழும்
கிடைத்து விட்டால்
பார்வையில் படுவதெல்லாம்.
சாதாரணமாகத்தான் தோன்றும்"

என்ற கண்ணதாசனின் கவிவரிகள் போல் எமது கிராமமக்கள் செயல்களை அவர்கள் சாதாரணமாகத்தான் எண்ணிக்கொண்டு அன்றும் இன்றும் என்றும் செழுமையுடன் வாழ்கின்றார்கள்.

எனவே இன்றைய மக்களின் சில தேவைகள் நிறைவெற்ற முடியாத சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் என்றோ ஒரு நாள் மாறும் என்றும் அன்றே எண்ணி "காலத்தின் தேவை கலங்கரை விளக்கு" என்பது போல உலகின் உயரத்திற்கு நாமும் செல்லுவோம் என்பது போலவும் எமது பண்பாடு கலாச்சாரம் விழுமியங்கள் என்பனவற்றை நாம் என்றும் அழிந்திடாது பேணிப்பாதுகாப்போம் என்று கூறும் அளவிற்கு வளமும் வாழ்வும் கொண்டு வாழ்பவர்கள் நம் வளமான வாழ்விற்கு என்றும் தலை வணங்குவோம் என்பது போல் வாழ்கின்றோம் வாழ்வோம் என்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ.டிபீக்கா
வ/செட்டிக்குளம் ம.வி
A/L Art 12 M

## விடிவைத் தேடி...

கன்னத்தில் கரை புரண்டோடும்
கண்ணீரை ஏந்திய
கண்கள் தான் எத்தனை!
தாய் தந்தை உறவுகளைப்
பிரிந்து வாழும் மனங்கள்
இன்று எத்தனை!

வாழ்வு எங்கே? என ஏங்கி
வாழ் நாட்களை கேள்விக் குறியாக்கி
பல வலிகளைத் தாங்கிக் கொண்டு
எப்போ வழி கிடைக்கும் என ஏங்கிடும்
விழிகள் எத்தனை!

விடியாத இரவுகளை – தம்
விழிகளிலே ஏந்தி
விட்டில் பூச்சி போல
வீழ்ந்து விடுவோமோ என்று
ஏங்கும் மனங்கள்
இன்று எத்தனை!

துள்ளித் திரியும்
இளமைப் பருவத்தை
துக்கத்தோடு கழித்துக் கொண்டு
சிறைக் கதவுக்குள்ளே
சிதைக்கப்பட்டிருக்கும்
உள்ளங்கள்
இன்று எத்தனை!

விடிவு எங்கே? – அது
விடியாதோ இங்கே – என
ஏங்கிடும் எம்மவர்க்கு
விடிந்திடாதோ நல்வாழ்வு.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவீன தொடர்பு சாதனங்களும் சிறுவர்களும்

உலகம் இன்று இயங்குவதற்கு அடிப்படை தேவையான விடயம் "தகவல் தொடர்பு" என்பது மறுக்க முடியாத உண்மையாகும். செய்திகளை கொடுத்தலும் பெறுதலும் மாத்திரம் தகவல் என்ற எண்ணக்கருவிலிருந்த காலம் போய் இன்று மனிதனுடைய வாழ்விலே பல பரிமாணங்களில் தகவல் தொடர்பியல் பின்னிப் பிணைந்து விளங்குகிறது. என்ற வகையில் நவீன தொடர்பு சாதனங்களாவன கணினி, தொலைக்காட்சி, இணையம், மின்னஞ்சல், தொலைபேசி போன்றவையாகும். இவற்றின் பயன்பாடும் சிறுவர்களும் பற்றி அறிதல் அவசியமானது.

நவீன தொடர்பு சாதனங்களின் வருகையால் இன்று உலகமே ஒரு குடையின் கீழ் சுருங்கி விட்டது. வானத்துக்கும் வையகத்துக்கும் இடையே இணைப்பு ஏற்பட்டுள்ளது ஒரே நேரத்தில் பல்வேறு செய்திகளை அனுப்புவதற்கும் குறுகிய காலத்தில் அச் செய்தி சென்றடைவதற்கும் இத் தொடர்பு சாதனம் பெரும் பங்கு வகிக்கின்றது. இத் தொடர்பு சானங்களின் பல்வேறு இன்னல்களும், நன்மைகளும் மக்களுக்கு ஏற்படுகின்றன.

கணினியை எடுத்து நோக்குவோமானால் கணினியானது மக்களுக்கு பல்வேறு வகையில் உதவுகின்றது. எவ்வாறெனில் பாடம் தொடர்பான மேலதிக தகவல்களை பெறுவதற்கு, செய்திகளை பெறுவதற்கு போன்றவைக்கு இக்கணினி மாணவர்களுக்கு உதவுகிறது. மேலும் சில தீமைகளையும் இது விளைவிக்கின்றது. எவ்வாறெனில் ஆபாச சினிமா பாடல்கள், சினிமா படங்கள் மற்றும் சில ஆபாச காட்சிகளையும் பார்த்து அதை தங்களது வாழ்வில நடை முறைப்படுததுகிறார்கள் இதனால் இவர்களது சுயகௌரவம் மற்றும் கல்வி நடவடிக்கை என்பன பாதிப்படைகின்றது. எனவே கணினியை தேவைக்கேற்ற மாதிரி நாம் பாவிக்க வேண்டும்.

விஞ்ஞான விருத்தியின் காரணமாக நாளுக்கு நாள் பல விந்தை சாதனைகளையும் கருவிகளையும் உலகம் பெற்று வருகிறது. அதில் தொலைகாட்சியும் ஒன்றுதான் இத் தொலைக்காட்சியினையும் அதனை பயன்படுத்தும் சிறுவர்களை பற்றியும் அறிவோம். இத்தொலைக்காட்சியானது மக்ளின் வாழ்க்கையை சந்தோசமாக்கவும், துக்கமாக்கவும் வருகிறது. வான் அலைகளினூடாக ஓரிடத்தல் இடம்பெறும் நிகழ்ச்சிகளைக் கட்டு அனுபவிக்கக்கூடிய கேட்பியமாக எமக்கு கிடைத்த வானொலிக்கு பின்னர் உலகின் எந்தப்பகுதியிலும் எந்த நாட்டிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிகழ்ச்சிகளை உடனுக்குடன் பார்ப்பது போல கண்டு அனுபவிக்க வசதி செய்யும் தொலைக்காட்சியும் ஒன்றாகும்.

இத் தொலைக்காட்சி மூலம் ஏற்படும் நன்மைகளாவன செய்திகளை உடனுக்குடன் பார்த்தல், அறிவு சார்ந்த படங்களை பார்த்தல், போன்றன மூலம் பிள்ளைகளுக்கு அறிவும் ஓய்வு நேரத்தை சிறந்த முறையில் பயன்படுத்தவும் இத் தொலைக்காட்சியானது சிறுவர்களுக்கு உதவுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே வேளை இதன் மூலம் சிறுவர்களுக்கு தீமையும் ஏற்படுகின்றது. எவ்வாறெனில் இரவு நேர்தில் பாடசாலை வீட்டு வேலைகளை செய்யாமல் நாடகங்களை பார்த்தல், சினிமாப் பாடல், படங்களை பார்த்தல் என்பவை மூலம் இவர்களின் கல்வி நடவடிக்கை மற்றும் அவர்களின் அன்றாட நடைமுறை என்பன பாதிப்படைகின்றது.

எனவே சிறுவர்களாகிய நாம் தொலைக்காட்சியை நாம் நன்மையான காரியங்களுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும. தீமையான காரியங்களுக்கு பயன்படுத்துவதை தவிர்கவேண்டும். பல சிறுவர்கள் ஊன், உறக்கம், நன்பர்கள், விளையாட்டு, படிப்பு, பொம்மை எல்லாவற்றையும் மறந்து தொலைக்காட்சி பெட்டிதான் உலகம் என்று மாறிப் போவதிலிருந்து மீட்டெடுக்க வேண்டும். குழந்தைகளுக்கு பல விடயத்தை கற்றுக்கொடுக்கும் ஆசானாயிருக்கும் இந்நவீன தொடர்பு சாதனமான தொலைக்காட்சியானது சில சமயம் அவர்களை அடிமைப்படுத்தும் சாதனமாக மாறும் அபாயத்தில் இருந்து காப்பாற்ற வேண்டும் பெரியவர்கள் தான் விழிப்பாயிருக்க வேண்டும்.

இன்றய உலகில், தகவல் தொழில்நுட்ப துறையானது பெரு முன்னேற்றம் கண்டு மனிதனின் வாழ்வுவசதியும் பெருக்கிக்கொடுக்கிறது. பூகோளத்தையே மானிடன் தன் கைகளுக்குள் சுருக்கி அடக்கி காணுமளவுக்கு அவனின் விஞ்சிய அறிவு பயன்படுகிறது. உலகம் முழுவதையும் நாம் உட்கார்ந்து இருந்து இருந்த இடத்திற்கு கொண்டுவரும் அளவுக்கு ஒரு நவீன தொடர்பு சாதனமாக இணையம் விளங்குகிறது. வானொலியும், தொலைக்காட்சியும் ஒருவழிப்பாதையாக செயற்பட்டு தகவல் நிறுவனங்கள் தயாரித்து அனுப்புகின்றவற்றை மட்டும் அஞ்சல் செய்து வந்தன.

ஆனால் இணையத்தளம் இவ்விணையற்ற சாதனமே உலகம் முழுவதிலுமுள்ள தகவல்களையும் பொழுது போக்குகளையும் நாமே கணினி மூலம் எடுத்த கொள்ள வகை செய்கிறது. குரல் ஒலி, அச்சிட்ட ஆவணங்கள். ஒளிப்படங்கள், சலனப்படங்களையும் கூட ஒருங்கினைத்து எந்நேரத்திலும் எந்த இடத்திலும் தகவலை பெற்று கொள்ள இணையத்தளம் தொழிநுட்பம் நிறைந்ததாக பணியாற்றுகிறது.

இதன் மூலம் சிறுவர்கள் பல நன்மை அடைகின்றனர். அதாவது உலகம் பற்றிய தகவல்களை அறியவும். கல்வி தொடர்பான தகவலை அறியவும் உதவுகிறது. சில சமயம் பாலியல் வன்மை போன்றவற்றை செயற்பாடுகள் அவர்களது வாழ்க்கை, கல்வி போன்றன சீரழிகிறது. எனவே இணையத்தை சிறுவராகிய நாம் நமது நன்மைக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் தீமைக்கு உபயோகிக்க கூடாது.

சுருங்கக் கூறின் வளர்ந்து வரும் சமுதாயத்துக்கு ஏற்ப நவீன தொடர்பு சாதனங்களும் பாவனைக்கு வருகிறது அதற்கேற்ப சிறுவர்களும் வளர்ந்து வருகிறனர். ஆகவே பெற்றோர்கள் சிறுவர்களுக்கு தேவையான போது மாத்திரம் இத் தொடர்பு சாதனங்களை உபயோகிக்க அனுமதி அளிக்க வேண்டும் அவர்களின் நன்மைக்கு மட்டும் அவர்களுக்கு வழங்க வேண்டும்.

"நவீன தொடர்பு சாதனங்களை சிறந்த
முறையில் பயன்படுத்துவோம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A. வினோதினி
A/L
வ/ செட்டிக்குளம் மகா. வித்

## சேர்த்துவிடு

கடலே இரையாதே
காற்றே நீ வீசாதே
காலம் தெரியாத காலனாய்
பிஞ்சு உள்ளங்களை ஏன் இரையாக்கினாய்
பல உயிர்களை இரையாக்கிய உனக்கு
இனியும் ஒரு சீற்றம் வேண்டுமா?
அன்பான அம்மாவையும்
பச்சிளங் குழந்தை உயிரையும்
பார் பாராத உறவையும்
நீ மாய்த்தது ஏன்?
தனியாய் உள்ள உறவுக்கு
தயங்கித் தாங்கும் வையகத்தில்
தனிமரமாய் உள்ளோர் பலபேர்
உரமாக கண்ணீரும் கவலையும்
பிரிந்த உறவை ஒரு போதும்
சேர்க்க மாட்டாயா?
நீ எம்மிடம்.

## உனக்காக

அன்னையவள் நீ
அன்பாய் அமுதத்தினையும் - உன்
உதிரத்தினையும் அளவுக்கு
அதிகமாய் தந்து
அவனியிலே நான் வாழ
அவையினிலே நான் தலை நிமிர
ஆவலோடு காத்திருக்கும் - என்
அன்பு அன்னையே
அவ்வாறு ஒரு நாள் - நான்
வருவேன் ஆனந்தமாய்
என்றும் உனக்காக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்ஞானமும் விஞ்ஞானமும்

செல்வி. யோகசிகாமணி. ஷாதுரி
இல :- 250,
வீரபுரம்.

ஆதியும் அந்தமும் இல்லா பராபரம்
பேதமது ஆகிப் புணரும் பராபரை
என்று திருமந்திரம் சொல்கிறது
வெட்ட ளெியே மெய்யென்று
இருப்போர்க்கும்
பட்டயம் ஏதுக்கடி குதம்பாய்

என்று இந்த வெட்ட வெளியாகிய பிரபஞ்சத்தைக் குதம்பைச் சித்தர் குறிப்பி டுகிறார்.

உலகம் தோன்றி அதில் உயிரினங்கள் தோன்றி உயிரினங்களின் பரிநாம வளர்ச்சியின் பெயரில் ஆதி முதல் மனிதன் தோன்றி, மானுட வர்க்கம் பெரிகி, மனிதன் சிந்திக்க கற்றுக் கொண்ட காலம் முதலாக மனித அறிவு வளர்ந்து இருக்கிறது. இந்த அறவின் வளர்ச்சி காரணமாக, இன்றய அறிவியல் புதுமைகளும். இலக்கிய இலக்கணங்களும் வளர்ந்து நின்று மானுட வாழ்வை மிளிர செய்து கொண்டு இருகின்றன. இவை அனைத்துக்கும் அடிப்படை மனிதன் பெற்று கொண்ட அறிவின் முதிர்ச்சியே ஆகும்.

அறிவு என்பது அறிந்து வைத்து கொள்ளுவது என பொருள்படுகிறது அறிந்து கொள்ளுவதாகிய இந்த அறிவு ஞானம் என்ற சொல்லாலும் குறிக்க-ப்பபடுகிறது. இந்த அறிவாகிய ஞானம் சான்றோர்களால் இரண்டு வகையாக பிரித்து பார்க்கப்படுகிறது. ஒன்று விஞ்ஞானம் மற்றது மெய்ஞானம். விஞ்ஞானம் ஸ்ரீ விகன ஞானம் என பிறிக்கலாம் "விக்ன என்றால் உடைந்த அல்லது சிதைந்த என பொருள்படும் எனவே விஞ்ஞானம் ஆனது. உடைத்து பார்க்கின்ற அறிவு அல்லது சிதைத்து பார்க்கின்ற அறிவு என பொருள்படும் அவ்வாறே மெய்ஞனம் ஆனது. மெய் என்றால் உடம்பு, உண்மை என்று பொருள் மெய்ஞானம் என்றால் உடம்பை பற்றிய அறிவு என்பது மேற் பொருள் இது வல்லாது உண்மையான அறிவு என்றும் பொருள் கொள்ளலாம். விஞ்ஞானம் எவ்வாறு. அறிவியல் மேதைகளால், விஞ்ஞானிகலால் பௌதீகம், இரசாயனம் உயிரியல் என்ற 3 வகையாக பகுக்கபட்டுள்ளதோ அவ்வாறே மெய்ஞானமும். மெய்ஞானிகலால் உடம்பு, உயிர், மனம் என 3 வகையாக பிரிக்கப்பட்டுள்து மூன்றையும் எவ் பாதிப்பும் இல்லாமல் பாதுகாக்க பல வழியையும் மெய்ஞானம் கூறுகிறது".

விஞ்ஞானத்திற்கும் மெய்ஞானத்திற்கு குறிப்பிடும் படியான ஒற்றுமைகள் என்றில்லை என்ற போதிலும் அன்றைய மெய்ஞான வழியில் இன்றைய விஞ்ஞானம் இயங்கிக் கொண்டுள்ளது. விஞ்ஞானம் தனது சோதனை கூடத்திற்குள் சிக்குகின்ற பொருற்களை மட்டும் ஆய்வு செய்ய முடியும் ஆனால் மெய்ஞானமோ கண்ணால் பார்க்க முடியாத. கைகலால் தீண்ட முடியாத எந்த சூற்சமத்தையும் ஆய்வு செய்யவள்ளது விஞ்ஞானத்-தின் கோற்பாடுகள், முடிவுகள் விஞ்ஞானிக்கு விஞ்ஞானி நாட்டுக்கு நாடு, கலதிற்கு காலம் மாறகூடியவை. ஆனால் மெய்ஞானத்தின் கோட்பாடுகளும். முடிவுகளும். அன்றும் இன்றும் இனி என்றும் நிலையனவை மாற்ற முடியா ஒன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானமும் மெய்ஞானமும். ஒன்றுக் கொன்று வேறுபட்டதிலும் மெய்ஞானதில் வழியில் விஞ்ஞானம் ஆனது வளர்ந்து விடுவது சாத்தியமானது அன்று ஞானிகள் இப் பூமியில் இருந்து நவக்கிரகத்தைை அறிந்தனர் இன்று விஞ்ஞானிகள் விண்வெளி சென்று அறிகின்றனர்.
அவ்வாறே ஆலய அமைப்பில் இருந்து ஆலய வழிபாடு முதல் ஒவ்வொரு துரும்பிலும் மெய்ஞான வழியில் விஞ்ஞானம் ஈடுபட்டுள்ளது. ஆலயம் அமைப்பது என்பது ஆலயம் கருங்கள்ளினல் அமைக்கப்படுகிறது மெய்ஞானதில் விந்தையில் சிந்திப்பீர்.

கோவில் சுற்று கருங்கல் எல்லாம்
மென் காந்த அலையை உமிலர்ந்திடுமே
அருகில் அமர்ந்து அசனம் இட்டால் மனதில்
ஒரு நிலை என்பது கிடைத்திடுமே.

மனதை ஒரு நிலைபடுத்த இன்று நாம் முயற்சிகின்றோம் ஆனால் அன்று அதை கருங்கல் ஆலயம் என்ற பெயரில் இலகுவில் முடித்து இருக்கின்றனர் மெய்ஞான ी கள்.

கோவில் கோபர உச்சத்தில்
செம்பினை நட்டு வழிபடும் முறையை
நாமே கண்டோம்
அது இடியை தடுத்து – பலர்
குடியை காக்கும் அதன் அதிசய அறிவியலை
யார் அறிவீர்.

கோவில் மணி அடிப்பது சம்பந்தமானது
எங்கள் கோவில் மணியின்
அதிர்வுகள் கூட சமநிலை
அலைகளை பரப்புமே.
அடித்தவன் காதில் தெறிக்கும் போது
உற்சாக ஊற்று பெருகுமே.

கல்லும் முள்ளும் காலுக்கு
மெத்தை சரணம் போட்டு சென்றிடுவோம்.
அதில் அக்குபஞ்சர் அறிவியல் முறையில்
இர்த்த ஓட்டம் பெருக்கிடுவோம்.

இது மட்டுமல்ல நாம் செய்யும் நாளாந்த செயற்பாட்டிலும் மெய்ஞான விஞ்ஞானத்தை காணலாம்

சாணம் கரைத்து வீட்டில் தெளித்து
நோய் எதிர்ப்பு செய்திடுவோம்
நாளும் தூய்மை காத்திடுவோம்!

மார்கழி பொழியும்
மாக்கோலம் வரைவோம்
அதை ஊர்வன உண்டு பிழைத்திடுமே!
இந்த ஊனில் தூயக்காற்று கிடைத்திடுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது மட்டுமல்ல இறை சிந்தனையில் அணியும் திருநீறும் கூறும் மெய்ஞான விஞ்ஞானத்தை.

ஈரநெற்றியில் காய்ந்த வீபூதி
பட்டை அடித்து திரிந்திடுவோம்
தலை நீர் உறிந்து
தலை வலி குறையும்
அதியம் தன்னை நடத்திடுவோம்
சூரியன் உதிக்கும் முன்பும்
மறைந்த பின்பும்
உணவை கையில் தொடவேமாட்டோம்
இரவில் உணவு
ஜீரண குறைவு
அதிலும் அறிவியல் வைத்ததை சொல்லமாட்டோம்.

என்று உணவு வேளையிலும் மெய்ஞான வழியில் விஞ்ஞானம்
தலையில் கொட்டி
கணபதி வணங்கி
அந்நாளை இனிதாய் தொடங்கிடுவோம்
நினைவாற்றலை நாளும்
வளர்த்திடுவோம்!

சனியின் கண்ணில்
புற ஊதாக்கதிரை கண்டு
அவன் கண்ணை கருப்பு துணியால்
கட்டி வைத்தவன் எம் தமிழனே.

நாலாயிரம் நோயை ஒன்றாய் போக்கும்
அதிசயம் அறிந்தவன் தமிழன்
துளசி மாடம் வீட்டில் வைத்து வணங்கியதும்
அந்த நோக்கம் தானே.

இன்னும் சொல்ல ஆயிரம் உண்டு. விஞ்ஞானம் மெய்ஞானம் இரண்டும் கற்ற அறிவியல் மேதை நம் தமிழன் என் தாத்தன் பாட்டன் வாய் வழி சென்ன ஒற்றை நூல்தான். உங்கள் ஒட்டு மொத்த மெய்ஞான அறிவயலை விஞ்ஞானம் கொண்டுள்ளது என்று உணர்த்திடு.
என் அமுதே என் தமிழ்.....

"என் மக்கள்"

கடல் மலை மேகம் தான் எங்கள் கூட்டம் மெய்ஞான வழில் விஞ்ஞானம் வளர்ச்சி கண்டுள்ளது. இன்னும் வளர்ச்சி காணும்.
நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S. பிரவிந்த்
வ/ கணேசுவரா. ம.வி
வாரிக்குட்டியூர்
படிவம்- 5

## அன்னை ஓர் ஆலயம்

இயற்கை எழில் நிரம்பிய பூஞ்சோலை என்னும் கிராமத்தில் வாழ்ந்து வரும் செல்வ ரஞ்சினி 2016.01.04 ம் திகதி தனது கணவனை இழந்தார். கணவன் இறந்து இரு மாதங்களின் பின் 2016.04.26 ம் திகதி கணவனின் உறவினரும், பெற்றோரும் சேர்ந்து செல்வரஞ்சினியை கர்ப்பினி பெண் என்று பார்க்காமல் வீட்டில் இருந்து விரட்டி விட்டனர். பின் தனது பெற்றோர் வீட்டில் தங்கியிருந்-தாள். சில மாதங்கள் களித்து அவளுக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்தது அதற்கு ரகு என்று பெயர் சூட்டினார் ரகு பிறந்து 8 வருடத்தின் பின் ரகு வின் பிறந்தநாளுக்காக புதிய ஆடை வாங்கச் சென்ற அவனது தாத்தா பாட்டி வீடு திறும்பும் பொழுது சிறிய விபத்தில் இறந்துவிட்டனர். பின் அவர்கள் இருவரும் நகரத்திற்கு சென்றனர். அங்கு எவரும் அறிமுகமில்லை. ரகு வின் தாய் பல வீடுகளுக்குச் சென்றுதான் வேலை செய்வார் வேலை செய்து வந்த வருமானத்தில் ரகுவை பாடசாலை அனுப்பிவைத்தார். ரகுவும் வீட்டு நிலமையையும், தாயின் உழைப்பையும் அவன் பிறந்தநாள் அன்று அதிக பணம் கொடுப்பார். ஆனால் அவன் பணத்தை அதிகமாக செலவலிப்பதில்லை அவனிற்கு 14ம் பிறந்தநாள் அன்று அவனிற்கு வள்மை போல அதிக பணம் கொடுத்தார். ரகு பணத்தை வாங்கிக் கொண்டு பாடசாலை சென்றான் அவன் பாடசாலை செல்லும் பொழுது. வீதியில் சில நபர்கள் கூடி நின்றனர் அவன் அங்கு சென்று பார்த்தான் அங்கு ஒரு பெரியவர் தலையில் குருதி ஒழுகக் கீழே விழுந்து கிடந்தார். அதைப் பார்த்த ரகு தனது கைக்-குட்டையை எடுத்து அப்பெரியவர் தலையில் கட்டினான். பின் அங்கு நின்ற முச்சக்கர வண்டி சாரதியிடம் இவர் எனது தாத்தா என்று கூறினான். அச்சாரதி விரைவாக முச்சக்கரவண்டியில் இருவரையும் ஏற்றிக்கொண்டு வைத்திய சாலைக்குச் சென்றான். வைத்தியசாலையை அடைந்ததும் அங்குள்ள வைத்தியரிடம் நடந்தவற்றை கூறினான். வைத்தியர் வேலையை விரைவாக்கினார். பின் ரகு பாடசாலை சென்றான். அங்கு ஆசிரியர் ஏன் இவ்வளவு தாமதம் என்று கேட்டார் அதற்கு ரகு நான் வீட்டில் எனது தாயிற்கு உதவிபுரிந்து விட்டு வருகின்றேன் எனறான். அதற்கு ஆசிரியர் தாய்க்கு உதவி செய்வது நன்று. ஆனால் பாடசாலைக்கு தாமதமாக வரக்கூடாது என்றார். ரகு பாடசாலை விட்டு வீடு திரும்பும் வேளையில் வைத்தியசாலைக்குச் சென்றான். பெரியவரின் உறவினருக்கு தகவல் தெரிவித்து விட்டு வீடு திரும்பிவிட்டான். மறுநாள் காலை ரகுவை பாடசாலைக்கு வழியனுப்பி வைத்துவிட்டு ரகுவின்தாய் வீடுதிரும்பினார். அங்கு சில நபர்கள் ரகுவின் தாய் நீங்களா என்று கேட்டனர். ஆம் என்றார் ரஞ்சனி, பின் வந்த அவர்கள் நடந்தவற்றை எடுத்துக்கூறினர். ரகுவின் தாய் பெருமைப்பட்டர். ரகு வீட்டிற்கு வந்தான் தாய் ரகுவினை பெற்றதற்கு பெருமை என்றார். இல்லை அம்மா நீங்கள் எனக்கு தாயாக இருக்கிறது எனக்கும் தாய்க்குலத்திற்கும் பெறுமை அம்மா ஒன்றும் புரியவில்லை என்றார். அம்மா நீங்கள் கணவரை இழந்தீர் பெற்றோரை இழந்தீர், சொந்த பந்தங்களை இழந்தீர் இனி இழக்க எமது உயிர் மட்டுமே உள்ளது. வேறு ஒரு சில தாய்மார்கள் இருக்கிறார்கள் அவர்களுக்கு மகனாக பிந்திருந்தால் என்னை ஆசிரமத்தில் விட்டுவிட்டு வேறு திருமணம் செய்திருப்பார்கள். இதனால் தான் நீங்கள் தாயாக அமைந்ததற்கு நான் பெருமைப்டுகின்றேன். என்றார் ரகுவின் தாய் ரகுவின் செயலை நினைத்து பெருமைப்பட்டுக் கொண்டார்.

அவனும் வாழ்க்கையில் முன்னேரிக் கொண்டு சென்றான்.

தொடரும்........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Written by :- S. Rajan Selvakumar,
Teacher,
V/Cheddikulam M.V.

## பயோ டெக்னோலொஜி

உயர்கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி மாணவ மாணவியருக்கு ஏராளமான கல்வி வாய்ப்புக்களை வழங்கிவருவது இன்றைய யதார்த்தம். இந்தச் சிறப்பான சூழலைப் பயன்படுத்திக் கொண்டு எதிர்காலத் தேவைக்கும் தமது திறனுக்கும் ஏற்ற பொருத்தமான படிப்புகளைத் தேர்வு செய்துகொள்ளும் அரிய வாய்ப்பு மாணவர்களுக்கு இன்று ஏற்பட்டுள்ளது.

வ/ செட்டிக்குளம் மகா வித்தியாலயத்தின் அதிபர் உயர்திரு செ.தர்மரத்தினம் அவர்களின் அயராத முயற்சியால் இன்று இப்பாடசாலைக்கு மஹிந்தோதய வேலைத் திட்டத்தின் கீழ் உயிரியல் தொழினுட்பத்திற்கான ஆய்வுகூட வசதிகள் உள்ளிட்ட அனைத்து வளங்களும் வாய்ப்புகளும் வந்து குவிந்தவண்ணம் இருக்கின்றன. இதற்காக, மாணவர்களும் இப் பாடசாலைச் சமூகமும் எமது பிரதேசமும் எமது அதிபருக்கு எப்போதும் நன்றியுடையவர்களாக இருக்கக் கடமைப்பட்டிருக்குறோம்.

மரபணுக்கள் தொடர்பான தொழினுட்பங்கள் பற்றிய ஆய்வுகளுக்காக உயிரியலில் அண்மைக் காலமாக வளர்ந்து கோலலோச்சும் புதிய துறையே இந்த பயோ டெக்னோலொஜி. இந்த நூற்றாண்டில் தகவல் தொழிநுட்பத்திற்கு, அதாவது ஐகெழசஅயவழைெ வுநஉாழெடழபல க்கு அடுத்தபடியாக வளர்ந்து வரும் முக்கிய பாடத் துறையாக இந்த பயோ டெக்னோலொஜி விளங்குகிறது.

இந்த பயோ டெக்னோலொஜியைப் படித்த ஆய்வாளர்களே ஆந்திராக்ஸ் நோய்க்கு எதிரான தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்திருக்கின்றனர். அதுபோல், எச். ஐ. வீ தொற்றுக்கான மருந்தாகட்டும், புற்று நோய்க்கு எதிரான மருந்தாகட்டும் - இவற்றிற்கான எதிர்கால சாத்தியங்கள் பயோ டெக்னேனாலொஜி துறை சார்ந்த ஆராய்ச்சியாளர்களின் கையிலேயே இருக்கிறது என்றால் அது மிகையில்லை.
பயோ டெக்னோலொஜின் மற்றொரு பரிமாணம். ஹியூமன் ஜினோம் புரொஜெகட் என்பதாகும். மனித உடலில் அடங்கியுள்ள மரபணுக்களையும் அதாவது பரம்பரை அலகுகளையும், அவற்றின் தனிப் பண்புகளையும் இனங்காணும் இந்த ஆய்வுகள் மூலம் தீராத நோய்களையும் ஆரம்பத்திலேயே கண்டறிந்து தடுத்துவிடமுடியும். மட்டுமல்ல, விவசாயம், மருந்துப் பொருட்கள், பதனீட்டு உணவுகள், புடவைத் தொழற்றுறை என்று இதன் பயன்பாடு விரிந்துகொண்டு செல்கிறது. எனவே, இதுகுறித்து படிப்புகள் உலகெங்கிலும் முக்கியத்துவம் பெற்று வருகின்றன. அதற்கு எமது நாடும் விதிவிலக்கல்ல. அந்த வகையில் செட்டிக்குளப் பிரதேசத்தில் வாழும் மாணவர்களும் தமது உயர்கல்வியை பயோ டெக்னோலொஜி துறையில் மேற்கொள்வதற்கான அரிய வாய்ப்பு இன்று ஏற்பட்டுள்ளது மிகவும் போற்றத்தக்க விடயமாகும்.

பயோ டெக்னோலொஜி படித்த மாணவர்கள் தமது உயர்கல்வியை முதுநிலைப் பட்டப் படிப்புகள் வரை தொடரமுடியும். அத்துடன், பயோ டெக்னோலொஜி படித்த மாணவர்களுக்கு பர்மசூட்டக்கல் நிறுவனங்கள், அதாவது மருந்துக் கொம்பனிகள், வேளாண் தயாரிப்பு நிறுவனங்கள், உணவு பதனீட்டு நிறுவனங்கள், பயோ டெக் ஆய்வு நிறுவனங்கள் போன்றவற்றில் சிறந்த வேலை வாய்ப்புகள் கிடைக்கும்.
படிப்புகளில் உயர்ந்து தாழ்ந்தது என்று எதுவும் இல்லை. சிறப்பான படிப்புகளுக்கு எப்போதுமே சிவப்புக் கம்பள வரவேற்புத்தான். சரியான திட்டமிடல். கடும் உழைப்பு, விடா முயற்சி, தன்னம்பிக்கை போன்றவை மாணவர்களாகிய நம்மை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்லும் படிக்கட்டுக்கள். வெற்றிப் படிக்கட்டுகள் இதோ. உங்கள் முன் காத்திருக்கின்றன. வெற்றிக் கொடி கட்டுங்கள்!
நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செட்டிக்குள பிரதேச மாணவர்களின் கல்வி வளர்ச்சியும் குடும்ப சமூகச்சூழல் தாக்கமும்

### அறிமுகம்

ஒரு பிள்ளையினுடைய கல்வி வளர்ச்சியிலே பல்வேறுபட்ட காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. இக்காரணிகளில் குடும்பமும் சமூகமும் முக்கியமானது. சமூகமானது தனிநபர்களால் உருவக்கப்பட்ட ஒரு பொருளாதார அரசியல் பண்பாட்டு முறை. இன்றைய நவீன காலகட்டத்தில் குடும்பங்களின் வாழ்வியல் இயங்கு நிலைகள் பல்வேறு வெளிநிலை சக்திகளாலும் புறக்காரணிகளாலும் தாக்கத்திற்கு உட்படுவதன் காரணமாக இயல்பான சமூக வாழ்வியல் பண்பாட்டு கோலங்கள் மாறுபட்டு செல்கின்ற போக்கு காணப்படுகின்றது. இந்த மாற்றங்கள் குறுகிய காலத்தில் சடுதியாக ஏற்படுவதுடன் மக்களது வாழ்க்கை பாணியிலும் பல்வேறு அம்சங்களிலும் மாறுதல்களை கொண்டு வருகின்றது. சமூகமும் குடும்பங்களும் இம்மாற்றங்களுக்கு ஏற்ப தம்மை பொருத்தமாக சீராக்கம் செய்ய வேண்டும். இத்தகய மாற்றங்கள் பிள்ளைகளின் உடல் உள வளர்ச்சி விருத்தியிலும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. இவை விரும்பத்தக்க சாதகமான மாற்றங்களையும சமூக இயல்புகளுக்கு பொருத்தமற்ற பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்துகின்றன. இதன் தொடச் தேர்ச்சியாக கல்வி வளர்ச்சியிலும் பாரிய பின்னடைவுகளை ஏற்படுகின்றன. குறிப்பாக கிராமப்புற பெற்றோரும் சமூகமும் இது தொடர்பாக கூடுதலான கவனம் செலுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது.

அண்மைக்காலங்களிலே மாணவரது நடத்தை சார்பான பிரச்சினைகள் ஒழுங்கு ஒழுக்க விதிகள் பிரச்சிகைக்குரிய விடயமாகவும் சமூகத்தின் எல்லா மட்டத்தினருக்கும் சவாலான ஒரு விடயமாகவும் காணப்படுகின்றது. விரைவாக வளர்ந்து வரும் உலக மயமாக்கல் சூழலிலே மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை. இம்மாற்றங்களை பொருத்தமான வகையில் தனிமனிதனதும் சமூகத்தினதும் வளர்ச்சி மேம்பாட்டிற்காக மாற்றிக்கொள்வதிலே தான் வெற்றி தங்கியுள்ளது. இந்த வகையிலே பிள்ளைகளினுடைய கல்வி வளர்ச்சியிலே முக்கிய பங்குதாராகிய குடும்பத்தினதும் சமூகத்தினதும் பங்களிப்பும் அதன் தாக்க விளைவுகளும் பற்றி இவ் ஆய்வு கட்டுரை அமைகின்றது.

### வீட்டுச்சூழலும் பிள்ளையும்

பிள்ளைகளின் முதலாவது கற்கும் சூழல் வீட்டிலேயே ஆரம்பிக்கின்றது. ஒரு பிள்ளையானது தாயின் கருவறையில் இருக்கும் போதே கற்க ஆரம்பித்துவிடுகின்றது. தந்தையின் முத்தத்திலும் தாயின் முழங்காலிலும் ஆரம்பிக்கின்றது பிள்ளையினுடைய கல்வி வளர்ச்சி. வீட்டு சூழலானது எல்லா பிள்ளைகளுக்கும் சமமானதாக அமைந்து காணப்படுவதில்லை. எனினும் கல்வியில் சம வாய்ப்புக்கள் கல்வி பரவலாக்கம் என்ற எண்ணக்கருக்கள் ஊடாக ஓரளவு ஈடுசெய்யும் வகையில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. உதாரணமாக இலவசக்கல்வி சீருடை மதிய உணவு என்பனவற்றைக்குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமப்புற பெற்றோர் பெரும்பாலும் விவசாயிகளாளவும் கூலித்தொழில் செய்வோராகவும், மட்டுமல்லாது பணிப்பெண்களாக வெளிநாடு செல்வோராகவும் காணப்படுகின்றனர். பிள்கைளின் வளர்ச்சி விருத்தி தொடர்பில் இது பாரிய தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. பெற்றோரை பிரிந்து வாழும் சூழலையும் பிள்ளைகள் மத்தியில் ஏற்படத்துகின்றது. அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத நிலையில் எத்தனையோ பிள்ளைகள் பாடசாலைக்கு வருகின்றனர். பிரச்சினைகளோடு பாடசாலைக்கு வருகின்ற பிள்ளை தன்னை கற்றலின் பால் ஆர்வத்துடன் ஈடுபடுத்திக்கொள்ள முடியாமல் பிரச்சினைக்குள்ளாகின்றது. பாடசாலையும் பாடசாலை ஒழுங்கு ஒழுக்க விதிகிளும் பிள்ளைக்கு சிக்கலானதாகவும் நெருக்கீடு உடையதாகவும் நோக்குகின்றது. முரண்பாடுகளை வளர்த்துக்கொள்கின்றது. கல்வி பின்னடைவை நாளடைவில் சந்திக்கின்றது. எனவே இது தொடர்பில் பெற்றோர் கூடுதலான கவனம் செலுத்த வேண்டும். பிள்ளை கற்கும் வயதில் சகல வசதிகளையும் தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டியது பெற்றோர் யாவரினதும் தலையாய கடமையும் பொறுப்பும் ஆகும். பாடசாலை நிர்வாகத்தினருடனும் ஆசிரயர்களுடனும் நல்ல இடைவினை தொடர்புகளை பேணுவதன் ஊடாக பெரும்பாலான பிரச்சினைகள்ளை குறைத்துக்கொள்ள முடியும்.

## பெற்றறோரது கல்வியறிவு மட்டமும் பிள்ளைகளின் கல்வி மீதான தாக்கமும.

கிராமப்புற பெற்றோர் பெரும்பாலும் கல்வியறிவு மட்டம் குறைந்தவர்களாகவே காணப்படுகின்றனர். தமது பிள்ளைகள் நிறைவான கல்வியை பெற்று நல்ல தொழில்வாய்ப்புக்களை பெறவேண்டும் என்பதற்காக கடுமையாக உழைத்து பிள்ளைக்கு தேவையான சகல வசதிகளையும் செய்து கொடுப்பதில் மாத்திரம் கருத்தாக இருக்கின்றனர். ஆனால் பிள்ளைகளை நெறிப்படுத்தும் வழிப்படுத்தும் ஆற்றல் அற்றவராக காணப்படுகின்றனர். இது வேறுபட்ட ஒரு வடிவில் பிள்ளையினுடைய கல்வி வளர்சியில் தாக்கம் செலுத்துகின்றது. தற்கால மாணவர்கள் பெற்றோரது பலவீனங்களை அறிவும் ஆற்றல் உடையவராக காணப்படுகின்றனர். குறிப்பாக சிரேஸ்ர இடைநிலை உயர்தர வகுப்பு மாணவர்கள் பெற்றோரது பலவீனங்களை தமக்கு சாதகமாக்கி தவறான நடவடிக்கைளில் ஈடுபட்டு பின்னர் அதனை நியாயப்படுத்தவும் முயல்கின்றனர். பிள்ளைகளின் தனியார் வகுப்புக்கள் சகபாடிகள் தொடர்பில் பெற்றோரும் சமூகமும் அக்கறை கொண்டவர்களாக செயற்படவேண்டும்.

## பாடசாலை தொடர்பான பெற்றோரது விழிப்புணர்வும் அக்கறையும்.

பாடசாலைக்கல்வியின் பயனாளிகள் பெற்றோர்கள். வாடிக்கையாளர் மாணவர்கள். மாணவர்கள் இன்றேல் பாடசாலைகள் இயங்கா. பாடசாலைகளின் இயங்கு சக்தி பெற்றோரினதும் மாணவர்களினதும் கைகளிலேயே தங்கியுள்ளது. ஆகவே பயனாளிகாகிய உங்களின் கைகளிலேயே பாடசாலையின் வினைத்திறன் மிக்க செயற்பாடும் விளைதிறன் மிக்க வெளியீடுகளும் தங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களின் ஆர்வத்திலும் ஈடுபாட்டிலுமே பிள்ளையின் வெற்றி தங்கியுள்ளது. பாடசாலையில் பிள்ளைகளை சேர்த்தலுடன் தங்களுடைய பொறுப்பு முடிவடைந்து விட்டதென பொரும்பாலான பெற்றோர். உங்களுடைய பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி தொடர்பில் நீங்களே அதிக அக்கறை செலுத்த வேண்டும்.விளைவுகள் தொடர்பில் நீங்களே கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். பாடசாலைகள் முறைமைகளின் அடிப்படையில் சட்டதிட்டங்கள் சுற்று நிருபங்களுக்கு அமைய தொழிற்படுவன. உங்களின் வலுவான தூண்டுதலிலேயே அர்ப்பணிப்புமிக்க முழுமையான செயற்பாட்டை பெற்றுக்கொள்ள முடியும். உங்கள் பிரதேசத்தை சேர்ந்த பாடசாலையின் அதிபரும் ஆசிரியரும் அடிக்கடி மாற்றத்துக்கு உட்படுவர். ஆனால் பெற்றோராகிய நீங்களும் சமூகமும் பாடசாலைக்கு நிரந்தரமானவர்கள். பாடசாலை உங்களது என்ற உணர்வை உங்கள் ஒவ்வொருவருள்ளும் கட்டியெழுப்பபட வேண்டும். இதுவே உங்களின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக அமையும்.

உங்களிடமிருந்து அறவிடப்படும் வரிப்பணத்திலேயே கல்விக்கான செலவுகளும் முதலீடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. பாடசாலை தொடர்பான உரிமை உங்களுடையது. நீங்கள் அனைவரும் எழுச்சி பெறும் போதே பாடசாலைகள் எழுச்சிபெறும் உங்கள் பிள்ளைகள் வளம் பெறுவர் உங்கள் கிராமம் வளர்ச்சியடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரபி நவதீசன்
வ/செட்டிக்குளம் ம.வி
(தரம் - 5)

## வாசிப்போம் அறிவுடையவராவோம்.

"வாசிப்பு மானுடர் தம் சுவாசிப்பாக, நேசிப்பாக அமைத்து விட்டால் அவர்கள் அறிவின் இமயத்தை சுலபமாகத் தொட்டு விடலாம்" என்பது உயர் உண்மை ஆகும்

வாசிப்பதனால் அறிவு நிலை உயர்கிறது என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும்
"வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகிறான்" என்ற கூற்றுங்கூட இந்த அடிப்படையி ல்தான் உருவானது.

வாசிக்கின்ற போது பல்வேறு விடயங்களையும் ஒருவன் அறிந்து கொள்ள முடிகிறது இதனால் பூரணத்துவமடைய முடிகிறது.
வாசிப்பு என்கின்ற போது எல்லாவற்றையும் வாசித்தல் என்பது பொருளல்ல எது நமக்குத் தேவை என்பதை உணர்ந்து அதனையே வாசிக்க வேண்டும் வள்ளுவர் கூட

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்கு தக."

என்கின்ற குறட்பாவிலே 'கற்பவை கற்பின்' என்று கூறுகின்றார். அதாவது கற்பவை என்கின்ற போது. எவற்றை கற்க வேண்டுமோ அவற்றைத் தெரிந்து தேர்ந்து கற்க வேண்டும் என்கின்ற பொருளிலேயே கற்பவை கற்றபின் என்று கூறுகின்றார். எனவே அறிவுதரக் கூடிய வாழ்க்கைக்குப் பயன் தரசககூடியவற்றையே வாசிக்க வேண்டும்

"நல்ல புத்தகம் நல்ல நண்பனுக்கு சமன்"

என்று கூறுவார்கள் உண்மைதான் எம்மேல் அக்கறை கொண்டு எம்மை நல்வழிப்படுத்தும் நல்ல நண்பன் போன்றே நல்ல நூல்களும் எம்மை நல்வழியே இட்டுச் செல்கின்றன.
வாசிப்பு என்கின்றபோது மேலோட்டமான வாசிப்பு கருத்தூன்றிய வாசிப்பு என்று வெவ்வேறு வகைகள் உண்டு பத்திரிகைகள், சஞ்சிகைகள் முதலானவற்றை வாசித்தல் மேலேட்டாமான வாசிப்பினுள் அடங்கும். மாணவர்களுக்கான கற்றலுக்கான வாசிப்பு ஏனைய அறவு வளர்ச்சிக்கான வாசிப்பு முதலானவை கருத்துன்றிய வாசிப்பாகும்.
வாசிக்கின்ற போது புலன்களை வெளிச்சிதற விடாது ஒரு நிலைப்படுத்தி வாசிக்க வேண்டும். அவ்வாறு வாசிக்கும் போது தான் அவை மனதில் இலகுவில் பதிந்து விடுகின்றன இவ்வாறு வாசிப்பதற்கு அமைதியான சூழல் தேவைப்படுகிறது. வெளி தொந்தரவுகள் இல்லாது அமைதியான சூழலில் ஆழமாக வாசிக்க வேண்டும் இதற்கு ஏற்ற இடமாக நூல்கள் காணப்படுக்கின்றன. நூலகம் அமைதியான சூழலாக இருப்பதோடு மட்டுமல்ல பல்வேறு நூல்களும் ஒருசேரக் குவிந்திருக்க கூடிய ஓரிடமாகவும் காணப்படுகிறது. பல்வேறு அறிஞர்களால் பல்வேறு படைப்பாளிகளால் வெவ்வேறு காலங்களில் எழுதப்பட பல்வேறு அறிஞர்களால் பல்வேறு படைப்பாளிகளால் வெவ்வேறு காலங்களில் எழுதப்பட்ட பல்வேறு விடயங்கள் சம்பந்தமான நூல்களும் ஓரிடத்தில் காணப்படக்கூடிய இடம் நூலகம் ஆகும். பல அறிஞர்கள் ஒன்றாக அமர்ந்திருந்து எமக்கு அறிவுப் போதனை செய்வது போன்று பல்வேறு நூல்களும் ஒருசேர அங்கே அமைந்திருக்கி ன்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பின் முக்கியத்துவம் கருதியே ஒக்டோபர் மாதம் முழுவதும் வாசிப்பு மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. மாணவர் மத்தியில் வாசிப்பின் முக்கியத்துவம் மேலோங்க வேண்டும் என்ற நோக்கில் பாடசாலைகள், பிரதேச நூலகங்கள், பிரதேச செயலகங்கள் போன்றவற்றில் வாசிப்பு மாதம் தொடர்பான பேச்சு, கவிதை. கட்டுரை போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்ட்டு ஊக்குவிக்கப்படுகின்றார்கள்.

பிள்ளைகளுக்கு சிறு வயது முதலே வாசிப்புப் பழக்கத்தை உருவாக்கி விட வேண்டும், ஆரம்பத்தில் சிறிய சிறிய கதைப் புத்தகங்களை வாசிக்க கொடுக்கலாம் பின்னர் படிப்படியாக அறிவுத் தேடல்களுக்கு ஏற்ப வாசிப்பதற்கு பழக்கப்பட்டு விடுவார்கள் பெற்றோர்கள் பிள்ளைகளின் பிறந்த நாளிற்கு அவர்களுக்கு நல்ல புத்தகங்களைப் பரிசாக கொடுக்கலாம் அதேபோல் மாணவர்ளும் தமது பிறந்த நாளுக்கு பாடசாலை நூலகத்திற்கு அல்லது தமது பிரதேச நூலகத்திற்கு நூல்களை அன்பளிப்பாக கொடுக்கலாம் இதனால் மாணவர்களிடம் நூல்கள் பற்றிய முக்கியத்துவம் உணரப்பட்டு வாசிப்பின் மீதான பற்று அதிகரிக்க வாய்ப்புண்டு.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்ததான வாசிப்பின் நிலை இன்று கேள்விக்குறியாக நிற்பதை பல்வேறு நிலைகளிலும் எம்மால் உணரமுடிகி-ன்றது. ஒரு விடயம் பற்றி எமக்கு தேவைப்படுகின்ற தென்றால் நூலகம் சென்று அவ்விடயம் பற்றி எந்த நூலில் இருக்கிறது என்பதை அறிந்து அது பற்றி வெவ்வேறு நூல்களிலும் வாசித்து தேவையான விடயங்களைப் பெற்று-க்கொள்ளும் நிலைமை முன்னர் இருந்தது. ஆனால் இந்த நிலைமை தற்போது தலைகீழாக மாறிவிட்டது இன்று ஒருவிடயம் தேவைப்படுகின்தெ-ன்றால் நூலகம் சென்று புத்தகம் தேடி விடயத்தை வாசித்து அறிவதை விடவும் இணையத்திற்குச் சென்று நேரடியாக இலகுவாக அதனை எடுத்துக் கொள்ள முடிகிறது. அவ்வாறு எடுத்து தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்கிறார்கள், இங்கே வாசிப்பு நிகழாது தேடல்நிகழாது அறிவு நிலை வீழ்ச்சி அடைகிறது. இது இன்று சிறுவர் பெரயவர் என்று வேறுபாடு இன்றி அனைவரிடமும் பழக்கமான ஒன்றாகி விட்டது.

இணையத்தளத்திலிருந்து பல நன்மைகளைப் பெறலாம். என்பது உண்மையே ஆயினும் அதன் ஆளுகைக்குள் முற்றாகி முடங்கி விட்டக்கூடாது தேவையானவற்றுக்கு மட்டும் இணையத்தினைப் பயன்படுத்-தலாம் அன்னப் பட்சியானது நீருடன் கலந்த பாலை வேறாக்கி அருந்துவது போல நாமும் தேவையான விடயங்கள் எவை என்பதை வேறுபடுத்தி அறிந்து தெரிந்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

வாசிப்பின் மேன்மையை அறிந்து எமது வாழ்ககைக்குத் தேவையானது என்பதை உணர்ந்து வாசிப்பின் மூலம் உயர்நிலையைப் பெறுவோம். வாசிப்பதனால் அறிவு நிலை அதிகரிக்கும் எனவே வாசிப்போம் அறிவுடையவராகுவோம் ஏனெனில்,

"அறிவுடையார் எல்லாமுடையார் அறிவிலார்
என்னுடைய ரேனு மிலார்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A.Aseena
Valavaithakulam
Cheddikulam.

## பாடசாலைக் கல்வி

மனித வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துள்ள ஓர் அம்சமாக கல்வி காணப்படுகின்றது. ஒரு சமூகத்தின் உயர்வைப் பிரதிபலிப்பதாக இருப்பது கல்வியாகும். அது சமுதாயத்தின் உயர்வையும் மேம்பாட்டையும் அளவிடும் பிரதான கருவியாகும். தனிமனிதன் மட்டுமன்றி சமுதாயத்தில் ஏனையவர்களும் தமது சமூக அந்தஸ்த்தை மேம்படுத்தும் பிரதான சாதனமாகக் கல்வி காணப்படுகின்றது.

கல்வி என்பதனை குறிக்கும் ஆங்கிலச் சொல்லான 'நுனரஉயவழைெ' எனும் சொல் இலத்தீன் மொழிச் சொல்லான 'நுனரஉயசந' என்ற சொல்லிலிருந்து தோன்றியதாகும். இச் சொல் முன்னர் 'வெளிக் கொணர்தல்' எனும் பொருள் கொள்ளப்பட்டாலும் இன்று 'வளர்த்தல்' எனப் பொருள் கொள்ளப்படுகிறது.

கல்வியானது முறைசார் கல்வி. முறைசாராக் கல்வி என இருவகைப்பாடுகளைக் கொண்டுள்ளது. முறைசார்க் கல்வி எனும் போது பாடசாலை மற்றும் நிறுவனம் சார் கல்வி நிலையங்களிலிருந்து பெறும் கல்வியாகும். முறைசாராக் கல்வி என்பது நிறுவனம் சார் பாரம்பரியம், வழக்காறு போன்றவைகளினால் வழங்கும் அமைப்புக்கள் மூலம் பெறும் கல்வியாகும்.

ஒரு சமுதாயம் மதித்துப் போற்றும் வாழ்க்கையின் நோக்கங்கள், குறிக்கோள்கள், ஆகியவற்றையும் வழி வழியாக வந்து தற்போது சமுதாயத்தில் பரவிக் காணப்படும். அறிவு, திறன்கள், மனப்பான்மைகள் போன்றவற்றையும் இன்றைய தலைமுறையினருக்கு அறிமுகம் செய்யும் ஒரு ஊடகமாக கல்வி காணப்படகின்றது.

கல்வியானது சமூக நடத்தை ஒழுங்குபடுத்துகின்றது. மேலும் பண்பாடு, பொருளாதாரம், அறிவியல். அரசியல் போன்றவற்றில் வரையறைகளை ஏற்படுததுவதற்கு கல்வி அவசியமாகும். கல்வியானது வெறுமனே அறிவை மட்டும் பெற்றுக் கொள்வது அல்ல. அது நன்னடத்தை, நல்ல மனோபாவம், நல்ல் பழக்க வழக்கங்ககளை பெற்றுத் தரக்கூயதாக அமைய வேண்டும். அதாவது கல்வியானது மனிதன் சமூகத்தில் சுய மதிப்புடன் வாழ்வதற்கு ஏற்ற சகல அம்சங்களையும் வழங்கக் கூடியதாக அமைய வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி என்பது பொதுவாக பாடசாலைகளில் உள்ள வகுப்பறைகளில் பெற்படுவது தான் கல்வி எனக் கொள்ளப்படுகின்றது. திட்டமிட்ட பாடவிதானங்கள், கணிப்பீடுகள், மற்றும் பரீட்சை சான்றிதழ் என்ற சின்ன வட்டத்துக்குள் கல்வி நோக்கப்படுவதும் உண்டு. 1998ல் தேசியக் கல்வி அமைச்சு மற்றும் தேசியக் கல்வி நிர்வாகம் என்பன அணைந்து வெளிட்ட புதிய "கல்விச் சீர்திருத்த வேலைத்திட்டம்" என்ற அறிக்கைளில் கல்வியினை வரைவிலக்கணப்படுத்தும் போது "நட்டைக் கட்டியெழுப்பும் கைங்கரியத்தில் தோள் கொடுத்து அர்ப்பணிப்புடன் நேர்மையாகவும் நாட்டுக்காகவும் செயற்படுவதற்கு வேண்டடிய அறிவையும், திறன்களையும், மனப்பாங்குகளையும் கல்வி முறையினூடாக மாணவ சமூகத்திற்கு வழங்குவதே கல்வியாகும்".

"மனிதன் தனது ஆயுள் முழுவதும் கற்றுக் கொண்டே இருக்கவேண்டும். கற்க மறுப்பவன் வழ மறுப்பவன் ஆகின்றான்." என்பது கல்வி பற்றிக் கூறப்படும் கருத்தாகும்.

சுவிஸ்லாந்தைச் சேர்ந்த ஜி.எச்.பெஸ்டலசி (J.S Pesteloosi) என்பவர் கல்வி பற்றி பின்வருமாறு கூறுகிறார். "சமூகத்தினை சீர்படுத்துவதுடன், கல்வி என்பது குழந்தையின் இயல்பான வளர்ச்சிக்கு உதவுவதாகும், உடல், உள்ளம், ஒழுக்கம் எல்லாக் கூறுகளின் வளர்ச்சியும் இதனுள் அடங்கும். அத்துடன் கல்வி கல்வி என்பதானது மனிதனது எல்லாத் திறன்களும், வன்மைகளும் இயல்பாகவும் படிப்படையாகவும் இசைந்து வளர்ச்சி பெறுவதாகும்.

"பொதுவாக கல்வி என்ற பதம் ஒரு பரம்பரையின் அனுபவங்களை இன்னொரு பரம்பனையினருக்குப் பரிவர்த்தனை செய்யும் ஒரு முயற்சியினைக் குறித்து நிற்கின்றது." அத்தோடு அரிஸ்டோட்டில் என்ற கிரேக்க அறிஞர், "மனிதனின் திறமையை குறிப்பாக அவனுடைய மனதை வளர்க்கின்ற ஒரு செயற்பாடு கல்வி எனவும் அதன் மூலம் அவரின் வீரிய உண்மை, அழகு போன்ற நற்குணங்களின் கற்பனைகள் யாவும் கல்வி." எனக் குறிப்பிட்டார்.

அமெரிக்க கல்வியளாலர் 'கோன்டூயி' என்பவர் "தான் பெற்றுள்ள அறிவினையும் ஆற்றலையும் இளறு பிறந்து வளர்ந்துள்ள குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்த மனித சமூகம் மேற்கொள்ளும் பல்வேறு செயல்களின் தொகுப்பு கல்வியாகும்."

கல்வி பற்றி ஒக்ஸ்போர்ட் (Oxford) கலைக்களஞ்சியம் குறிப்பிடும் போது "புதிய சந்ததிகளுக்கு ஓர் குறிப்பட்ட சமூக வரலாற்று அனுபவங்களைக் கடத்தும் ஊடகமாவும் தனி நார் ஒருவரை வளர்த்து எடுப்பதில் செல்வாக்குச் செலுததும் முறைசார் நிறுவனமாகவும் அவரது சமூக வாழ்விற்கு உற்பத்திச் செயற்பாடுகளில் அவரை ஈடுபடுத்துவதற்குமான செயற்பாடாகவும் கல்வி காணப்படுகிறது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோன் மில்டர் (John Mildon) என்ற அறிஞர், கல்வி பற்றி கூறும் போது "போரிலும் சமாதானத்திலும், தனிப்பட்ட முறையிலும், பொதுவாகவும், நியாயமாகவும் உன்னதமாகவும் சகல காரியங்களிலும் செயற்படக் கூடிய பூரண மனிதனை உருவாக்குவதே கல்வி" என்று கூறினார். ஜி. எப். ஹேபர்ட் (J.F. Herbart) எனும் அறிஞர். "கல்வியின் இறுதி நோக்கம் நல்லொழுக்கம் பெறுவதாகும். ஆசிரியர்கள் அறப்பண்புகளை மாணவர்களிடம் வளர்ப்பதே கல்வியின் இறுதி நோக்கம்."

கல்வி என்பது மனிதனுக்கு தேவையான ஒன்றாகவும், அத்தேவை-களை நிறைவு செய்யும் வகையில் சமூகத்தில் சமூக, பொருளாதார ரீதியான வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் ஒரு அமைப்பாகவும் உள்ளது. ஒரு தலைமுறையில் கற்ற கல்வியின் மூலம் பெற்றுக் கொண்ட பண்புகள், குணநலலன்கள், திறமைகள் முதலியவை அடுத்த தலைமுறைக்கும் இன்ற-ியமையாத ஒன்றாக காணப்படுகிறது இக்ல்வியே தலைமுறை தலைமுறையாக பண்பாடு வளர்ச்சியடைய காரணமாக அமைகின்றது. கல்வி வளர்ச்சிக்கும் நாகரீக முன்னேற்றத்திற்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. நாகரிகத்தின் அம்சங்களான நீதி, அமைதி, அறிவியல், தொழில் நுட்பம் ஆகியவற்றை பெற்றுக் கொள்வதற்கான முக்கிய கருவியாக கல்வி காணப்படுகின்றது. இத்தகைய கல்வியால் தான் சமுதாயத்தில் மாற்றத்தை கொண்டு வர முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவனேந்திரபிள்ளை டிலக்ஷன்
தரம் 6C
வ/செட்டிக்குளம் ம.வி.

## சிந்தனைத் துளிகள்

வணங்கத்தக்கவர்கள் - தாயும், தந்தையும்
வந்தால் போகாதது - புகழ், பழி
போனால் வராது - மானம், உயர்வு
தானாக வருவது- இளமை, முதுமை
நம்முடன் வருவது - பாவம், புண்ணியம்
அடக்க முடியாதது- ஆசை, துக்கம்
தவிர்க்க முடியாதது - பசி, தாகம்
பிரிக்க முடியாதது - பந்தம், பாசம்
அழிவைத் தருவது- பொறாமை, கோபம்
வருவதும், போவதும்- இன்பம், துன்பம்
எல்லோருக்கும் சமமானது - இறப்பு, பிறப்பு
கீழ்த்தரமான விடயம்- பொறாமை
நம்பக்கூடாதது- வதந்தி
செய்ய வேண்டியது - உதவி
செய்யக் கூடாதது - தீங்குகள்
உயர்வுக்கு வழி - உண்மை, உழைப்பு
கொடிய நோய்- பேராசை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந. ஷாலினி,
தரம் 9C
வ/ செட்டிகுளம் ம.வி

## பொன் மொழிகள்

☒ கல்வியின் வேர்களோ கசப்பானவை ஆனால் கனிகளோ இனிப்பானது. (அரிஸ்டோட்டில்).

☒ கண்பார்வை அற்றவன் குருடன் அல்ல தன் குற்றங்களை உணராதவனே குருடன். (காந்திஜி)

☒ தடம் பார்த்து நடப்பவன் மனிதன், தடம் பதித்து நடப்பவன் தான் மாமனிதன். (பிடேல் காஸ்ட்டோ).

☒ மெதுவாகப் பேசு, அது உன் இரகசியங்களைப் பாதுகாக்கும், நல்ல எண்ணத்தோடு இரு, அது நடத்தையைப் பாதுகாக்கும். (வள்ளலார்)

☒ கனவு காணுங்கள் ஆனால் கனவு என்பது நீ தூக்கத்தில் காண்பது அல்ல, உன்னை தூங்க விடாமல் பண்ணுவது எதுவோ அதுவே இலட்சியக் கனவு. (அப்துல் கலாம்)

☒ இந்த உலகமே உன்னைத் திரும்பிப்பார்க்க வேண்டுமென்றால் நீ யாரையும் திரும்பிப் பார்க்காதே (ஹிட்லர்)

☒ உழைப்பே மூலதனம் உழைப்பின்றி மூலதனம் இயங்க முடியாது. (கார்ல் மார்க்ஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஸ்ரி குணராஜா
பிரதம முகாமையாளர்
துரிதசேவை நிலையம்
பிரதேசசெயலகம்
செட்டிக்குளம்.

**படித்ததும் பதிந்ததும்**

இது ஏற்கனவே நீங்கள் அறிந்த உண்மை. ஆனால்
ஏற்கனவே அனுபவித்த உண்மையா?

தவறை தவறென்று பார்க்க தவறும் போதுதான்
தவறற்றதை தவறென்று எண்ணி தவறிப்போகும்.

இன்று நீ விரட்ட மறுக்கும் தவறுகளை நாளை நீ
விரட்ட முயன்றாலும் விலகிப்போகாது.

இன்று உன் தவறுகளை – நீ சாதாரணமாக நினைத்தால் நாளை
அவைகளை பிறர் பெரிதுபடுத்த வழி வகுப்பாய்.

பிறர் தவறை பார்ப்பது தவறல்ல – ஆனால் உன்
தவறை மறைத்துக் கொண்டு பார்ப்பதுதான் தவறு.

தவறுகளை திருத்திக் கொள்பவன் சீர் திருந்துகிறான்
தவறுகளை நியாயப்படுத்துகிறவன் சீரழிகிறான்.

தவறை பிறரிடன் காணும்போதெல்லாம் - அது போன்ற
தவறுகள் உன்னிடம் பிறர் காணாதிருக்க விழிப்பாய்யிரு.

தவறை திருத்திக் கொள்ளாதவன் தன்னை நாசமாக்குகிறான்.
தவறுகளை நியாயப்படுத்துகிறவன் பிறரையும் நாசமாக்குகிறான்.

தவறுகளை கண்டு கொள்ளாதவனிடம் கவனமாயிரு.
கண்டடித்து உணர்த்துகிறவனுக்கோ கடனாளியாயிரு.

நல்ல கருத்தை பகைவன் சொன்னாலும் ஏற்றுக்கொள்
தவறான கருத்தை நண்பன் சொன்னாலும் நிராகரித்து விடு.

பிறரின் தவறான செயல்கள் நம்மை பலவீனப்படுத்தியிருக்கலாம்
ஆனால் அதைக்குறித்த கசப்புக்கள் நம்மை பழுதடையச் செய்து விடும்.

தவறை உணர்வது நேர்மை, அதனை
சரி செய்ய முன் வருவதுதான் விவேகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறை ஒத்துக்கொள்ளுகிறவனின் மனம் பக்குவமடைகிறது.
தவறை மறைக்கிறவனின் மனம் பழுதடைகிறது.

தவறைச் சுட்டிக் காட்டுகிறவனுக்கு நீ விரோதியாய் இருக்கலாம்
ஆனாலும் அவனே நல்ல நண்பன் என்பதை அறியும் நாள் வரும்

மேலானவைகளை மதிக்க தவறும் போதெல்லாம்
கீழானவைகள் நம் மரியாதையை கெடுக்கின்றன.

உண்மைகளினால் உன்னை மாற்றிக் கொண்டேயிரு. இல்லையேல்
பொய்கள் உன்னை ஏமாற்றி கொண்டே இருக்கும்.

பிறரிடம் நீ கண்ட ஏமாற்றங்கள் எல்லாம் உன் மூலம்
பிறர் ஏமாற்றம் அடையாமல் இருக்க உதவட்டும்.

நல்ல சிந்தகனைகளுக்கு நெருங்கிய நண்பனாயிரு.
தீய சிந்தனைகள் உன்னை விரோதித்து விலகிப் போகும்.

பாடுகளின் பாதையில் நாம் கற்ற பாடங்களே
பிறர் வெற்றி பெற நாம் கொடுக்கும் ஆயுதங்கள்.

நல்ல கருத்தை பகைவன் சொன்னாலும் ஏற்றுக்கொள்
தவறான கருத்தை நண்பன் சொன்னாலும் நிராகரித்து விடு.

பிறரின் தவறான செயல்கள் நம்மை பலவீனப்படுத்தியிருக்கலாம் ஆனால்
அதைக்குறித்த கசப்புக்கள் நம்மை பழுதடையச் செய்து விடும்.

சந்தர்ப்பங்கள் மனிதனை மாற்றிவிடுவதில்லை ஆனால்
அவனை யார் என்று காட்டி கொடுத்து விடும்

நீ இருக்கும் இடம் அல்ல உன்னிடம் இருக்கும் இயல்பு தான் நீ
உயர்ந்தவனா வாழ்ந்தவனா என்பதை உண்மையில் காட்டும்.

நீ இருக்கும் இடம் தேடி தீயவை வரும்.
நல்லது இருக்கும் இடம் தேடி நீ தான் செல்லவேண்டும்.

எப்படி வாழ வேண்டும் என்பதை உணராததால்தான்
ஏன்தான் வாழ்கிறோம் என்ற சலிப்பு வருகிறது.

எதிர்காலம் எப்படி இருக்கும் என்று நீ அறிய விரும்பினால்
நிகழ்கால்தில் நீ எப்படி இருக்கிறாய் என்பதை கண்டுபிடி.

அஸ்தமனங்களை கண்டு அழுது கொண்டு இராதே இன்னொரு
உதயத்தை நோக்கி உற்காகமாயிரு.

அவசரப்பட்டு எதையும் புறக்கணியாதே.
ஆத்திரப்பட்டு எதையும் இழந்து விடாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிய முறையில் உன்னை நீ புரிந்து கொண்டால் பிறர் உன்னை
புரிந்து கொள்ளவில்லை என கலங்கமாட்டாய்.

பரீட்சைகள் உன்னை அழித்துவிடாது. ஆனால்
உன்னை யார் என்று அடையாளம் காட்டி விடும்.

உன் வார்த்தைகளில் உன்னை நீ மறைத்தாலும்
என் செயல்கள் உன்னை யார் என்று காட்டிவிடும்.

கோபம் அவசியமான உணர்ச்சி ஆனால் அது
உன்னை வசப்படத்தி விடாமல் இருக்க கவனமாயிரு.

க்'டங்களை நீயாக தேடாதே
வந்து விட்ட க்'டங்களை கண்டு விலகியும் ஓடாதே. -

அக்கினியை காணாத பொன் அழகு பெறாது.
சோதனைகளை காணாத வாழ்வும் சிறப்பு பெறாது.

ஒருவன் எத்தனை முறை விழுந்தான் என்பதை அல்ல
அவன் எத்தனை முறை எழுந்தான் என்பதைப் பார்.

உயர்ந்த எண்ணங்களால் உள்ளத்தை நிரப்புவதே
தாழ்ந்த எண்ணங்களை தடுக்கும் வழி.

திருத்த வேண்டிய தேவையை உணர்ந்து கொண்டவனுக்கு
திருத்துவதற்குரிய வழி தெரியாமல் போவதில்லை

மனச்சாட்சிக்கு விரோதமாக செயல்படுகிறவன்
தன் மன அமைதிக்கு கல்லறை கட்டுகிறான்

பிறரிடம் இல்லாத நற்குணங்கள் உன்னிடம்
இருக்க வேண்டிய நற்குணங்களை நினைப்பூட்டட்டும்.

உண்மையற்றவனை உயர்த்தி மதிக்கும் போதெல்லாம்
உண்மையை தாழ்த்தி மதிக்கிறோம் என்பது பொருள்.

உண்மையை மறைப்பதால் சில நாள் இலாபமும்
நெடு நாள் ந'டமும் உண்டாகும்.

மனித அன்பின் மாயையை கண்டு கசக்கும் போதுதான்
இறைவனுடைய அன்பின் இனிமை தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தோசத்தை நீ தேடிச் சென்றால் அது தூரமாகும்
இறைவனைத் தேடிச் சென்றாலோ அது உன் அருகே வரும்.

கடவுளால் வந்த உயர்வுகள் உனக்கு அலங்காரத்தை தரும்.
நீ உருவாக்கிய உயர்வுகளோ அகங்காரத்தைத் தரும்.

இறைவன் உன்னிடம் இருக்கிறார் என்பதை விட
அவர் உன்னிடம் என்ன செய்கிறார் என்பதே முக்கியம்

நாம் என்ன செய்கிறோம் என்பதை உலகம் பார்க்கிறது.
நாம் எப்படி இருக்கிறோம் என்பதை இறைவன் பார்க்கிறார்.

நல்ல செயல்களால் உலகத்தை கவரலாம்
நல்ல குணங்களால் தான் இறைவனைக் கவர முடியும்.

இறைவனை உலகிற்கு காண்பிக்க முடியாது
ஆனால் உனக்குள் இறைவனின் செயலை

உலகிற்கு காண்பிக்க முடியும்
உதாரணமாக தேவையில் உள்ள ஒருவருக்கு

நாம் வலியச் சென்று உதவும் போது
கடவுள் போல் வந்து உதவி செய்தீர்கள்

என்று சொல்லக் கேட்கிறோமே
இதை விட வேறு சாட்சிகள் தேவையில்லை.

ஈற்றில் ஒரு கருத்து

நல்ல கருத்துகளையார் சொன்னது என்பது முக்கியமில்லை
அவர் சொன்ன கருத்து உனக்கு நல்லதா என்று மட்டும் பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செட்டிகுளத்தின் சுற்றுலா மையங்களும் சான்றுகளும்




### கல்லாறு சுற்றுலா மையம்

மதவாச்சி மன்னார் A-14 வீதியில் நீண்ட காலமாக மக்கள் இந்த பாலத்துடன் கூடிய ஆற்றில் குளிப்பதற்காகவும், பொழுது போக்கிற்காகவும் பயன்படுத்துகின்றனர். இதனால் கடந்த ஆண்டு வடமாகாண முதலமைச்சு நிதி மூலம் சுற்றுலா மையம் அமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ளது

### கல்லாறு பாலம்

கல்லாற்று பாலம் 1875இல் கட்டப்பட்டு வேலுப்பிள்ளை முதலியார் என்பவரால் திறந்துவைக்கப்பட்டது. என்பதற்கான சான்று





### வெளவாலை தீர்த்தக்கேணி

வெங்கலச்செட்டிகுளத்தின் ஆரம்ப மையமாக வீரநாராயணன் செட்டி என்பவரால் அமைக்கப்பட்டது. வற்றாத நீர் நிலையாக இன்றும் உள்ளது. இதனோடு அண்டியதாக சந்திரசேகர ஈச்சரம் அமைந்துள்ளது. இந்தக் கேணியில் ஆடிஅமாவாசை தினத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடுவர். A-14 வீதியில் முகத்தான்குளம் அணைக்கட்டு ஊடாக சுமார் 8 Km தூரத்தில் இக்கேணி உள்ளது.

### தேக்கம்

புராதன காலத்தில் கல்லணைவு மூலம் நீர் தேக்கப்பட்ட இடம். மக்கள் இயற்கை வளத்தின் நடுவே அமைந்துள்ள இந்த நீர் நிலையில் நீராடவும் பொழுது போக்கிற்காகவும் தற்காலத்தில் ஒன்று கூடுகிறனர்.



All in One Printers 84, Bus stand complex, Vavuniya 0779048...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org